Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 12/00
දිනමුරසු වාරමලර්
ஏப்.04-10,1999

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 303

## மாகாணசபைத் தேர்தல் களம்

## வெற்றி யாருக்கு?



## புலிகளின் கையில் புதிய ஆயுதம்



## ரஜினியின் நாயகி

## ஒரு நடிகையின் கதை

# முரசம்

## அம்புலிமாமா கதை

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

யாழ் குடாநாட்டு
காணி சுவீகரிப்பை
நிறுத்துமாறு
ஜனாதிபதி உத்தரவிட்டதாக
செய்திகள் வெளியாகின!

இச் செய்திகள்
பலத்த சந்தேகத்தையே
ஏற்படுத்துகின்றன!

வழக்கம்போல
இவ்விவகாரத்திலும்
ஐ.தே.கட்சிமீது
பழிபோட்டு தப்பிக்கும்
தந்திரம் கையாளப்பட்டுள்ளது!

இத் தந்திரமானது-
அரசின் இதயசுத்தி
பற்றிய சந்தேகத்தை
ஏற்படுத்துவதாக உள்ளது!

குறிப்பிட்ட செய்தியை
வெளியிட்ட பத்திரிகைகளும்,
அச்செய்தியால்
நிம்மதியடைந்த
தமிழ்க் கட்சிகளும்
பின்னணிகள், உள்நோக்கம்
பற்றி சிறிதும்
அக்கறை காட்டவில்லை!

1987ல்
காமினி திசநாயக்காவினால்
கொண்டு வரப்பட்ட திட்டம் என்று
திரும்பத் திரும்ப கூறப்பட்டது!

1987ம் ஆண்டின் பின்னர்
ஏறக்குறைய 7 வருடங்கள்
ஐ.தே.கட்சி
பதவியில் இருந்துள்ளது!

அந்த 7 வருடங்களில்
சுவீகரிப்புத் திட்டங்கள்
மேற்கொள்ளப்படவில்லை!

பன்னிரண்டு வருடங்களின்
பின்னர் தற்போதுதான்
சுவீகரிப்பு முயற்சி
முடுக்கிவிடப்பட்டுள்ளது!

அதுமட்டுமல்ல,
குறிப்பிட்ட காணி சுவீகரிப்புக்கு
சில மாதங்களுக்கு முன்னர்
இன்றைய அரசால்தான்
நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது!

இன்றைய அபகரிப்பு
திட்டத்தை நியாயப்படுத்த
பன்னிரண்டு வருடங்களுக்கு
முற்பட்ட திட்டத்தை
தூசி தட்டி எடுத்தது
யார்?

அரசுக்கோ, ஜனாதிபதிக்கோ
தெரியாத- இனம் தெரியாத
கரம் ஒன்றுதான்
தூசு தட்டி எடுத்ததென்று
கதை கூறப்போகிறார்களா?

இப்படியான
'அம்புலிமாமா' கதைகளுக்கும்
'ஆமாம்' போட
தமிழ்க் கட்சிகள்
தயாராகவே உள்ளன!

அரசுக்கு இவ்விடயம்
ஏதும் தெரியாது என்றால்,
நாடாளுமன்றத்தில்
அமைச்சர் ரத்வத்தை
பதிலளிக்காது நழுவியது ஏன்?

டக்ளஸ் தேவானந்த பா.உ.
அவர்களுக்கு தனிப்பட்ட
குறிப்பொன்று
11.03.99 இல்
அமைச்சர் ரத்வத்தையால்
வழங்கப்பட்டிருக்கிறது!

அக் குறிப்பில்
புதிதாக திட்டம் எதுவும்
இல்லை எனவும்,
ஏற்கனவே முடிவான திட்டமே
அமுல்படுத்தப்பட உள்ளதாகவும்
தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், 25.03.99ல்
பத்திரிகைச் செய்திகளில்-
அரசுக்கோ, ஜனாதிபதிக்கோ
அத் திட்டம் பற்றியே
தெரியாதது போலவும்,
அதுபற்றி விசாரிப்பதாகவும்
சித்தரிக்கப்பட்டிருந்தன.

மொத்தத்தில் எதுவும்
நம்பும்படியாக இல்லை!

ஐந்து மாகாண சபைத் தேர்தலில்
தமிழ் பேசும் வாக்காளர்களை
மேற்படி விவகாரம்-
தம்மிடமிருந்து தனிமைப்படுத்தும்
என்பதாலேயே அரசு
நல்ல பிள்ளையாக
செய்திகளை கசியவிட்டுள்ளது!

இந்த விடயம்
வெளியே வந்திருக்காதுவிட்டால்,
காதும் காதும் வைத்தாற்போல
காணி அபகரிப்பு
கச்சிதமாக நடந்தேறியிருக்கும்!

தேர்தல் நேரத்தில் பிரச்சனை
பூதாகரமாகியதால்
வழக்கம்போல வாக்குறுதி
வழங்கப்பட்டுள்ளது!

1987ல் செய்யப்பட்ட
கெஸட் பிரகடனம்தான்
சுவீகரிப்புக்குக் காரணம் எனில்,
அதனை இரத்துச் செய்து
புதிய கெஸட் வெளியிட
அரசு ஏன் முன்வரவில்லை!

காணி சுவீகரிப்புக்காக
சொந்த இடங்களில்
குடியேறாது தடுக்கப்பட்டுள்ள
தமிழ் மக்களை
அப்பகுதிகளுக்குச் செல்ல
அரசு அனுமதிக்குமா?

இன்று ஒத்திப்போட்டு விட்டு
எதிர்காலத்தில் மறுபடி
தோதான நேரத்தில் தொடலாம்;
அப்போது குரல் எழுப்பக்கூட
ஆள் இல்லாது போகலாம்,
என்றுகூடக் கருதக்கூடுமல்லவா?

மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## கல்லும் கடவுளும்

மண்ணையும் விண்ணையும் காற்றையும் மழையையும் நெருப்பையும் தெய்வங்களாகக் கருதி வழிபடுவதில் என்ன பலன்? மண்ணோ- கல்லோ கடவுளாகிவிட முடியுமா?

இன்றைய இளைஞர்கள் மத்தியில் எழும் நியாயமான சந்தேகம்தான்! இந்த ஐந்தும் இயற்கையின் பல்வேறு தோற்றங்கள். இவை ஒன்றோடு மற்றொன்று இணைந்து தான் இவ்வுலகம் உண்டாகியிருக்கிறது. ஒன்றுடன் ஒன்று இணையும் பரிமாணத்தின் அளவினைக் கொண்டுதான் இவ்வுலகிலுள்ள அனைத்துப் பொருட்களும் உருப்பெற்றிருக்கின்றன. ஏன்-எமது இந்த உடலிலும் கூட இந்த ஐந்தும் தான் பின்னிப் பிணைந்திருக்கின்றன.



இந்த உண்மையை உணர்ந்தவர்கள் எமது முன்னோர்கள். அவர்கள் இயற்கையையே இறைவனாகக் கருதி வழிபட்டார்கள். எடுத்துக் காட்டாக ஒரு கருங்கல்லை எடுத்துக் கொள்ளுவோம். ஒரே கல்லில் கலைஞன் ஒருவன் கடவுளின் சிலையை வடிக்கிறான். அந்தச் சிலை ஆலயத்தின் மூலஸ்தானத்தில் அமர்ந்து ஆண்டாண்டுகாலமாக ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு ஆறுதலளிக்கிறது.

மற்றொரு கலைஞனின் கையில் பட்ட அதே கல்லின் மற்றொரு பகுதி அழகிய பெண்ணின் வடிவமாகிறது. பிறிதொரு துண்டு நமது வீட்டின் படிக்கட்டாகவோ அல்லது அடுப்படியின் அம்மி-குளவியாக மாறுகிறது. ஆகமொத்தத்தில் இயற்கையின் ஓரங்கமான கருங்கல், பல்வேறு உருவங்களில் பல்வேறு பயன்களைத் தருகிறது. கடவுள் சிலையைக் கல் என்று நினைத்தால், அது வெறுங்கல்தான். கடவுளின் சக்தி-கல்லாலான கடவுளின் உருவத்தில் பொதிந்துள்ளது என்று நினைத்தால்-அது நிச்சயமாகக் கடவுள்தான்.

கடவுளின் சக்தி இந்தப் பிரபஞ்சத்தின் எல்லாவற்றிலும் பொதிந்திருக்கிறது. அதனை நாம் எவ்வாறு விரும்புகிறோமோ அவ்வாறே அடைய முடியும்.

சைவம் காட்டும் நெறியின் உட்பொருள் இதுவேதான்.

ஞானேந்திரன்.

## சுவர்க்கம் யாருக்கு?

ஒரு முறை இப்னு ஸக்கி (ரஹ்) அவர்கள் மரண சமயத்தில் தன் மகனை அழைத்து, "மகனே நான் மரணித்த பின் என்னை நல்லடக்கம் செய்துவிட்டு எனது கப்ரின் (மண்ணறை) அருகில் நின்று கலிமாவை உரக்க சப்தமிட்டு உரைத்துக்கொண்டிரு. அதைக் கேட்டு என்னருகில் வரும் மலக்குகளிடம் அந்தக் கலிமாவை உரைக்க ஏதுவாகும்!" என்றார்கள். அவர் மகனும் அவ்வாறே செய்து முடித்தார். சில நாட்களுக்குப் பின் அப்பெரியார் மகனின் கனவில் தோன்றிய போது மகன் தந்தையிடம் "தந்தையே தங்களை இறைவன் எப்படி நடத்தினான்? எவ்விதம் தங்களிடம் நடந்துகொண்டான்?" என்று கேட்டார்.

"மகனே! நான் அறுபது ஆண்டுகள் தொடர்ந்து இறை வணக்கம் புரிந்தேன்; அதையும் இறைவன் ஏற்கவில்லை; அறுபது முறை ஹஜ் செய்துள்ளேன்; அதையும் ஏற்கவில்லை; அறுபது இலட்சம் தீனார்கள் இறைவழியில் செலவு செய்தேன்; அதையும் ஏற்கவில்லை. எனவே நான் நரகவாதிதான் என எண்ணி, கதிகலங்கி நின்றபோது இறைவன், "தெருவில் கிடந்த ஒரு முள்ளை எடுத்து ஓரத்தில் போட்டதன் காரணமாக உனக்கு சுவர்க்கம் தருகிறேன்!" என்றான் எனக் கூறிவிட்டு மறைந்தார்கள். மனிதர்களே! புரிகிறதா? தெருவில் கிடக்கும் கல்லையும், முள்ளையும் எடுத்து ஓரமாகப் போடுவதும் ஒரு தர்மமாகும்.

தொகுப்பு:-வை.எம். தாஹிர்கரீம், கல்முனை-06.

## கவிதைப் போட்டி இல.300

### பரிசுக்குரிய கவிதை

#### வந்தது ரணகோஷ!

தினமுரசில் குந்திக் கொண்டு
திரிபோசா வருமென்றா
சிரிக்கின்றாய் குழந்தாய் நீ...?
வந்தது பார் ரணகோஷ...
எழுந்தோடு முரசோடு!

பரந்தனூர் சி.சுரேஷ்-மல்லாவி.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

#### நாமும்தான்...!

முத்தெடுக்க-
முரசுக்குள்;
மூழ்கிப்போவது...
நீங்கள்-
மட்டும்தானா?
அட;
நாமுந்தான்!

'பூநோனா' பஹ்மிதா-
வாஹிட், பதுளை.



#### தேன்சுவை!

கடலுக்குள்
முத்து:- நெற்
கதிருக்குள்
அரிசி
முரசுக்குள்
பல்சுவை!

மு.பெ.ஜெயராஜ்-ஹொப்டன்.

#### முரசு

துப்பாக்கிச் சூழலிலும்
துணிச்சலுடன் நடைபோட்டு-
தப்பாமற் செய்திகளைத்
தனிச் சுவையாய் தந்து வரும்-
பத்திரிகை எது என்றால்....
பாலகரும் முரசென்பர்!

ரேணுகா நிபாய்தீன், ஏறாவூர்-02.

#### சுவையோ சுவை

முரசு முன்னூறு முத்தாம்
ரசிக ரசிகைகள் ரகரகமாம்
சுவையோ சுவை சுகமாம்.

ஞா.மனோரூபன்-'மனோரகம்',
வாழைச்சேனை.

#### தினந்தோறும்

தினந்தோறும் போர்முரசால்
திக்கற்ற இவர்கட்கு
தினமுரசை வட்டமிட்டால்
முகங்களுக்குள் சந்தோஷம்!

தெ.லோஜனா- கொழும்பு-15.

#### நீயே உனக்கு நிகர்!

வயதாறு முடிவதற்குள்
முன்னூறு இதழ் பிரசவித்து,
வயதொத்த பாப்பாவை
வண்ணத்தால் வசமாக்கி,
நாற்றிசையும் மணம் பரப்பி,
சொற் சுவையால் கவர்ந்து
நாட்டின் நடப்பறிய
நாட்டம் கொண்டோரின்
நம்பிக்கைக்கு பாத்திரமாய்
நாணயமாய் விளங்கும்
தினமுரசே நீயே உனக்கு நிகர்!

வன்னிமதி -வவுனியா.

#### முரசுக் குவியல்!

முத்தான கருத்ததனால்
முன்னூறை நீ விதைத்து
முன்னேறி மிளிர்கின்றாய்!
சொத்தையே அற்ற உந்தன்
சுதந்திரச் செய்தியதால்!
சொத்தாக நாம் மதித்து
சேர்த்தவை தான் அத்தனையும்!!

தர்ஷிக்கா கனகசிங்கம்- கல்லடி,
மட்டக்களப்பு.

#### என்றும் வாழிய நீ!

தினமுரசு... தினமுரசு... தினமுரசு...!
தினங்கள் அனைத்தும் உன் அரசு!
முன்னூறு வாரத்து உன் சிறப்பை
சின்ன வரிக் கவிதையில் என்னென்று நான்கூற?
என்ன இருந்தாலும் இன்னமுதத் தேன் முரசே!
என்னாளும் வாழிய நீ இனிதான நடைபோட்டு!

செல்வி மதுரா யோகேந்திரன்-திருக்கோவில்.

#### எங்கும் நீயே!

தமிழ் முரசு முன்னூறில்
தங்கமகள் ஒய்யாரம்
தமிழ் வாழும் மண்ணெல்லாம்
தினமுரசே சஞ்சாரம்!

ச.மகாலிங்கம்- வெலிமடை.

#### அன்னைக்கு அருள்வாய்!

முன்னூறு வந்ததென்று
முகமெல்லாம் மகிழ்ச்சி பொங்க
கண்ணூறு கழித்திட்டார்
என் அன்னை-முரசில்
பன்னூறு பாட்டெழுதி
பரிசு பெற வேண்டுமென்று
எண்ணுகின்றார்
இறையே அருள்வாய்!

மு.தானிஷ் அ.்.ப்றிடி-விஹாரை வீதி,
திருகோணமலை.

#### வரந்தா!

இந்தக் குழந்தை
இனிதே வாழ்ந்து
ஆயிர முரசுடன்
அளிக்கும் படத்தை
கண்டு களிக்கக்
கடவுளே வரந்தா!

அ.சந்தியாகோ-
அசோகா வித்தியாலயம்,
கண்டி.

#### இன்புற்றிருப்போம்!

இன்னா நாற்பதும் இனியவை நாற்பதும்
இன்றோடு பறந்தது!
இன்னா இல்லாத இனியவை முன்னூறு
தந்ததே தினமுரசு!
வந்தது வரவென வருவதும் 'பூ' எனப்
போற்றிடு மனமே!
அதிரடி போற்றி, அற்புதன் தொடரினைப்
போற்றி, இராசதந்திரி தீர்க்கதரிசனம்
போற்றி, இன்புற்று இருப்போம்!
இனிய முரசினைப் போற்றி!!

கவிஞர் 'திக்கவயல்'- மன்னார்.

## கவிதைப் போட்டி இல.303



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 10.04.1999

**முகவரி:** கவிதைப் போட்டி இல.303
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

## காணாமல்போன எலும்புக்கூடுகள்?

முரசே!

செம்மணியில் புதையுண்ட எம் கண்மணிகளின் எலும்புக்கூடுகள் எங்கு போயினவோ? காணாமல் போனோர் கதி அறிந்தது போதும்; காணாமல் போன எலும்புக்கூடுகள் பற்றி அறியவும் கமிஷன் போடுமாறு கேட்கும் நிலை ஏற்படப் போகிறதோ?


இ.ராசாத்தி, யாழ்ப்பாணம்.

## படை நகர்வு

இனிய முரசே!

புலிகளின் தாக்குதல் செய்திகளை மட்டுமல்ல, படையினரின் அடுத்த நகர்வு எதுவென்றும் துல்லியமாகக் கூறிவிட்டாரே நாரதர். மடு நோக்கி படைநகரும் என்று கணிப்பிட்டதைத்தான் கூறுகிறேன்! புலிகள் எதிர்ப்புக் காட்டமாட்டார்கள் என்பதையும் முன்கூட்டியே கூறிவிட்டாரே! இதுபற்றித் தான் நாம் வியந்து பேசிக்கொண்டோம்!

எஸ்.கே.துரை, மட்டக்களப்பு.



## மறைப்பது ஏனோ?

அன்பு முரசுக்கு:

குடியேற்றம் நடத்தத்தான் காணிப் பறிப்பு என்பது தெரியாதது போல, தமிழ்க் கட்சிகள் நாடகமாடுகின்றன. முகாம் விஸ்தரிப்புக்கு 12 ஆயிரம் ஏக்கர் காணி ஏன்? யாருக்கு காது குத்துகிறார்கள். மக்களுக்கு உண்மையைக் கூறினால், தாம் அரசுக்கு ஆதரவு தருவதற்கு எதிர்ப்புக் கிளம்புமே! அதனால்தான் தமிழ்க் கட்சிகள் அரசின் உண்மையான நோக்கத்தை வெளியிடாதுள்ளன.

அ.சங்கரன், யாழ்ப்பாணம்.




## வாக்குறுதியை நம்பக்கூடாது!

முரசே! நீ கூறியது போல ஜனாதிபதியோ, அல்லது வேறு அமைச்சர்களோ வாக்குறுதி கொடுத்தால் தமிழ்க் கட்சிகள் காணி சுவீகரிப்புக்கு எதிரான பிரச்சனையை மறக்கத் தயாராக உள்ளன. இந்த விடயத்தில் வாய்மூல வாக்குறுதிகளை நம்பக்கூடாது. சட்டப்படி காணிகளை சுவீகரித்துத்தான் குடியேற்றம் நடத்த வேண்டியது இல்லை. அங்கு தமிழ் மக்களை மறுபடி குடியேறவிடாது தடுத்து வைத்திருந்துவிட்டு, படிப்படியாக தம் திட்டத்தை இரகசியமாக நிறைவேற்றலாம்தானே! அங்கு தமிழ் மக்களை மீளக் குடியேற அனுமதி பெற்றுக் கொடுக்கவேண்டும். அதுதான் எதிர்காலத்தில் குடியேற்றம் ஏற்படாது நிறுத்தக்கூடிய வழி முறையாகும்!

எம்.சண்முகமூர்த்தி, யாழ்ப்பாணம்.

## நூற்றுக்கு நூறு

முரசே!

மதகுருமார் தூதுக்குழு விஜயம் பற்றி இராஜதந்திரியார் கூறியது நூற்றுக்கு நூறு பலித்தது. அரசு மறைமுகமாக சமாதானப் பேச்சுக்கு முயற்சிப்பதாகவும், மதகுருமார் அனுப்பப்பட்டதும் அதனால்தான் என்றும் வேறு பத்திரிகைகள் கூறின. இராஜதந்திரியார் மட்டுமே, மதகுருமார் விஜயம் முடிந்தது, அடுத்து போர் முழக்கம் கேட்கும் என்றும், அந்த விஜயத்தால் பயனில்லை எனவும் தெளிவுபடக் கூறியிருந்தார். இன்று போர் முழக்கம் கேட்கிறது. மக்களின் அவலம் கண்ணில் தெரிகிறது. அரசு போரை தனது அரசியல் இலாபத்துக்குப் பயன்படுத்தும்வரை போரும் ஓயாது; பிரச்சனையும் தீராது.

வி.சந்திரசேகரன், கொழும்பு-06.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266


## இறகுபோடு

இனிய முரசு, உனக்கு சபாஷ்! நடந்ததை மட்டுமல்ல, நடக்கப் போவதையும் நாரதரும், இராஜதந்திரியும் நமக்கு உரைத்துவிடுகின்றனர். ராஜீவ் கொலை பற்றி தொடர் தரும் தகவல்கள் அருமை. யாழ் குடாநாடு குடியேற்ற வெள்ளத்தில் மூழ்கப் போகிறது. "அரசே அரசே இறகு போடு" என்று இறைஞ்சிக் கொண்டு நிற்கின்றன தமிழ்க் கட்சிகள்.

வா.தேவசகாயம், சிலாபம்.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

# துரையப்பா விளையாட்டரங்க புதைகுழிகள்!

## குடாநாட்டில் பல்வேறு ஊகங்கள்!

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டமை தெரிந்ததே. இது தொடர்பாக பல்வேறு ஊகங்கள் வெளியாகியுள்ளன.

எவ்வித ஆய்வும் இன்றி உடனடியாக அவையாவும் இந்தியப் படை காலத்தவை என்று கூறப்பட்டதும் பலத்த சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது.

யாழ் குடாநாட்டில் பலாலி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இராணுவ முகாம் அமைக்க முற்பட்டபோது, முதன் முதலில் துரையப்பா விளையாட்டரங்கிலேயே இலங்கை இராணுவத்தினர் பலமாதங்கள் தங்கியிருந்தனர்.

அதன் பின்னரே குருநகரில் முகாம் அமைக்கப்பட்டது. அங்கு தாக்குதல் அச்சுறுத்தல் எழுந்த பின்பே யாழ் கோட்டைக்குள் இராணுவ முகாம் நிறுவப்பட்டது.

(நமது நிருபர்)

இந்தியப் படையினரும் துரையப்பா விளையாட்டரங்கப் பகுதியைப் பயன்படுத்தினர்.

தமிழ் இயக்கங்கள் துரையப்பா விளையாட்டரங்கில் புதைக்க வேண்டியதில்லை. தமிழ் இயக்கங்கள் தமது போட்டியாளர்களை தீர்த்துக் கட்டுவதை பகிரங்கமாகவே செய்தன. அதனால் துரையப்பா விளையாட்டரங்கிற்கு கொண்டுபோய் புதைக்க வேண்டிய அவசியமில்லை.

படையணிகளைச் சேர்ந்தோர் மட்டுமே, ஏனைய படைப்பிரிவுகளுக்கோ, மக்களுக்கோ தெரியாமல் இவ்வாறான இடங்களில் உடல்களைப் புதைப்பதுண்டு.

கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக் கூடுகள் எத்தனை காலப் பழமையானவை என்று தெரிந்தால் மட்டுமே யாருடைய காலத்தில் நடந்தவை என்பது தெரியவரும்.

### நிபுணர்கள் தேவை

செம்மணி புதைகுழிகளை தோண்டுவதற்கு பல காரணங்களை கூறி இழுத்தடித்த அரசாங்கம், துரையப்பா விளையாட்டரங்கு புதைகுழிகள் விடயத்தில் அவ்வாறான காரணங்களை கூறவில்லை. எலும்புகளை கொழும்புக்கு கொண்டு வர அனுமதித்துள்ளது.

இந்தியப் படை கால எலும்புகள் என்று கருதப்படுவதாலேயே அவ்வாறு உடன் அனுமதி கிடைத்தது.

ஆனால் மேற்படி எலும்புகளை சர்வதேச நிபுணர்கள் ஆராய்ந்தால்தான் அவை எக்காலத்தவை என்ற உண்மை தெரிய வரும் என்று யாழ் குடாநாட்டில் பலர் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

எனினும் இது தொடர்பாக தமிழ்க் கட்சிகள் துளியும் அக்கறை காட்டாதது பலத்த ஆச்சரியத்தையும், அதிருப்தியையும் ஏற்படுத்தி இருக்கிறது.

அவை எக்காலத்தைச் சேர்ந்தவையாயினும் தமிழ் மக்களது எலும்புகள்தான் என்பதைக்கூட இக் கட்சிகள் எண்ணிப் பார்க்கத் தவறிவிட்டனவே என்று ஆதங்கம் தெரிவிக்கப்படுகிறது.

புதுப்புது பிரச்சனைகளை கிளப்பி படை வட்டாரங்களிடம் அதிருப்தியை சம்பாதிக்கப் பயந்தே தமிழ்க் கட்சிகள் மௌனம் சாதித்துள்ளதாக கூறப்படுகிறது.

# வேவு விமானம் நாசம்!

## மாறுபட்ட செய்திகள் ஏன்?

இலங்கை விமானப்படைக்கு சொந்தமான ஆளில்லாத உளவு விமானம் ஒன்று, வன்னிப் பகுதியில் நாசமாகியுள்ளது.

29.03.99 அன்று திங்கட் கிழமை இந்த விமானம் விபத்துக்குள்ளாகியதாக படையினர் கூறினர்.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக விமானம் தரையிறக்கப்பட்டதாகவும்,படையினர் அதனை மீட்க உள்ளதாகவும் 29.03.99 அன்று செய்திகளில் கூறப்பட்டது.

ஆனால் 30.03.99 புலிகள் தமது காலைச் செய்தியில், வன்னியில் தன்னியக்க உளவு விமானம் விழுந்து நொருங்கியது என்று தெளிவாகத் தெரிவித்தனர்.

இதன் பின்னர் 30.03.99 அரச வானொலி தனது செய்தியில், அந்த விமானத்தை படையினர் அழித்து விட்டதாகக் கூறப்பட்டது.

விமான ஓடுபாதை இல்லாத பகுதியில் தன்னியக்க விமானத்தை தரையிறக்க முடியாது என்று கூறப்படுகிறது. எனவே விழுந்து நொறுங்குவதற்கே சந்தர்ப்பம் அதிகம். அதுதவிர பத்திரமாக தரை இறங்க முடிந்திருந்தால் அதனை அழிக்க வேண்டிய அவசியம் இருந்திருக்காது.

விழுந்து நொருங்கியது என்று உடனடியாக கூறினால், தாம் தாக்கினோம் என்று புலிகள் உரிமை கோரக்கூடும். அவ்வாறு உரிமை கோரினால் சமீபத்திய தமது பிரசாரங்களுக்கு பாதகமாகிவிடும் என்று அரசாங்கம் கருதியிருக்கலாம்.

அதனால் விமானம் பத்திரமாக தரையிறக்கப்பட்டதாக முதலில் கூறிவிட்டு, பின்னர் தம்மால் அழிக்கப்பட்டதாக கூறியிருக்கலாம். ஆனால் புலிகள் என்ன நடந்தது என்பதை அறிந்து கூறிவிட்டனர்.

தன்னியக்க விமானத்தை வன்னியில் உள்ள மக்கள் 'வண்டு' என்று அழைக்கின்றனர்.

# கடைசிக்கட்ட தேர்தல் பிரசாரம்

## மேல் மாகாண சபையில் பலத்த போட்டி

ஏப்ரல் 6ம் திகதி மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெற உள்ளன. தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடித்துள்ளன.

ஐந்து மாகாண சபைத் தேர்தலில் மேல் மாகாண சபை தேர்தலே பெரிதும் பரபரப்பாக எதிர்பார்க்கப் படுகிறது.

கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.கட்சி முன்னணியில் நிற்பதாகவும், கம்பஹா மாவட்டத்தில் பொ.ஐ.முன்னணி முன்னணியில் நிற்பதாகவும் தற்போதைய கணிப்புக்கள் கூறுகின்றன. களுத்துறை மாவட்டத்தில் இரு பிரதான அணிகளும் கடும் போட்டி நிலையில் உள்ளன.

களுத்துறை, கம்பஹா மாவட்டங்களில் வன்முறைகள் தலைதூக்கும் அறிகுறி காணப்படுகிறது.

சப்பிரஹமுவ மாகாணத்தில் பொது ஜன முன்னணியே முன்னணியில் நிற்பதாக கூறப்படுகிறது.

மத்திய மாகாணம், ஊவா மாகாணம் இரண்டிலும் கடும் போட்டி நிலவுகிறது. இரு அணிகளும் ஒன்றையொன்று முந்தும் இறுதிக்கட்ட முயற்சியில் இறங்கியுள்ளன.

தேர்தல் நியாயமாக நடத்தப்படுமானால் இரு அணிகளும் ஒன்றையொன்று பாரியளவில் வெற்றி பெற முடியாதிருக்கும்.

தேர்தல் கண்காணிப்புக்குழுவில் கட்சிகள் அங்கம் வகித்தாலும்கூட, தேர்தல் வாக்களிப்பு தினத்தன்று மோதல்கள் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன.

# ஆயுதம் வைத்திருந்தால் தகவல் தரவும்

## வடமராட்சி படையதிகாரி அறிவிப்பு

யாழ்ப்பாண குடாநாட்டில் தமிழ்க் கட்சிகள் ஆயுதங்களுடன் நடமாட தடை விதிக்கப்பட்டுள்ளது.தனது கட்டுப்பாட்டுப் பகுதியில் தமிழ்க் கட்சிகள் ஆயுதங்களுடன் நடமாட அனுமதிக்க முடியாது என்று வடமராட்சி பொறுப்பதிகாரி கூறியுள்ளார்.

தனது உத்தரவை மீறி தமிழ்க் கட்சிகள் ஆயுதங்களுடன் நடமாடினால் தகவல் தருமாறும் பொதுமக்களைக் கோரியுள்ளார்.

இந்த அறிவிப்பால் தமிழ்க் கட்சிகள் பெரும் சங்கடம் அடைந்துள்ளன. வடமராட்சியில் உள்ள தமிழ்க் கட்சி உறுப்பினர்களிடம், 'உங்களுக்கே இக் கதியோ?' என்று பொதுமக்கள் கேட்டனராம்.

### மரண தண்டனை

யாழ்ப்பாணத்தில் 23.03.99 அன்று மயில்வாகனம் (33) என்பவருக்கு புலிகள் மரண தண்டனை வழங்கியுள்ளனர்.

வீட்டில் இருந்து அவரை அழைத்துச் சென்று விசாரித்த பின்னரே தண்டனை வழங்கப்பட்டது. அவரது உடல் மயிலங்காடு சிறி முருகன் பாடசாலை அருகே கிடந்தது. படையினருக்கு தகவல் கொடுத்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# கோணேஸ்வர குன்று பற்றி தவறான விளக்கம்

## அரச ஆங்கிலப் பத்திரிகை விஷமம்!

திருமலையில் உள்ளது கோணேஸ்வர ஆலயம். இது கி.மு.ஆறாயிரம் ஆண்டளவில் ராவணனால் கட்டப்பட்டது என்பதே வரலாறாகும்.

28.03.99 அன்று வெளியான அரச ஆங்கில பத்திரிகையான சண்டே ஒப்சேவர் தனது முன்பக்கத்தில், கோணேசர் ஆலய வர்ணப்படத்துடன் வரலாற்றை திரிபுபடுத்தும் செய்தியை வெளியிட்டுள்ளது.

கி.பி. 3ம் நூற்றாண்டில் கோணேஸ்வரர் குன்றில் பௌத்த விகாரை கட்டப்பட்டதாக கூறப்பட்டுள்ளதே தவிர, அதற்கு முன்னரே கோணேஸ்வரர் கோயில் அங்கு இருந்ததைப் பற்றி குறிப்பிடவில்லை.

கோணேஸ்வரர் கோயிலது வரலாற்றுக் சிறப்புப் பற்றி ஒருவரிகூட அந்த செய்தியில் குறிப்பிடப்படவில்லை. கோணேஸ்வரர் குன்று சிங்கள மக்களது பராம்பரிய பகுதி போன்று சித்தரிக்கப்பட்டுள்ளது.

அப் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தி பின்வருமாறு;

திருகோணமலைத் துறைமுகப் பிரதேசத்தின் உயரமான ஓரிடத்தில், பிரிட்டிஷ் குடியேற்ற வாசிகளால் நிர்மாணிக்கப்பட்ட ஃபிரெட்றிக்கோட்டைப் பகுதியில் அமைந்திருக்கும் இந்து தேவாலயமான கோணேஸ்வரம் இதுவாகும்.

கடலின் அருகே உள்ள இந்த வரலாற்றுச் சான்றான இந்தக் குன்றில் மஹாசேன மன்னன் கிறிஸ்துவுக்குப் பின் 3ம் நூற்றாண்டில் கோகன்ன பௌத்த விகாரையை நிர்மாணித்தான்.

கி.பி. 8ம் நூற்றாண்டில், 5வது அக்கபோதி மன்னன் பதன கார என்னும் புதிய அமைப்பை இணைத்து, விகாரையை சீர்திருத்தினான்.

அதன் பின்னர் 13ம் நூற்றாண்டில் பெரிய பராக்கிரமபாகு விகாரையை மேலும் சீர்திருத்தியதுடன் வில்கமுபவுக்கும் கோகண விகாரைக்குமிடையிலுள்ள பிரதேசத்தில்-மகாவலியின் இரு கரையிலும் தனது படைகளை வைத்திருந்தான். இதனை புரான சிங்கள வரலாற்று ஏடுகள் எடுத்துக் கூறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொத்தணி பஸ் கம்பனிகள்

## தமிழர்களுக்கு இடமில்லை!

ஜனாதிபதி பிரேமதாசா அவர்களின் காலத்தில் மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சபையாக இருந்து, தற்சமயம் நாடளாவிய ரீதியில் 11 கொத்தணி பஸ் கம்பனிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த 11 கொத்தணி பஸ் கம்பனி நிருவாகத்தில் தமிழர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை! 7 சிங்களவரும் 4 முஸ்லிம்களுமே தலைவர்களாக உள்ளனர்.

தலைவருக்கு அடுத்த பதவியான நிர்வாக இயக்குநர்களாக 08 சிங்களவர்களும் 03 முஸ்லிம்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மூன்றாவது நிலையான பொறியியற் பணிப்பாளர் பதவியில் தமிழர்கள் எவருக்கும் நியமனம் கிடைக்கவில்லை.

நான்காவது தரத்திலான செயலாற்றுப் பணிப்பாளர் பதவிக்கு இரு தமிழர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அதிலும் சென்ற மாதம் கிழக்குப் பிராந்திய கொத்தணி பஸ் கம்பனியின் செயலாற்றுப் பணிப்பாளராக தமிழர் ஒருவர் நியமனம் பெற்றிருந்தார். அவரும் தற்போது நீக்கப்பட்டுள்ளார்.

நாடு முழுவதிலுமுள்ள 11 கொத்தணி பஸ் கம்பனிகளில் மூன்றே மூன்று தமிழர்கள் மாத்திரம் இடம்பெற்றது குறித்தும், இன விகிதாசாரமும், குறிப்பாக தமிழர்களின் பிரதி நிதித்துவமும்-விகிதாசாரப்படி கவனத்திலெடுக்கப்படாதது குறித்தும் தமிழர்கள் கவலை கொண்டுள்ளனர்.

இதனிடையே ஏற்கெனவே கிழக்குப் பிராந்திய கொத்தணி பஸ் கம்பனியின் செயலாற்றுப் பணிப்பாளராக நியமனம் பெற்றிருந்தவரை நீக்காதிருக்கும்படி பாராளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா உட்பட மட்டக்களப்பு மாவட்ட தமிழ் பா.உ.கள் போக்குவரத்து அமைச்சுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தனர். அதுவும் புறக்கணிக்கப்பட்டுவிட்டது.

# தமிழில் பிறப்பு- இறப்பு பதிவு!

## தற்போது சாத்தியம் இல்லையாம்

கொழும்பில் பிறப்பு-இறப்பு பதிவுகளை உடனடியாக தமிழில் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டதாக செய்திகள் வெளியானமை தெரிந்ததே.

ஏற்கனவே சில வருடங்களுக்கு முன்னர் இரண்டு மாதங்களுக்குள் அரச அலுவலகங்களில் தமிழ் மொழி அமுல்செய்யப்பட வேண்டும் என்று ஜனாதிபதி கூறியிருந்தார். ஆனால் இன்று நிலமை மேலும் சீர்கேடு அடைந்துள்ளது.

சமீபத்தில் ஜனாதிபதி செயலகத்தால் தமிழ் பா.உ. ஒருவருக்கு அனுப்பப்பட்ட கடிதமும் தனிச் சிங்களத்திலேயே இருந்ததாம்.

இவ்வாறான நிலையில் புதிய உத்தரவு என்னாகும் என அறிய விரும்பினோம். கொழும்பில் உள்ள பிறப்பு- இறப்பு பதிவாளர்களிடம் இது பற்றிக் கேட்டபோது அவர்கள் ஆச்சரியம் தெரிவித்தனர்.

தமிழ் தெரிந்த பதிவாளர்களே கொழும்பில் அரிதாக உள்ளபோது, இது நடக்கக் கூடிய காரியமல்ல. முதலில் தமிழ் பேசும் பதிவாளர்களை நியமித்துவிட்டு பின்னர் இந்த உத்தரவை போட்டிருந்தால் நடைமுறைச் சாத்தியமாக இருந்திருக்கும்.

கொழும்பில் தமிழ் மக்கள் செறிந்துள்ள பகுதிகளில்கூட தமிழ் தெரியாத பதிவாளர்களே உள்ளனர். இந்நிலையில் பிறப்பு, இறப்பு பதிவில் கொழும்பு வாழ் தமிழர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். தற்போதைய வாக்குறுதி தேர்தல் வாக்குறுதிபோலவே இருக்கிறது என்று கூறுகின்றனர்.

# கைக் குண்டு வீச்சு

## மாணவன் போல் வந்தாராம்

யாழ்ப்பாணத்தில் பரவலான கெரில்லாத் தாக்குதல்களை புலிகள் நடத்தி வருகின்றனர்.

28.03.99 அன்று உரும்பிராய் கரந்தன் பகுதியில் படையினர் ரோந்து சென்றனர்.

அப்போது மாணவன் போல வந்த ஒருவர் மதிலுக்கு பின்புறமாக நின்று கைக் குண்டை வீசினாராம். இதில் இரு படையினர் பலியாகினர்.

தாக்குதல் நடத்திய புலி படையினரின் காவலரணைத் தாண்டியே சென்றுள்ளதாக கூறப்படுகிறது.

யாழ் குடாநாட்டில் பல பகுதிகளில் புலிகளது ஊடுருவல் அதிகமாகியுள்ளதாக கூறப்படுகிறது.

யாழ் நகரில் தமிழ்க் கட்சிகள்மீதும் புலிகளது கவனம் திரும்பியுள்ளதாக கூறப்படுகிறது.

# பதுங்கியிருந்து தாக்குதல்

மட்டக்களப்பு-ஏறாவூர்ப் பகுதியில் இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அப்பகுதியில் பதுங்கிருந்த ராசிக் குழுவினர் சுட்டதில் புலி இயக்கத்தின் "துணைப்படை" அணியைச் சேர்ந்த முழு நேர ஆதரவாளர் ஒருவர் பலியானார். சடலம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமாகப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அங்கு வந்த புலி உறுப்பினர்கள் இருவருடன் சேர்ந்து இவரும் வந்த வேளையிலேயே துப்பாக்கிச் சூட்டில் பலியானார். உடன் வந்த புலி உறுப்பினர்கள் இருவரும் சூட்டுச் சம்பவத்தின் பின்னர் புலிகளின் தளம் திரும்பாததால் மறுநாள் அவ்வூர் மக்களின் உதவியுடன், புலிகள் ஏறாவூர் ஊரருகிலுள்ள வெல்லங்குடாப் பகுதியில் தேடுதல் நடாத்தினர்.

காயப்பட்ட அவர்கள் ஆற்றில் அல்லது காடுகள் நிறைந்த சதுப்பு நிலப் பகுதியில் வீழ்ந்து இறந்திருக்கலாம் என்று கருதியே தேடுதல் நடத்தப்பட்டது.

ஆனால் அவர்கள் இருவரும் எதுவித காயங்களுமின்றி தப்பிவிட்டனர் என்பது பின்னர் தெரிந்தது.

# ஈ.பி.டி.பி உறுப்பினர் கைது

கொழும்பில் தங்குவிடுதி ஒன்றில் 2.2 சிறியரக துப்பாக்கி அடங்கிய பொதி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இதனை அடுத்து அந்த தங்கு வீடுதியில் உள்ளவர்கள் பம்பலப்பிட்டி பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் விசாரணையின் பின்னர் சிலர் தடுத்துவைக்கப்பட்டனர். தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் ஒருவர் ஈ.பி.டி.பி. உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் தமது உறுப்பினர் என்று ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா பா.உ பொலிஸ் மேலிடத்துக்கு தெரியப்படுத்தியதுடன், உடன் விடுதலை செய்யுமாறு கோரியிருந்தார். அவ்வாறிருந்தும் தடுப்புக் காவல் உத்தரவு போடப்பட்டுள்ளது.

ஏற்கனவே ரெலோ தலைவர் வினோதலிங்கன், ஈ.பி.டி.பி. எம்.பி சந்திரகுமாரின் மெய்க்காவலர் ஆகியோருக்கும் அவசரகால சட்டத்தின்கீழ் தடுப்புக்காவல் போடப்பட்டமை தெரிந்ததே.

# மட்டக்களப்பு பொலிஸார் தேர்தல் கடமையில்!

## கண்டி–பதுளைக்கு விசேட இடமாற்றம்

ஏப்ரல் மாதம் 06ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலையொட்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பொலிஸ் கடமையாற்றும் பொலிஸார் பலருக்கு விஷேட இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதம் 02 ஆம் திகதியில் இருந்து அவர்கள் தேர்தல் விசேட கடமைகளுக்காக கண்டி, பதுளை மாவட்டங்களுக்குச் செல்லுமாறு இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவர்களில் அதிக எண்ணிக்கையானோர் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த தமிழ்பேசும் பொலிஸார் என்றும் அறியவருகிறது.

கண்டி, பதுளைப் பகுதியைச் சாராத தமிழ் பேசும் பொலிஸாருக்கு மாத்திரமே அப்பகுதிகளில் தேர்தல் கடமையில் ஈடுபடுத்துமாறும் மேலிட உத்தரவாம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாண சபை ஆட்சியில் இருந்த கோட்டைக்குள் தில்லுமுல்லுகள் நடத்துவதற்கு ஏதுவாகவே கண்டி, பதுளை பகுதிகளுக்கு பரிச்சயமில்லாத தமிழ் பேசும் பொலிஸாருக்கு விசேட தேர்தல் கடமை எனக்கூறி இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்று தாம் சந்தேகிப்பதாக எதிர்க்கட்சி வட்டாரங்கள் கூறியுள்ளன.

ஊவா, மற்றும் மத்திய மாகாணங்கள் கலைக்கப்படும்வரை, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆளுகையின் கீழ் இருந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# புலிகள் சிபாரிசு செய்த பெயர்ப் பட்டியல்!

## மக்கள் தொண்டர் படை விசாரணை!

மட்டக்களப்பு பிரதம பொலிஸ் அத்தியட்சகர் அறைக்கு-அங்கு பணிபுரிந்த மக்கள் தொண்டர் படை (CVF)யைச் சேர்ந்த சார்ஜன் ஒருவர் குண்டு ஒன்றைக் கொண்டு வந்தது சம்பந்தமாக பிடிபட்டு விசாரணையில் உள்ளார் என்பது தெரிந்ததே.

இதே அலுவலகத்தில் முன்னர் கடமையாற்றிய மக்கள் தொண்டர் படைச் சார்ஜன் ஒருவர் புலிகளின் உளவாளியாகச் செயற்பட்டார் என்று கைது செய்யப்பட்டு விசாரணையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பதும் வாசகர்கள் அறிந்ததே.

இந்தச் சம்பவங்களின் பின்னர் மட்டக்களப்பில் மக்கள் தொண்டர் படையினராகக் கடமையாற்றும் பாதுகாப்பு ஊழியர்கள் அனைவரும் சந்தேகத்தின் பேரில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இந்திய அமைதிப்படை காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க மாகாண சபை நிருவாகத்தின்போது உருவாக்கப்பட்டதுதான் மக்கள் தொண்டர் படை.

எனினும் புலிகள் - பிரேமதாசா சமாதானப் பேச்சுவார்த்தைக் காலத்தின்போது மக்கள் தொண்டர் படையில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியவர்களின் பெயர்களைச் சிபார்சு செய்து பெயர்ப் பட்டியலைப் புலிகளே வழங்கியிருந்தனர் என்பதாலேயே இப்பொழுது விசாரணைகள்-மக்கள் தொண்டர் படையினர்மீது தீவிரமாக்கப்பட்டுள்ளன.

# தமிழ் மீனவர்கள் எங்கே?

## குடும்பங்கள் சோகக் கடலில்!

திருமலை மாவட்டம் உப்புவெளி அகதி முகாமில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் நால்வரைக் காணவில்லை என்று அவர்களது உறவினர்கள் கூறியுள்ளனர்.

25.03.99 அன்று மாலை இரண்டு படகுகளில் கடலுக்கு சென்றனராம். 26ம் திகதி இவர்கள் திரும்பியிருக்க வேண்டுமாம்.

ரி.விஜயகுமார் (27), ரி.குமணன் (24), என்.பரந்தாமன் (37), ரி.நிமால் (24) ஆகியோரே காணாமல் போயினர்.

இவர்களைத் தேடி 28ம் திகதி ஆறுபடகுகளில் 12 மீனவர்கள் சென்றனர். இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை அவர்களும் திரும்பிவரவில்லை. இதனால் 16 குடும்பங்கள் சோகக் கடலில் மூழ்கியுள்ளன.

## கடிதம் அனுப்ப 25 ரூபா
# கைதிகளின் உறவினர் அலைச்சல்

அவசரகாலச் சட்டத்தின் கீழ் வகை தொகையின்றி சந்தேகத்தின் பேரில் கைது செய்வதும், சிறையிலடைத்துவைப்பதும் பின்னர் கைதிகளைப் போய் பார்வையிட அனுமதிப்பதும் வழக்குகளுக்காக அலைய வைப்பதும் ஒட்டு மொத்தமாகச் சம்பந்தப் பட்ட ஒரு சாராரின் பிழைப்புக்கும் ஊழல் மோசடிகளுக்கும் வழி அமைத்துக் கொடுத்திருக்கிறது.

கைதாகியிருப்போரின் உறவினர்கள் நாளாந்தம் உதவி நிறுவனங்களிடமும் சட்டத் தரணிகளிடமும் பொலிஸ் நிலையங்களுக்கும், சிறைச்சாலைகளுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் தங்கள் உறவினரின் விடுதலை வேண்டியும், அவர்களது கதி குறித்து அறிந்து கொள்ளவும் அலைகிறார்கள்.

சிறைக்காவலர்களும், பாதுகாப்புத் தரப்பினரும் இச் சந்தர்ப்பத்தைத் தங்களுக்கு வாய்ப்பான தருணமாகப் பயன் படுத்தி,ஏழைகளிடம் பணம் கறப்பதிலேயே குறியாய் இருக்கின்றார்கள்.

"பாதிக்கப்படுவோரை மேலும் மேலும் துன்பத்திற்குள்ளாக்குவது மிக மோசமான சமூக ஸ்திரமற்ற நிலையை உருவாக்கும்" என்று மட்டக்களப்பில் மனிதாபிமானப் பணியாற்றி வரும் பெரும்பான்மை சமூகப் பெண்மணியொருவர் வேதனை தெரிவித்தார்.

இதேவேளை களுத்துறை, மகஸின், வெலிக்கடை போன்ற பெரிய சிறைச்சாலைகளிலிருந்து 3.50 சதம் பெறுமதியான சாதாரண தபாலொன்றை அனுப்புவதற்கு, ரூபா 25/= க்குக் குறையாத 'கவனிப்பு' கொடுக்க வேண்டியுள்ளதாக சிறைக்கைதிகளின் உறவினர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## தடைப்பட்ட திருத்தம்

(புத்தளம் நிருபர்)

புத்தளம்-கொழும்பு பிரதான வீதி பல வருடங்களாக திருத்தப்படாமையினால் சீரற்ற நிலையில் உள்ளதாக வாகன சாரதிகள் தெரிவித்தனர்.

இவ்வீதியின் திருத்த வேலை கொழும்பிலிருந்து ஆரம்பமாகி சிலாபம் வரை திருத்தப் பட்டு, இடையில் நிறுத்தப்படுவதனால்; சிலாபம்-புத்தளம் வரையிலான பகுதி மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## குண்டு பொருத்தும்போது கைது!
# மலையக வாலிபர் விசாரணையில்!

(கண்டி நிருபர்)

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் வட்டாரத்தைச் சேர்ந்த கொஹாகொட என்னும் இடத்தில் மின்மாற்றி நிலையத்திற்கு குண்டு பொருத்த முனைந்த இரு நபர்களில் ஒருவர் மாட்டிக்கொண்டார் என்று பொலிசார் கூறியுள்ளார்.

கட்டுகஸ்தோட்டை நகரில் ஞாயிறு 21.03.99 அன்று இரவு விழிப்புக் குழுவில் கடமை புரியும் இருவர் மறைந்திருந்து இந்த நபரைக் கைது செய்தனராம்.

விஸ்வநாதன் லூக்கஸ் பெர்னாண்டோ (வயது 21) என்ற நபர் புலி உறுப்பினர் என பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டுள்ளார். இவரோடு குண்டைப் பொருத்த வந்திருந்த நபர் அங்கிருந்தும் தப்பி ஓடிவிட்டதாகக் கூறப்படுகிறது.

லூக்கஸ் பெர்னாண்டோ என்ற சந்தேக நபர் வலப்பனை முல்லேகலே என்ற தோட்டத்தில் வசிப்பவர் எனவும் இவரது சொந்த ஊர் மட்டக்களப்பு எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இதற்கு சில வாரங்களுக்கு முன்னர் இதே இடத்தில் மின்மாற்றி ஒன்று குண்டு வைத்து தகர்க்கப்பட்ட சம்பவமும் குறிப் பிடத்தக்கது.

இந்தச் சம்பவத்தில் கைப்பற்றப்பட்ட குண்டு படையினரால் செயலிழக்கப்பட்டது. கைது செய்யப்பட்டவரிடம் பல தகவல்களை பொலிஸார் பெற்றிருப்பதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

## பயமற்ற வாழ்வு வேண்டும்!



திருமலை நகரில் பெண்கள் தினத்தை முன்னிட்டு, அரங்க செயற்பாட்டுக்குழுவும் திருமலை இந்து இளைஞர் மன்ற அபிவிருத்தியகமும் இணைந்து உணர்வு பூர்வமான ஊர்வலமொன்றை நடத்தின. அந்த ஊர்வலத்தில் உழவு யந்திரமொன்றில் கட்டித் தொங்கவிடப்பட்டு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்ட பெரும் சப்பாத்தையே இங்கு காண்கிறீர்கள். அடக்குமுறையின் சின்னமாக இதனை உருவகப்படுத்தியிருந்தனர்.

ஊர்வலத்தின் முடிவில் இந்தச் சப்பாத்துக்குள் இருந்து பெண்களின், தலைமுடி, ஆடைகள் போன்றவை இழுத்தெடுகப் பட்ட காட்சி உணர்ச்சி பூர்வமாக இருந்தது.

திருமலை நகரில் மிகத் துணிச்சலாக பெண்கள் மட்டும் பங்கு கொண்ட இந்த நிகழ்வு பலரையும் வியப்பில் ஆழ்த்தியது. 'பயமற்ற வாழ்க்கை எமக்கு வேண்டும்!' என்பதே பிரதான கோஷமாக இருந்தது.

## 'புலிகள்' என்று கைது

கல்முனையில் 'புலிகள்' என்று சொல்லி இரு தமிழ் இளைஞர்கள் கைதாகி கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளனராம். 'குட்வின்' உரிமையாளர் சத்யன், கடை உரிமையாளர் ராஜு ஆகியோரே கைதானவர்களாவர்.

இதனால் கல்முனையில் தமிழ் இளைஞர்கள் அச்சமடைந்துள்ளனர்.

இதேவேளை கல்முனை பிரதேச செயலகம் அருகில் இரு குண்டுகள் வெடிக்கவைக்கப்பட்ட விவகாரம் பலத்த சந்தேகங்களைக் கிளப்பியுள்ளதாம். வன்னிக்குச் செல்ல விருப்பமில்லாத சீருடையாளரின் வேலையோ? என்று 'காதோடு காதாக' கூறுகிறார்களாம்.

திங்களன்று அம்பாறை மத்திய பஸ் நிலையத்திலும் 4 கிலோ சக்திவாய்ந்த குண்டு கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸ் அத்தியட்சகர் டி.ஜி.எல்.திசாநாயக்க கூறியுள்ளார். பாதுகாப்புப் படையினரைத் தாக்க வந்த புலிகள் செய்த சதி எனவும் அவர் கூறத்தயங்கவில்லை.

அண்மையில் கல்முனையில் 100க்கும் மேற்பட்ட முஸ்லிம் பொலிஸார் இட மாற்றப்பட இருந்தனர். பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரது தலையீட்டால் அது நிறுத்தப்பட்டது.


**House For Rent**

**Mr. Rajanathan**

No:- 318, Dyke Street,
Trincomalee.

**Contact: 026-21171**




நடராஜா கமலநாதன் (அப்பன்)
உரும்பிராய் கிழக்கு

மண்ணில் 30.03.1965 -
மனங்களில் 16.03.1987

காலத்தெருவெளியில்
நீ மறைந்து பன்னிரு
ஆண்டுகள் கழிந்தன.
காலத்தால் அழியாத
உன்நினைவுகளுடன் கலந்த,
அம்மா, அப்பா, அக்காமார்,
அத்தான்மார், அண்ணாகுடும்பம்,
தம்பி குடும்பம், மற்றும்
உறவினர்கள், நண்பர்கள்.
தகவல்: சிறீ, ஞானா.


**ELECTRONIC BOOK**

எலக்ரோனிக் துறையில் ஆர்வமுள்ளவர்களுக்கும் ELECTRONICபயிலும் மாணவர்களுக்கும் ஒரு சிறந்த நூல் 65 CIRCUIT களும் செய்முறை விளக்கங்களுடன் வெளி வந்துள்ளது. தேவையானவர்கள் 250/= ரூபா (MONEY ORDER) காசுக் கட்டளை அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

THE DIRECTOR
POWER TECH
"BLOSSOM"
NO. 20 VAJIRAPURA,
NUWARA ELIYA.

**தபால் மூலம் விஞ்ஞானம்**

G.C.E. (A/L) ~ இரசாயனவியல்
Year 9,10,11 ~ விஞ்ஞானமும், தொழில்நுட்பமும்
Year 5 ~ ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர்:
**குமார் சிவப்பிரகாசம்**

விபரங்களுக்கு சுயவிலாசமிட்ட தபாலுறையுடன் விண்ணப்பிக்கவும்.

**P.T.C.**
14, Covington Road,
Batticaloa.


**விற்பனைக்கு**
**மட்டுநகரில் காணித் துண்டுகள்**

மட்டுநகர்-திருமலை பிரதான வீதியில் கொத்துக்குளம்
ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்துக்கு அருகில்
(Adjoining Welcome Column)
5 முதல் 50 பேர்ச்வரை
வீடுகள், வர்த்தக நிலையங்களுக்கேற்ற காணித்துண்டுகள்
உடன் விற்பனைக்குள்ளன!
விபரங்களுக்கு:-258/3,DAM STREET, COLOMBO-12.
தொலைபேசி:-01-421987 (காலை 8.00 முதல் மாலை 6.00 வரை)

**சிங்கப்பூரில் இலங்கையர்களுக்கான திருமண சேவை**

வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை சிறந்த முறையில் சமய முறைப்படி ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். மற்றும் பதிவுத் திருமணம், தங்குமிட வசதி, தங்கும் இடங்களில் சமைத்துச் சாப்பிடும் வசதி, போக்குவரத்து வசதிகள், அனைத்தும் சிறந்த முறையில் குறைந்த செலவில் ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்.

தொடர்பு. N .THANGA,
T.PRINCI.
5. STARLIGHT ROAD. SPNGAPORE 217758
OPPOSITE RANGOON ROAD T.P.2974924,
HP 97546610. HP 97651074

சுபின் அஸ்வித

## 1ம் பிறந்தநாள் வாழ்த்து

சுபின் அஸ்வித
தனது முதலாவது
பிறந்தினத்தை 05.04.1999
அன்று தனது இல்லத்தில்
சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, சுரேஸ், சாந்திமா(டுபாய்), மாமா, மாமி, சிவராஜா, நந்தினி மச்சாள், வினுஜன்(சுவிஸ்), சித்தப்பா பிரகாஷ் (இலண்டன்), அத்தைமார் சியமளா, கல்யாணி (கொழும்பு), சித்தப்பா கமலதாஸ், அப்பப்பா, அப்பம்மா, ஆச்சி (டுபாய்), தாத்தா(கொழும்பு), மாமா சமிந்த, மாமி தம்மினி(டுபாய்), சித்தி சாந்தினி, அக்கா சுது (கொழும்பு) குமாரி(டுபாய்), ஆகியோர் சிறப்புக்கள் பல பெற்று நீடூழி காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.




**மலையாள மாந்திரிகம்**



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது ஃபெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
**Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831




## மரண அறிவித்தல்

தோற்றம்
13.03.1920

மறைவு
04.03.1999

## ஆறுமுகம் கணபதிப்பிள்ளை

வளவாய், அச்சுவேலி

வளவாய் அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் 40/1 விஸ்வமடு கிழக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கணபதிப்பிள்ளை- 04.03.1999 அன்று விஸ்வமடுவில் காலமானார். அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும், சிவசுப்பிரமணியம் (கனடா) முன்னாள் தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனக் கணக்காளர், யோகநாயகி, அருந்தவநாயகி (கொழும்பு), நவரட்ணராசா (ஃபிரான்ஸ்), பாலசிங்கம் (கனடா), சுகுணராஜ் (விஸ்வமடு), ஸ்ரீஸ்கந்தராசா (கனடா), ஆனந்தகௌரி (கனடா), சரவணபாவானந்தன் (கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையும், வதனா(கனடா), சண்முகராசா, ஸ்ரீகாந்தா (சீமன்- கொழும்பு), ரேனுகா (ஃபிரான்ஸ்), ஜெயந்தி (கனடா) சுகிர்தரன்(கனடா), ஆகியோரின் அன்பு மாமனாரும் சபேசன் (கனடா) சதீசன் (கனடா), நிலானி, மாதுளன், மாதுஜன், (கொழும்பு முகத்துவாரம் இந்துக்கல்லூரி மாணவர்கள்), நிஸ்ஜன் (ஃபிரான்ஸ்), துவாரகா (கனடா) பிறமியா(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04.03.1999 வியாழக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விஸ்வமடு இந்து மயானத்தில் தகனம்செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

தகவல்:- (மகள்). திரு மதி.ஸ்ரீகாந்தா
48 பி. சென் மேரீஸ் லேன், மட்டக்குளி,கொழும்பு 15.


**மனோதத்துவ வைத்தியம்**
**வவுனியா விலாசம் மாற்றப்பட்டுள்ளது**

இளைஞர்களே! சக்தி இழந்து மெலிந்து, நித்திரையின்மை, பயம் நடுக்கம், ஞாபக மறதி, தாழ்வு மனப்பான்மை ஏற்படக்காரணமான தவறுகளை நிறுத்தி எதிர்காலம் பிரகாசிக்க பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P.ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

**SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)**

தாம்பத்திய கோளாறுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணமாகும். தாழ்வு மனப்பான்மையை 90 நிமிடத்தில் நீக்கி, நான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்தே பணம் பெறப்படும்.

**வெளிநாட்டில் வசிப்போருக்குவிஷேட ஏற்பாடுகள்**

எந்தவித தாம்பத்திய பாதிப்புனாலும் தயக்கமின்றி எழுதவும். உமது கேள்விகளுக்கு விரிவான பதில் தந்தபின் முடியாதவன், இயலாதவன் என்ற தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை பதிவு நாடா மூலமும், உடல் பாதிப்பிற்கு நல்ல மூலிகை மருந்தும் பெற்று தாம்பத்திய குறைகளை முற்றாக நீங்கிய ஆண்மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) பதில் பெற முத்திரை செலவு அனுப்பவும்.

**மட்டக்களப்பு விலாசத்திற்கு மட்டும் கடிதத் தொடர்பு கொள்ளவும்**

நீரிழிவு நோய் முற்றாக சுகமாக்கலாம். மனநோய்கள், தாழ்வு மனப்பான்மை 'ஹிஸ்டீரியா' என்பனவற்றுக்கும் மனோதத்துவ சிகிச்சை உண்டு. ஆஸ்துமா, தலையிடி, வாதம், வெள்ளை போதல், கிரந்திநோய், குழந்தை பேறு இன்மை, முடி உதிர்தல் எல்லாவற்றுக்கும் மருந்துகள் உண்டு.

**கல்முனையில் ஏப்பிரல் 3,4ம் திகதிகளில்**

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

**வவுனியாவில் ஏப்பிரல் 10,11 திகதிகளில்**

முன்கூட்டியே பதிவு செய்யவும் HOTEL VASANTHAM,
40, கண்டி வீதி, வவுனியா. T.P.024-22615, 024-22607, 024-22366

**கொழும்பில் ஏப்பிரல் 20 முதல் 28 வரை**

DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL STREET, COLOMBO-13
(5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது) T.P. 338165, 338166, 338164 FAX: 338161.
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No-072-609388

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019

**DR.P.ARUMUGAM S.A.M.P.,**
**NO.51/5. Koolavady Road,**
**Batticaloa. SRI LANKA.**


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் கு.சிந்துசன் (சிந்து) 06.04.1999

யாழ் சங்குவேலி தெற்கைச்சேர்ந்த குணசிங்கம்-ஜெயந்தி தம்பதியினரின் செல்வப்புதல்வன் சிந்துசன் தனது முதலாவது பிறந்தநாளை 06.04.1999 அன்று லெபனானில் (அபுகார்) தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரைஅன்பு அப்பா, அம்மா, சங்குவெலியைச் சேர்ந்த அப்பம்மா, மாமிமார், மாமா,பெரியப்பா, பெரியம்மா, அண்ணாமார், அக்காமார், கொழும்பில் இருக்கும் பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், பட்டுமாமி, தருமபுரம் பரந்தனைச்சேர்ந்த அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, உஷா, கிருபா, கோகினிஅக்கா, சித்திமார், காந்திமாமா(சவுதி), மற்றும் லெபனான், ஃபிரான்சிஸ், (அப்பாப்பா) நாதன் மாமா, பீட்டர்மாமா, சுமதி அன்ரி, மற்றும் நண்பர்கள், அனைவரும் மருதடி பிள்ளையாரின் அருளுடன் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் நோய் நொடி இன்றி வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்: அ.நேசபாலாம்பிகை, கொழும்பு.

# படை நகர்வும் புலிகளின் காத்திருப்பும்!

'யுத்த கோஷ' நடவடிக்கையின் இரு கட்டங்களும், இராணுவ ரீதியாக குறிப்பிடத்தக்க திருப்பம் எதனையும் படைத்தரப்புக்கு ஏற்படுத்தவில்லை.

ஆனால், சந்திரிகா அரசு தேர்தல் பிரசாரத்திற்கு இதனை பயன்படுத்தும் விதம் வேடிக்கையாக இருக்கிறது.

மடுவை கைப்பற்றிவிட்டதாகவும், அங்கு தேவாலயத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவும் திரும்பத் திரும்ப கூறப்பட்டது.

அரச பிரசார சாதனங்கள் மட்டுமன்றி, தனியார் வெகுஜனத் தொடர்பு சாதனங்களும் அதே செய்திகளையே வெளியிட்டன.

மடு மாதா தேவாலயம் முன்பாக நின்று நேரடி வர்ணனை போல தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள் செய்திகள் கூறினார்கள்.

இத்தனைக்கும் மடு தேவாலயப் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதியல்ல. யூ.என்.எச்.சி.ஆர். நிறுவனம் அங்குள்ள அகதிகளுக்கு உதவி வந்தது.

மடு தேவாலயப் பகுதிக்குள் புலிகளோ வேறு எத்தரப்புமோ ஆயுதபாணிகளாக நடமாடக்கூடாது என்று யூ.என்.எச்.சி.ஆர். மற்றும் மடு தேவாலயத்தினர் கட்டுப்பாடு விதித்திருந்தனர்.

மடுவை நோக்கி படையினர் முன்னேறுவர் என்பது புலிகளுக்கு தெரிந்திருந்தது. மடுவை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்த புலிகளது சிறிய முகாம்கள் படையினர் முன்னேறுவதற்கு ஒரு வாரத்தின் முன்னரே அகற்றப்பட்டுவிட்டன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு கழகத்தின் அலுவலகம்கூட அங்கிருந்து அகற்றப்பட்டுவிட்டது.

எனவே, எவ்வித எதிர்ப்புமின்றி மடுவைச் சுற்றிய பகுதிகள் படையினரால் கைப்பற்றப்பட்டன. மடு தேவாலயப் பகுதிக்குள் ஆயுதங்களுடன் படையினர் பிரவேசித்தனர். மடு ஆயர் தடுத்தும் கேட்காமல் அங்கு நிலை கொண்டனர்.

மடு தேவாலயப்பகுதியில் இருந்து படையினர் விலகிக் கொள்ளப்படுவர் என்று மடு ஆயருக்கு ஜனாதிபதி உறுதியளித்ததாக செய்திகள் வந்தன.

உறுதியளிப்பதைவிட உடனடியாக விலக்கிக்கொண்டிருக்கலாம். ஜனாதிபதி நினைத்தால் அடுத்த நிமிடமே அங்கிருந்து படையினரை அகற்றியிருக்கலாம்.

மடு தேவாலயப் பகுதியில் புலிகள் ஆயுதங்களுடன் நடமாடுவதும் கிடையாது என்பதால், அங்கு நிலைகொண்டிருப்பதற்கு பாதுகாப்பு காரணங்களையும் கூறமுடியாது.

தற்போதைய இராணுவ நடவடிக்கைகள் ஜனாதிபதியின் தலைமையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, மடு தேவாலயப் பகுதியில் படையினர் நிலைகொள்ள வேண்டும் என்பது படையினரோ, அவர்களது உயரதிகாரிகளோ தாமாக தமது இஷ்டப்படி செய்த முடிவாகத் தெரியவில்லை.

அதுவும் மடு ஆயரே தடுக்கும்போது, அவ்விடயம் படை உயரதிகாரிகளால் ஜனாதிபதிக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டிருக்கும். எனவே, ஜனாதிபதியின் அனுமதியுடனேயே மடு தேவாலயப் பகுதியில் படையினர் நிலை கொண்டுள்ளனர் என்ற முடிவுக்கே வர வேண்டியுள்ளது.

இதற்கு முக்கிய காரணம் இல்லாமல் இல்லை. ஐந்து மாகாண சபைத் தேர்தலில் கிறிஸ்தவ மக்களது வாக்கு வங்கிகளை கவருவதற்கான பிரசார நாடகம் ஒன்றை நாசூக்காக நடத்தி முடித்துவிட்டனர்.

மடு தேவாலயம் பயங்கரவாதிகளது பிடியில் இருந்தது போன்றும், இப்போது மீட்கப்பட்டுவிட்டது போன்றும், சாதாரண சிங்கள கிறிஸ்தவ மக்களை பிரமை கொள்ள வைத்தாயிற்று!

வடக்கு-கிழக்கில் படையினரது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் எத்தனையோ இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய ஆலயங்கள் சேதமாகியும், மக்கள் செல்ல அனுமதியின்றி பாழடைந்து கொண்டும் இருக்கின்றன.

அப்படியிருக்க, மடு ஆலயத்திற்கு உடனடியாக மின்சாரம் கொடுக்கப்போவதாக ஆரவாரமாக அறிவித்ததன் நோக்கமும் கிறிஸ்தவ வாக்காளர்களை குளிர்விப்பதுதான்.

இன்னொரு புதுக் காரணமும் அரசால் கூறப்படுகிறது. மடு தேவாலயத்திற்கு சகல இன மக்களும் சென்று வரவேண்டும் என்பதற்காகவே படையினர் அங்கு நிற்கின்றனராம்.

எக்காலத்திலும் மடுவுக்கு பக்தர்கள் செல்வதை புலிகள்கூட தடுத்தது கிடையாது. வவுனியா தாண்டிச் செல்பவர்கள் படையினரிடம் தான் அனுமதி பெறவேண்டியிருந்தது.

ஏதோ மடுவுக்கு சிங்கள மக்கள் செல்ல முன்னர் தடை இருந்தது போன்றும், தற்போது சிங்கள பக்தர்களது வழிபாட்டு உரிமையை பெற்றுக் கொடுத்துள்ளது போன்றும் கூறப்படுவது கூட சிங்கள கிறிஸ்தவ வாக்கு வங்கிகளை குறிவைத்துத்தான்.

மடுதேவாலயத்தை காண்பித்திருக்காது விட்டால் 'யுத்த கோஷ' நடவடிக்கையின் பலாபலன் ஏதுமில்லை என்று கருதப்பட்டிருக்கும்.

அதனால்தான் யாருடைய கட்டுப்பாட்டிலும் இல்லாத தேவாலயத்தை 'மீட்டதாக' பிரசாரம் பண்ணவேண்டியிருக்கிறது. 'யுத்த கோஷ' நடவடிக்கை மூலம் வவுனியா-யாழ் சாலையின் மேற்குப் பகுதியில் படையினரின் நிலைகள் அகன்றும் நீண்டும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

மூன்றுமுறிப்பில் உள்ள படையினர் அடுத்து மல்லாவி, துணுக்காய் போன்ற பகுதிகளை நோக்கி நகர முற்படலாம்.

அவ்வாறு நகர்ந்தால்கூட புலிகள் பாரிய எதிர்ப்பை காண்பிக்க மாட்டார்கள் என்றுதான் கருதவேண்டி உள்ளது.

மல்லாவிவரை படையினர் பரந்து நிலை கொள்வது புலிகளுக்கு இராணுவத் தந்திரரீதியில் பெரிய பாதகமல்ல. சாதகமே.

வன்னியில் 'யுத்த கோஷ' இராணுவ நடவடிக்கைக்கு முன்னர் பெரும் படைக் குவிப்பும், புதிய இராணுவ தளபாடக் குவிப்பும் நடந்தன.

ஏற்கனவே வன்னியில் உள்ள படையினர் எண்ணிக்கை புலிகளது ஆட்பலத்தைவிட பல மடங்கு அதிகம். புதிதாக மேலும் குவிக்கப்பட்டதால் மேலும் ஆட்பலம் அதிகம்.

இவ்வாறான நிலையில், ஆட்பலம் கூடிய அணியை எதிர்கொள்ளும், ஆட்பலம் குறைந்த அணி சில தந்திரங்களை கையாண்டே பலத்தை சமப்படுத்திக் கொள்ளும்.

படையினரை பல முனைகளில் தாக்கி திசை திருப்பி தற்காப்பு நிலைக்குள் முடக்குவது. வேறு திசைகளில் இழுத்து படை பலத்தின் செறிவை குறைத்து பலவீனப்படுத்துவது போன்ற தந்திரங்களை கையாளும்.

ஆனால், வன்னியில் புலிகளுக்கு அவ்வாறான தந்திரங்களை கையாளும் அவசியமே இல்லாமல், படையினரே பல திசைகளில் தம்மைத் தாமே இழுத்துக்கொண்டு நீண்டு விரிந்து, அகலக் கால்வைத்து நிற்கின்றனர்.

இது இராணுவ ரீதியில் புலிகளை பலவீனப்படுத்துவதாக நினைத்தபடி, படையினர் தம்மைத் தாமே பலவீனப்படுத்துவதாகவே இருக்கிறது.

இது படை உயர் மட்டங்களுக்கும் தெரியாத ஒன்றல்ல. ஆனால், ஆளும் தரப்பின் அரசியல் பிரசாரத்திற்கு வெற்றிச் செய்திகள் சில தேவைப்படும்போது, படைகள் அதற்கேற்ப நகரவேண்டியுள்ளது.

உடனடி அரசியல் நலன், இராணுவ நலன் என்ற இரு தோணிகளில் கால்வைத்தபடி எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைதான் 'யுத்த கோஷ'.

ஆனால், புலிகளுக்கு இந்தப் பிரச்சனை கிடையாது. குறிப்பிட்ட பகுதிகளை கைப்பற்றி படைத்தரப்போ, அரசோ குதூகலிப்பது பற்றி அவர்கள் கவலைப்படமாட்டார்கள்.

வன்னிச் சமரில் எதிரியின் பிரதான இலக்கு எது? தமது பிரதான இலக்கு எது? தடுக்க வேண்டிய நகர்வுகள் எவை? தவிர்க்க வேண்டிய நகர்வுகள் எவை? தம்மை திசை திருப்பும் சமர்கள் எவை? போன்ற தெளிவுடனும், யுத்த தந்திரத்திலும் புலிகள் ஊன்றி நிற்க முடியும்.

பெரும் ஆட்பல, படைக்கல பலம் கொண்ட படையை சகல முனைகளிலும் தடுத்து நிறுத்தினால், புலிகளது ஆட்பலம்தான் சேதமாகும். தவிர ஒரே பகுதிகளுக்குள் பெரும் படை பலத்தை முடக்க முயன்றால் ஒருகட்டத்தில் ஒன்று குவித்த பெரும் பலத்தை சந்திக்க வேண்டியிருக்கும்.

எனவேதான் 'ஜயசிக்குறுய்' சமரிலும் வவுனியா-யாழ் சாலையில் படை நகர்வதை மறிப்புச் சமர் மூலம் மூன்று நான்கு மாதங்களாக தடுத்து நிறுத்திய புலிகள், பின்னர் சாலையின் கிழக்குப் பக்கம் உட்பாதைகள் வழியாக நகருவதை மூர்க்கமாக தடுக்கவில்லை.

படையினரை உட்பாதைகளால் நகர அனுமதித்தாலும், எங்கு அவர்களை தடுக்க வேண்டும் என்று புலிகள் தீர்மானித்து, மறிப்பு சமர் தொடங்கினரோ, அப்பகுதிகளைப் படையினரால் தாண்ட முடியவில்லை.

தற்போது மாங்குளம், ஒட்டிசுட்டான், பரந்தன் ஆகிய பகுதிகளில் புலிகள் மறிப்புச் சமர் நடத்துகின்றனர். அங்கு தமது அரண்களை தாண்ட முடியாது படையினரை குறிப்பிட்ட பகுதிகளுக்குள் முடக்கிவைத்துள்ளனர்.

வன்னிச் சமரில் படையினரின் இலக்குகள் எவை? புலிகளது தளப்பிரதேசத்தை இரண்டாக பிரிப்பது. தளப் பிரதேசத்திற்குள்ளும் ஒட்டிசுட்டான் ஊடாக மூக்கை நீட்டுவது. வவுனியா, யாழ் இராணுவ தரை விநியோகப் பாதையை திறப்பது.

இந்த மூன்று இலக்கையும் படையினர் எட்ட வேண்டுமானால், மாங்குளம், ஒட்டிசுட்டான், பரந்தன் ஆகிய மும்முனைகள்தான் கேந்திரமான சண்டை முனைகளாகும்.

அந்த மூன்று முனைகளிலும் தொடர்ந்து முன்னேறுவது முடியாத நிலையில்தான் சாலையின் மேற்குப்புறமாக யுத்த கோஷ ஆரம்பிக்கப்பட்டது.

யுத்த கோஷவுக்கு மூன்று இலக்குகள் இருக்கக்கூடும்.

1) சாலையின் கிழக்கே உள்ள புலியணிகளை மேற்கே பாரிய சண்டைக்கு இழுத்து வருவது, அதனால் சாலையின் கிழக்கே ஒட்டிசுட்டானிலும், மாங்குளம், மற்றும் பரந்தன் முனையிலும் புலிகளது பலம் குறையும். எனவே அந்த முனைகளால் உடைத்துக் கொண்டு முன்னேறலாம்.

2) புலிகள் திசை திரும்பாது விட்டால், சாலையின் மேற்கே பரவி, அப்படியே மன்னார் பூநகரி சாலைக்கு போய்ச் சேருவது. அச் சாலையை கைப்பற்ற மன்னார் படையினருக்கு உதவுவது. பக்கபலமாக காப்பளிப்பது.

3) அரசின் தேர்தல் பிரச்சாரத்திற்கு வெற்றிச் செய்திகளால் உத்வேகம் தருவது.

இந்த மூன்றில் கடைசி நோக்கம் மட்டுமே தற்போது நிறைவேறியுள்ளது. வன்னிப் பூகோளம் அங்குள்ள சூழ்நிலை பற்றி தென்னிலங்கை வாக்காளர்கள் அறிந்தவர்களல்ல. அதனால்தான் வெற்றிப் பிரசாரம் ஓரளவு எடுபடக்கூடியதாக இருக்கிறது.

மரபுச் சமரிலும் இரண்டு யுத்த முறைகள் உள்ளன.

1) இயங்கிக் கொண்டிருக்கும் யுத்த முறை.
2) நிலைகொண்டிருக்கும் யுத்த முறை.

வன்னிச் சமரில் வவுனியா-யாழ் சாலையிலும் அதன் கிழக்கேயும் நிலைகொண்டிருக்கும் யுத்த முறையை புலிகள் கைக்கொள்கின்றனர். இந்த யுத்த முறையில் சில கேந்திர முக்கியமான நிலைகளை பிடிவாதமாக பாதுகாத்தாக வேண்டும். எதிரியிடம் இருந்து தற்காப்பு தேடும் நோக்கம், எதிரியை தாக்கும் நோக்கம் இரண்டும் இதில் அடங்கியிருக்கும்.

ஆனால், சாலையின் மேற்குப் பகுதியில் இயங்கிக்கொண்டிருக்கும் யுத்த முறையையே புலிகள் கையாளுகின்றனர்.

படையினர் முன்னேறும்போது விலகிவிடுவது, பின்னர் படையினரின் பலவீனமான முனைகளில் தாக்குதல் நடத்துவது என்பன இயங்கும் யுத்த முறையில் அடங்கும். இதனை நடமாடும் யுத்தம் என்றும் கூறலாம்.

சாலையின் மேற்குப் பகுதியில் கிழக்கு பகுதியைவிட அதிகமான சிறு தாக்குதல்கள் இடம் பெறப்போகின்றன. படையினர் நீண்டு பரந்து பரவியுள்ளதால் இங்கு ஊடுருவி புலிகள் தாக்குவதற்கும், கண்ணிவெடித் தாக்குதல், சினைப்பர் தாக்குதல், கிளைமோர் தாக்குதல் போன்றவற்றை மேற்கொள்ளவும் வாய்ப்புக்கள் உள்ளன.

தற்போது சாலையின் மேற்கே, பூவரசங்குளம் முதல் மடு உட்பட மூன்று முறிப்புவரை படையினர் நிலைகொண்டுள்ள பகுதிக்குள் புலிகளும் நடமாடுகின்றனர். இப் பகுதிகளை அங்குலம் அங்குலமாக பாதுகாப்பது முடியாத காரியம்.

28.03.99 அன்று மூன்று முறிப்பில் ஜீப் வண்டியில் சென்ற வான்படையினர் நான்குபேர் புலிகளது கண்ணி வெடித் தாக்குதலில் பலியானார்கள். மூன்று முறிப்பு கடந்த பலமாதங்களாக படையினர் வசமுள்ள பகுதியாகும். அங்கு ஊடுருவி கண்ணி வெடித் தாக்குதல் நடந்துள்ளது.

ஏற்கனவே, இரணை இலுப்பைக் குளத்திற்கும், பூவரசங்குளத்திற்கும் இடைப்பட்ட மடுக்குளம் என்ற இடத்திலும் புலிகள் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இன்னொன்றையும் கவனித்தாக வேண்டும். 'யுத்த கோஷ' படைநகர்வை புலிகள் தடுக்காத போதும், அந்த நடவடிக்கையின் இலக்குகளில் மன்னார்-பூநகரி சாலை திறப்புக்கான நகர்வை தடுத்து விட்டனர். தள்ளாடி முகாம் தாக்குதல் மூலம் அந்த நகர்வு தடுக்கப்பட்டது.

எனவே, வன்னிச் சமரில் படையினரின் பிரதான இராணுவ நோக்கங்கள் ஈடேறாது தடுப்பதில் புலிகள் வெற்றி பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

தள்ளாடி முகாம் தாக்குதல்கூட புலிகளது நடவடிக்கையில் புதியதொரு கட்டம்தான், தம்மில் எவ்வித இழப்பும் இன்றி எட்ட நின்றபடியே பாரிய இழப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

ஆட்பலம் மூலம் முகாமைத் தாக்கி இத்தகைய இழப்பை ஏற்படுத்துவதாயின் புலிகள் தரப்பில் உயிரிழப்புக்கள் நேர்ந்திருக்கும். பரந்த வெளியில் உள்ள முகாமை தாக்கி இத்தகைய இழப்பை ஏற்படுத்துவது சுலபமும் அல்ல. எனவே ஆட்டிலறி, மோட்டார் பலம் இருப்பதால் தமக்கு இழப்பின்றி, படையினருக்கு இழப்பை ஏற்படுத்தும் தாக்குதலை புலிகள் மேற்கொள்ள முடிந்தது.

புலிகளை பலவீனமாக்கி வருவதாக அரசு கூறுகிற அதே நேரம், புலிகளது தாக்குதல் முறைகள் முன்பைவிட இராணுவ நுட்பம் சேர்ந்தவையாக இருப்பதையே கள நிலவரம் காண்பிக்கிறது.

இதே நேரம், புலிகளில் இன்னமும் இரண்டாயிரம் பேர் மட்டுமே இருப்பார்கள் எனவும், அவர்களையும் வெற்றிகொள்ள மேலும் இருபதாயிரம் பேர் தேவை எனவும் அமைச்சர் ஜெனரல் ரத்வத்தை கூறியுள்ளார்.

அவரது கணக்குப்படி பார்த்தால் ஒரு புலிக்கு கிட்டத்தட்ட 25 படைவீரர்கள் என்ற கணக்கில் சண்டையிட வேண்டியுள்ளதாக அர்த்தப்படுகிறது.

புலிகள் எத்தனைபேர் உள்ளனர் என்று அமைச்சர் கூறிய எண்ணிக்கை மிக மிகக் குறைவு என்பதால், மேலும் 20 ஆயிரம் பேர் சேர்க்கப்பட்டால்கூட யுத்தம் முடிவடையாது போலுள்ளது. ஆனாலும்அமைச்சர் ரத்வத்தை புலிகளது சண்டைத்திறன் பற்றி உயர்ந்த அபிப்பிராயம் கொண்டுள்ளார் என்றே தெரிகிறது.

சண்டையில் எதிரியின் திறமைகளை மதிப்பது சண்டையிடும் தரப்புகளுக்கு நாகரிகம் என்று கூறப்படுவதுண்டு.

●●●

தள்ளாடி முகாமை புலிகள் புதிய ஆயுதம் ஒன்றால் தாக்கியதாக படையினர் கூறியதாக செய்திகள் வந்தன.

ஒரே நேரத்தில் பல ஷெல்கள் வந்து விழுந்ததால், பல குழல் ஆட்டிலெறியால் தாக்கியிருக்கலாம் என்று கருதுகின்றனர்.

ஆனால், பல குழல் ஆட்டிலெறியால் தாக்கினால்தான் ஒரே நேரத்தில் பல ஷெல்கள் ஏவலாம் என்றில்லை.

குறிப்பிட்ட ஏவுதளம் ஒன்றில் ஒன்றுக்கு மேற்பட்ட நீண்டதூர மோட்டார்களை அடுக்கி வைத்து, ஒரே நேரத்தில் ஷெல்களைப் போடலாம்.

புலிகளிடம் பல குழல் ஆட்டிலெறி இருக்கிறதா? இல்லையா? என்பதை தற்போதுவரை நாமறியோம்.

ஆனால் அந்த கள ஆயுதம் பற்றிய விபரங்களை மட்டும் பார்க்க முடியும்.

மல்ரிபிள் ரொக்கட் சிஷ்டம் என்று அழைக்கப்படும் பல குழல் துப்பாக்கியும், ஆட்டிலெறி வகையைச் சேர்ந்ததே.

இதிலும் 107 எம்.எம், 122 எம்.எம், 130 எம்.எம்., 273 எம்.எம் என்று மேலும் பல ரகங்கள் உள்ளன.

இதில் 107 எம்.எம் மட்டும்தான் நம்நாட்டு களநிலைக்கு பயன்படுத்த முடியும். விலையும் ஓரளவு கட்டுப்படியாகும். அதுதவிர கொண்டு வந்து சேர்க்கக்கூடியதாகவும் இருக்கும்.

இந்த ரக ஆட்டிலெறியை சீனா இராணுவம் உபயோகிக்கிறது. பாலஸ்தீன கெரில்லாக்களும், ஆப்கான் படையினரும் பயன்படுத்துகின்றனர். (மேலதிக விபரத்திற்கு பெட்டிச் செய்தியை பார்க்கவும்)

ஆனால், புலிகளிடம் உள்ள 122 எம்.எம். ஹெவிற்சர் ஆட்டிலெறிகள், மற்றும் நீண்ட தூர மோட்டார்களைவிட இந்த 107 எம்.எம். பல குழல் ஆட்டிலெறியின் சுடுதூரம் மிகக் குறைவு. ஆக, 8.5 கிலோ மீட்டர்தான் சுடுதூரம்.

ஆனால் படையினரும், சில இராணுவ ஆய்வாளர்களும் புலிகள் விடத்தல் தீவில் இருந்தே தாக்கியதாக கூறுகின்றனர். தள்ளாடியில் இருந்து விடத்தல்தீவு வட கிழக்காக 17 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அதன் அருகே பாலமடு உள்ளது.

ஆண்டான் குளத்திலிருந்து தாக்கி இருக்கலாம் என்று இன்னொரு செய்தி கூறியது. ஆண்டான் குளம் தள்ளாடியில் இருந்து 11 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.

எனவே, பல குழாய் ஆட்டிலெறி என்றால் படையினர் கூறுகின்ற மேற்படி பகுதிகளில் இருந்து தாக்கியிருக்க முடியாது. மேலும் அருகே வந்திருக்க வேண்டும். ஆனால், முகாம் அருகே கொண்டுவந்து தாக்கிவிட்டு விரைவாக நகர்த்திச் செல்வது கடினம்.

107 எம்.எம். பலகுழல் ஆட்டிலெறிக்கு அடுத்தது 122 எம்.எம். பலகுழல் ஆட்டிலெறி. இதனை கொள்வனவு செய்தால் இலங்கை அரசுக்கே செலவை சந்திக்க முடியாது. தவிர இதனை நகர்த்தி செல்ல கூடிய போர் முனை இங்கில்லை. இதன் சுடுதூரம் என்ன தெரியுமா? 450 கிலோ மீட்டர். வன்னியில் இருந்து கொழும்புக்கும் ஏவலாம். ஏன் இந்தியாவில் கூட போய் விழவைக்கலாம். எனவே, 107 எம்.எம்.ரகம்தான் புலிகளால் பாவிக்கப்படக்கூடியது.

அது புலிகளிடம் இருந்தால்கூட தள்ளாடி முகாம் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டிருக்க முடியாது.

ஹெவிச்சர் ஆட்டிலெறியும், மோட்டார்களுமே ஒரே நேரத்தில் ஷெல்களைப் பொழிந்துள்ளன.

நாரதர்

## 107 எம்.எம்.ரைப் 63 மல்ரிப்பிள் ரொக்கற் சிஸ்டம்



முதல் கண்டுபிடிப்பு 1950களில்- முதல தயாரிப்பு 1959
பாவனையிலுள்ள நாடுகள்- சீனா, ஈரான், வடகொரியா, சிரியா, அல்பேனியா, வியட்நாம், கம்போடியா, ஷயர், சாட், மற்றும் பல்வேறு கெரில்லா படைகளிடமும்.
இயக்குவதற்கு 5 பேர் தேவை.
எடை (தயார் நிலையில்)-611 கிலோ
சுடு தூரம் 8.5 கிலோமீட்டர்.

சீனா இராணுவம் அதிகளவில் உபயோகிக்கின்றது. பாலஸ்தீன கெரில்லாக்களும் ஆப்கானின் படையினரும் உபயோகிக்கின்றனர். மொத்தம் மூன்று அடுக்குகள் கொண்ட இதன் பிரதான பகுதி ஒவ்வொன்றிலும் நான்கு ரொக்கற் தாங்கு சுடு குழாய்கள் உள்ளன. மொத்தம் 12 குழாய்கள்.

சுமார் 80 தொடக்கம் 90 சென்றிமீட்டர் (ஒவ்வொரு மாதிரிகளில் அளவு வேறுபடும்) நீளமான ரொக்கற்கள் 12ஐ இச் சுடுகுழாய்களில் பொருத்தலாம். ஏழிலிருந்து 9 செக்கன்களுக்குள் எல்லா ரொக்கற்களையும் சுட்டு விடலாம். ஒவ்வொன்றினதும் எடை 18 கிலோ. மேலும், கொண்டு செல்லும் அடுத்த 12 ரொக்கற்றுக்களையும் 3 நிமிடங்களுள் பொருத்திச் சுடலாம்.
(சில கெரில்லாக் குழுக்களிடம் ஒரு சுடு குழல் மட்டும் கொண்ட வகையும் உண்டு. இதன் எடை 22.5 கிலோ)

இவற்றினை வேறு வாகனத்தில் பொருத்தி இழுத்துச் சென்று வேண்டிய இடத்தில் நிலைப்படுத்தலாம். உயரமான மலைப்பாங்கான இடத்திலிருந்து பள்ளமான பகுதியை நோக்கி இலக்கு வைத்துச்சுட இவை சிறந்தவை.

## அதிரடி அப்பாத்துரை



***தலைநகரில்*** தமிழ்க் கட்சிகள் ஒன்று கூடி எடுத்த தீர்மானங்களைப் பார்த்தால் புல்லரிக்குது. "வன்னிக்கு உணவு அனுப்பு," "வலிகாமத்தில் மக்களை குடியேற அனுமதி!" என்று தீர்மானம். இப்படித் தீர்மானம் போட கட்சிகள் ஏன்? நாலு பட்சிகள் போதாதோ? கட்சிகளின் பணி கோரிக்கை விட்டுக் கொண்டு இருப்பது மட்டுமல்ல, நிர்ப்பந்தம் கொடுப்பது! அதுக்குத் தயாராக இருந்தால் வரவேற்கலாம்.

***தீண்டப்படாத கட்சிகளுடன்*** கூட்டான கட்சி ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் கைகோர்த்தது. கொழும்பில் மட்டும் கையைப் பின்னுக்குக் கட்டிக்கொண்டது. "நாங்கள் ஆயுதம் ஏந்தாத ஆட்களல்லோ? அவையுடன் சேரலாமோ?" என்று வித்தாரம் கதைச்சவை. இப்போது கொழும்பிலும் கைகுலுக்கியிருக்கினம். ஆனாலும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளவில்லையாம். ஏனைய தமிழ்க் கட்சித் தலைவர்கள் தங்களுக்கு சமமான ஆட்களல்ல என்று பண்ணையார்கள் நினைத்தார்களோ தெரியவில்லை. ஏனைய தமிழ்க் கட்சிகளும் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. யார் வந்தால் என்ன? ஒற்றுமை என்று காட்டினால் போதும்தானே! இந்தியா சென்றுள்ள முன்னாள் முதல்வர் திரும்பி வர முன்பாக, தன் பெயரை நற்பெயராக்க விரும்பும் கட்சிச் செயலாளர் ஒருவர்தான் கூட்ட அழைப்பாளராக முன்நின்றவராம்!

***கூட்டான கட்சிக்குள்*** எத்தனை குரல்கள்? காணிசுவீகரிப்பை நிறுத்தும் முடிவை வரவேற்பதாக தனியார் வானொலிக்கு சங்கதியார் பேட்டி. மற்றொரு தனியார் வானொலியில், அதே தினத்தில் சேனாதிபதியார் கூறுகிறார்; 'வாக்குறுதிகளை நம்பமுடியாது!" இதில் நமது வாக்கு சேனாதிபதியாருக்கே!

***கூட்டான கட்சியின்*** நீலத்தாரின் சிபாரிசோடு அரச பத்திரிகையாளராகியுள்ளார் டி.பி.ஜெயராஜ். அரச நிறுவனம் வெளியிடும் தமிழ் சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் இருந்தபடி, 'ஐலண்டு'க்கும் எழுதுகிறார். ஐலண்ட்டுக்கு தெரியாமல் இன்னொரு ஆங்கிலப் பத்திரிகையில் புனை பெயரில் எழுதுகிறார். 'முரசை' பற்றி அதே பத்திரிகையில் பலதடவை முழுப் பக்க கட்டுரை எழுதி கைவலிக்க சேறு பூசி களைத்து விட்டார். ரெண்டு எழுத்தாரை ஏமாற்ற நினைத்து கனடாவில் இருட்டடி வாங்கியவர். சமீபத்திலும் ஒரு தமாஷ்! ரெண்டு எழுத்தார் ஈ.பி.ஆர். எல்.எஃப்பை தடைசெய்யும் கட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இரண்டாக பிரிந்து இயங்கத் தொடங்கிவிட்டது. அது கூடத் தெரியாமல் நாபாவின் தலைமையில் இயக்கம் இந்தியாவில் ஒன்றாக இருந்ததுபோல எழுதியிருக்கிறார். அந்த இயக்க பிளவுக்கான காரணங்கள்கூட இவருக்கு தெரியவில்லை. பகிரங்கமாக தெரிந்த விஷயங்களிலேயே தெளிவு இல்லாமல் முரசுமீது சேறு பூசினால் எடுபடுமோ? இராணுவ அதிகாரி ஒருவர்மீது 'முரசு' பிழையாக எழுதிவிட்டதாம், சிண்டு முடியப்பார்க்கிறார். நாம் இப்போதும் கூறுகிறோம், நாம் சரியென்று பட்டதைத்தான் எழுதினோம். அதுசரி, ஏன் இந்த சாடல்? நீலமானவர் வாங்கிக் கொடுத்த கொலஷிப்புக்கு நன்றிக் கடன்! அவர் மனம் குளிர இவர் சேறு பூசுகிறாராம்.

***தலைநகரில்*** 'கட் அவுட்'களுக்குக் கெட் அவுட் என்று செய்தி வந்தது. தற்போதும் அதிகாரமுள்ள சக்தியானவரின் கட்-அவுட் மருதானையில் காணப்படுகிறது.

***வெள்ளவத்தையில்*** புதிய இடதுசாரி முன்னணியினர் வலிகாமம் நிலப் பறிப்பை கண்டித்து போராட்டம் நடத்தினார்கள். பெரும்பான்மை இன சகோதரர்களும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்க விடயம். புள்ளடி போடுவதாக இருந்தால் இவைக்குதான் போடவேண்டும். தமிழ்க் கட்சிகளே செய்யத் துணியாத போராட்டத்தை கொழும்பில் நடத்தியிருக்கினம். அதுமட்டுமல்ல, கலாநிதி விக்கிரமபாகு- இன்று, நேற்றல்ல- நீண்டகாலமாக நியாயத்தை பேசிவரும் மனுசர். வேறு மாதிரி அரசியல் பண்ணியிருந்தால் மந்திரியாகியும் இருக்கலாம். இப்படியான ஆட்களை ஊக்குவிக்காமல், "அரசியல் கெட்டுப் போச்சு!" என்று கூறுவதும் போலித்தனம்தானே!

***"அந்த இயக்கத்தின்*** கடைசி ஆள் உள்ளவரை விடமாட்டோம்!" என்று கழக மாணிக்கம் சீருடைக்காரரிடமே சூளுரைத்திருக்கிறாராம். ஆனால் கழக அரசியல் பிரிவு அதே இயக்கத்துடன் ஐக்கியம் பேசியிருக்கினம். இது நிலைக்கும் போலத் தெரியவில்லை!

***வவுனியாவில்*** இரண்டு இயக்கக்காரர்களிடமும் சீருடையினர் என்ன கூறியிருக்கினம் தெரியுமோ? "செய்யுங்கோ, எங்களிடம் மாட்டுப்படாதமாதிரி செய்யுங்கோ" ஆகா.. இதுதான் மதியுரை!

***மலையக தனித்துவக் கட்சி*** பேரணிக்குள் தனி அணியாக தம் ஆட்களுக்காக மட்டும் கரிசனம் காட்டுகினமாம். இது ஏனைய அமைப்பு வேட்பாளர்களுக்கு வருத்தத்தை உண்டு பண்ணியிருக்கிறதாம்.

***இலங்கை அரச*** தொலைக்காட்சி தமிழ்ப் பிரிவுக்கு புதிதாக ஆட்களைப் எடுப்பதற்கு விநோதமான முறையில் திருமதி ஒருவர் நேர் முகப்பரீட்சை நடத்தியுள்ளாராம். பகிரங்கமாக அறிவிக்காது- தனது வீட்டில்-தனக்கு வேண்டப்பட்டவர்களை அழைத்து பரீட்சை வைத்தாராம் அந்த விநோதமான திருமதி. அந்தத் திருமதி தமிழ்ப்பிரிவை எக்கச்சக்கமாக வளர்ப்பார் என்று கருதி அரசால் நியமிக்கப்பட்டவர். ஆனால் அவர் யார் யாரையோ வளர்க்கிறார்!

***இந்தவாரப் பொன்மொழி:***

**"பகைவனுக்கு
கடன் கொடு,
அவனைப் பெறுவாய்!
நண்பனுக்கு
கடன் கொடு,
அவனை இழப்பாய்!"**

# அரசியல் தொடர்

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அற்புதன் எழுதுவது

227

# பிறந்த தினமும் இறந்த நாளும்

பெங்களூரில் சிவராசனுக்கு வீடு வாடகைக்கு கொடுத்தவர் ரங்கநாத். அவர் மனைவி மிதுளா.

ரங்கநாத்தும் அவரது மனைவியும் 18.08.91 அன்று கைதுசெய்யப்பட்டனர்.

அதற்கு முன்பாக அதிரடியான சில நடவடிக்கைகளில் சிறப்பு புலனாய்வுக்குழு இறங்கியது.

கோயம்புத்தூரில் கைதான விக்கி மூலம், சிவராசன், சுபா ஆகியோர் பெங்களூரில் தங்கியிருப்பது தெரிந்ததுமே, அங்கு கண்காணிப்புகள் முடுக்கிவிடப்பட்டன.

சிவராசன், சுபா ஆகியோர் அடிக்கடி வீடு மாறியதால் உடனடியாக கண்டு பிடிக்க முடியவில்லை.

கிட்டத்தட்ட ஒரு மாத காலம் பெங்களூரில் கண்காணிப்பு மேற்கொள்ளப் பட்டு வந்தது.

பெங்களூரில் உள்ள இரண்டு கிராமங்களில் புலிகள் தங்கியிருந்தனர். தமிழ் நாட்டில் புலிகளை தீவிரமாகத் தேடியதால், பெங்களூரில் உள்ள கிராமங்களில் அவர்களை தங்க வைத்தனர் ஆதரவாளர்கள்.

## சுற்றிவளைப்பு

தீவிர விசாரணையின் பின்னர் புலிகள் தங்கியுள்ள கிராமங்கள் பற்றிய தகவல் புலனாய்வுக்குழுவுக்கு கிடைத்தது.

18.08.91 அன்று அதிகாலையில் பெங்களூரில் உள்ள 'விருட்டா', 'முதாதி' ஆகிய இரண்டு கிராமங்கள் அதிரடியாக சுற்றி வளைக்கப்பட்டன.

கர்நாடகப் பொலிஸ் படை உதவியுடன் தேடுதல் வேட்டை நடந்தது.

அக் கிராமங்களில் தங்கியிருந்த புலிகள் இத் திடீர் சுற்றிவளைப்பை எதிர்பார்க்கவில்லை.

புலிகள் தங்கியிருந்த வீடுகள் சுற்றி வளைக்கப்பட்டதும், உள்ளே இருந்தவர்கள் சயனைட் சாப்பிட்டார்கள்.

மொத்தம் 12 புலிகள் அன்றைய சுற்றி வளைப்பில் சயனைட் விழுங்கி பலியானார்கள். ஐந்துபேர் பிடிபட்டனர். இரண்டு புலிகள் எப்படியோ தப்பிச் சென்றுவிட்டனர்.

அங்கு நடந்த தேடுதல் வேட்டைகளில் சிலரது நாட்குறிப்புக்களை புரட்டியபோது, ரங்கநாத் வீட்டு முகவரி ஒரு நாட்குறிப்பில் இருந்தது. பெங்களூரிலுள்ள வேறு சில முகவரிகளும் இருந்தன.

ஒவ்வொரு முகவரியாக துரித வேகத்தில் விசாரணை நடந்தது. சந்தேகப்படும் படியாக இருந்தது ரங்கநாத் முகவரிதான்.

ரங்கநாத்தை 18.08.91 அன்று மாலையே பிடித்துவிட்டனர். வேறு வழியின்றி ரங்கநாத் உண்மைகளைக் கூறினார்.

பெங்களூரில் கொணானகுன்ரே என்னும் இடத்திலுள்ள ரங்கநாத்துக்கு சொந்தமான வீட்டிலேயே சிவராசன், சுபா ஆகியோரும், அவர்களுக்கு பாதுகாப்பாக ஐந்து புலிகளும் சில நாட்கள் தங்கியிருந்தனர்.

ஆனால், ரங்கநாத்துக்கு அங்கு எத்தனைபேர் தங்கியிருக்கிறார்கள் என்பது தெரியாது. அப்போதும் அங்குதான் சிவராசன், சுபா தங்கியுள்ளனரா வேறு எங்காவது போய்விட்டனரா? என்பதும் தெரியாது.

## நிதானமான முயற்சி

சிறப்புப் புலனாய்வுக்குழு சிவராசன், சுபா ஆகியோரை உயிருடன் பிடிக்க விரும்பவில்லை என்று புலிகளது தமிழக ஆதரவாளர்கள் தற்போதும் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

ராஜீவ் கொலைக்கு புலிகள் காரணமல்ல என்று வாதாடும் அவர்கள், சிவராசன் உயிரோடு பிடிபட்டிருந்தால் அந்த உண்மை தெரியவந்திருக்கும் என்றும், அதன் காரணமாகவே சிவராசனை உயிருடன் பிடிக்க விரும்பவில்லை என்றும் கூறிவருகிறார்கள்.

ஆனால், உண்மை அதுவல்ல. சிவராசன், சுபா ஆகியோரை எப்படியாவது உயிருடன் பிடிப்பதற்கே சிறப்புப் புலனாய்வுக் குழு முழுமையான கவனம் செலுத்தியது.

அதனால்தான், சிவராசன், சுபா தங்கியிருந்த வீட்டை கண்டு பிடித்த பின்னரும், அவசரப்படாது ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்தனர்.

சிவராசன், சுபா ஆகியோர் உள்ளே இருப்பதை உறுதி செய்வது முதல் கட்டம்.

உள்ளே எத்தனைபேர் இருக்கிறார்கள் என்பதை அறிவது இரண்டாவது கட்டம்.

கொமாண்டோ பயிற்சி பெற்ற கறுப்புப் பூனைகளை அனுப்பி சிவராசன், சுபாவை உயிருடன் பிடிப்பது மூன்றாவது கட்டம்.

உடனடியாக புதுடில்லிக்கு தகவல் அனுப்பி கறுப்பு பூனைகளை அனுப்புமாறு கூறப்பட்டது.

சிவராசன் தங்கியிருந்த வீட்டைப் பற்றிய மேலதிக தகவலை அறிய புலனாய்வுக்குழு தேர்ந்தெடுத்த ஆள் பால்க்காரி.

சிவராசன், சுபா ஆகியோருக்கும் அப்பகுதியில் உள்ள வீடுகளுக்கும் தினமும் காலையில் பால் விநியோகிக்கும் பெண் ஒருவர் இருந்தார்.

அவரைத் தேடிப்பிடித்து விசாரித்தது பொலிஸ். 18ம் திகதி அன்று இரவே அவரை பிடித்து விசாரித்தனர்.

பால்காரியிடம் சுபாதான் கதவைத் திறந்து பால் வாங்குவார். வேறு விபரங்கள் பால்காரப் பெண்ணுக்கு தெரியாது.

எத்தனை லீட்டர் பால் கொடுக்கப்படுகிறது என்பதை வைத்து, உள்ளே எத்தனைபோர் தங்கியுள்ளனர் என்பதை குத்துமதிப்பாக தீர்மானித்தனர்.

## காலையில்

19ம் திகதி காலையிலும் பால்காரப் பெண்மணி பால்கொடுக்கச் சென்று வந்தார். மீண்டும் ஒரு முறை உறுதி செய்தாகிவிட்டது.

அந்தப் பகுதி முழுவதும் 19ம் திகதி காலையிலேயே பொலிஸ் குவிக்கப்பட்டது. சுமார் இரண்டாயிரம் பொலிசார் குவிக்கப் பட்டனர்.

இத்தனைக்கும் சிவராசன் தங்கியிருந்த வீட்டுக்கு அருகில் மட்டும் பொலிஸ் தலை காட்டவேயில்லை.

தங்கள் வீடு கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது என்பதோ, சுற்றி வளைக்கப்பட்டுள்ளோம் என்பதோ சிவராசன் ஆட்களுக்கு தெரியக் கூடாது என்று எச்சரிக்கையாக இருந்தனர்.

புலிகள் என்றாலே சாகசத்துக்கு பெயர் போனவர்கள் என்பதால், சிவராசன் ஆட்களிடம் இருந்து திடீர் தாக்குதல் ஒன்றை எதிர்பார்த்தனர்.

தாக்கிவிட்டு தப்பிச் செல்லலாம் என்று கருதி, அப்பகுதியைவிட்டு வெளியேறக் கூடிய பாதைகளில் எல்லாம் காவலரண்கள் அமைக்கப்பட்டன.



சிவராசன்-சுபா

சிவில் உடையில் நடமாடிய புலனாய்வுப் பிரிவினர் சிவராசன் ஆட்கள் தங்கியிருந்த வீட்டுப் பக்கம் சந்தேகம் வராதபடி நடமாடினார்கள்.

19ம் திகதியே வீட்டுக்குள் புகுந்திருக்கலாம். ஒரு முக்கிய காரணத்திற்காக 20ம் திகதி காலையில் நடவடிக்கையில் ஈடுபட முடிவெடுத்தனர்.

அது என்ன முக்கியமான காரணம்?

ஆகஸ்ட் 20ம் திகதி ராஜீவ் காந்தியின் பிறந்தநாள்!

ராஜீவ் காந்தியின் பிறந்த நாளில் கொலை வழக்கின் முக்கிய சூத்திரதாரிகள் கைதானால், அதைவிடப் பெரிய வெற்றி வேறு என்ன இருக்கிறது? அதனால்தான் பொறுத்தது தான் பொறுத்தோம், 20ம் திகதிவரை ஒரு நாள் பொறுப்போம் என்று காத்திருந்தனர்.

புதுடில்லியில் இருந்து கருப்பு பூனைகள் வரும்வரை காத்திருந்ததாக கூறப்பட்டது நம்பும்படியாக இருக்கவில்லை. அவர்கள் 19ம் திகதியே வந்திருக்க முடியும்.

## இரவில்

ஆனால் சிவராசன் மிகுந்த புத்திசாலி. 19ம் திகதி தாம் தங்கியிருந்த வீட்டைச் சுற்றி சந்தேகமான நடமாட்டங்கள் இருப்பதை அறிந்து விட்டார்.

அதுமட்டுமன்றி, அன்று சிவராசனை வெளியே இருந்து சென்று தொடர்பு கொள்ளும் நபரும் வரவில்லை.

பொலிசாரின் நடமாட்டத்தை அவதானித்த அந்த நபர் நழுவிவிட்டார்.

எனவே, சந்தேகத்தோடு சன்னல் இடுக்குகள் ஊடாக வெளி நடமாட்டங்களை அவதானிக்க தொடங்கிவிட்டனர்.

அவர்கள் தம்மை அவதானிக்கிறார்கள் என்பது புலனாய்வுக் குழுவினருக்கே தெரியவில்லை.

19.08.91 இரவு எதிர்பாராத சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

இரவு ஏழுமணியளவில் மரக்குற்றிகளை ஏற்றிய ட்ரக் வண்டி ஒன்று சிவராசன் ஆட்கள் தங்கியிருந்த வீட்டுக்கு முன்பாக சென்றது.

பதுங்கியிருந்த பொலிசார் உஷார் அடைந்தனர். சிவராசனை அழைத்துச் செல்லத்தான் வாகனம் வருகிறது. சண்டைக்கு தயாராக மரக்குற்றிகளுடன் வருகிறார்கள் என்று நினைத்துவிட்டனர்.

அதேசமயம் சிவராசன் ஆட்களும் விழிப்படைந்தனர். தங்களை கைது செய்யத்தான் ட்ரக் வண்டியில் கொமாண்டோ வருகிறது என்று நினைத்தனர்.

அதனால் ட்ரக் வண்டியை நோக்கி வீட்டுக்குள் இருந்து சுடத் தொடங்கி விட்டனர்.

ட்ரக் வண்டிக்காரர் பயந்து போய் ஓடி விட்டார். இந்தச் சம்பவம் இரு தரப்பையும் பதட்டம் அடைய வைத்துவிட்டது.

19ம் திகதி இரவு முழுக்க மயான அமைதி நிலவியது.

20.08.91 காலையில் கறுப்பு பூனைகள் செயலில் இறங்கினார்கள். கறுப்பு பூனைகள் வந்துள்ளதையும், தம்மை உயிரோடு பிடிக்கவே பலத்த முயற்சிகள் நடப்பதையும் வீட்டுக்குள் இருக்கும் சிவராசன் ஆட்கள் அறியமாட்டார்கள் என்றே புலனாய்வுக்குழு நினைத்தது.

ஆனால் நடந்த சம்பவங்களை வைத்துப் பார்க்கும்போது, உள்ளிருந்தவர்கள் வெளி நடப்பை நன்கறிந்து, தயாராகிவிட்டனர் என்று ஊகிக்க முடிகிறது.

## புகுந்தனர்

கறுப்புப் பூனைப் படையினர் வீட்டின் மேற் கூரையை தகர்த்து உள்ளே குதித்தனர்.

அங்கு ஏமாற்றம் காத்திருந்தது. யாரை உயிரோடு பிடிக்க வேண்டும் என்று பாரிய முயற்சி செய்தார்களோ அவர்கள் இறந்து கிடந்தனர்.

சிறப்புப் புலனாய்வுக் குழு பொறுப்பதிகாரி கார்த்திகேயன் நேரடியாக அங்கு வந்திருந்தார்.

ஏமாற்றத்தோடு அவரும் வீட்டுக்குள் சென்றார். சிறப்புப் புலனாய்வுக் குழுவுக்கு உலகப் புகழ் தேடித்தரத்தக்க மனிதர்கள் இருவரை இழந்துவிட்ட சோகம் கார்த்திகேயன் உட்பட புலனாய்வுக் குழுவினர் முகத்தில் குடி கொண்டிருந்தது.



ரங்கநாத்

புதுடில்லியில் இருந்து புறப்பட்டு வந்து, தோல்வியோடு திரும்புவதை நினைத்து கறுப்பு பூனைகளும் ஏமாற்றம் அடைந்தனர்.

சிவராசனின் வலப்பக்க நெற்றியில் கண்ணுக்கு மேலிருந்து குருதி சிந்திக்கொண்டிருந்தது. அவருக்கு அருகே சுபா இறந்து கிடந்தார். அவரைத் தொடர்ந்து ஐந்து புலிகள் இறந்து கிடந்தனர். மொத்தம் 7 பேர்.

சகலரும் சயனைட் விழுங்கிய பின்னர் சிவராசனும் சயனைட் விழுங்கினார். தனது குழுவில் ஒருவர்கூட உயிருடன் பிடிபடக் கூடாது என்பதில் சிவராசன் கவனம் கொண்டிருந்தார்.

இறுதியாக தானும் சயனைட் விழுங்கியதோடு, தனது பிஸ்டலால் தனது நெற்றியிலும் சுட்டுக் கொண்டார்.

'என் தலைவனது நாமம் மீது ஆணை. என்னால் இயக்கத்திற்கு எந்தக் களங்கமும் ஏற்படாது!' என்று பொட்டம்மானுக்கு கூறிய உறுதிமொழியை சிவராசன் காப்பாற்றியிருந்தார்.

ராஜீவ் கொலை விசாரணையில் சிறப்புப் புலனாய்வுக்குழு சிறப்பாக செயற்பட்டது என்பதை மறுக்கவியலாது.

விசாரணையில் இருந்து நழுவ புலிகள் மேற்கொண்ட ஒவ்வொரு அசைவும் தோல்வியிலேயே முடிந்தன.

ஆனாலும் சிவராசனையும், சுபாவையும் உயிருடன் பிடிக்க முடியாமல் போனது சிறப்புப் புலனாய்வுக் குழுவுக்கு கிடைத்த முதல் தோல்வியாக முடிந்தது.

## அறிவிப்பு

20.08.91 இந்திய வானொலி பின்வருமாறு அறிவித்தது.

"ராஜீவ் கொலையின் முக்கிய சூத்திரதாரியான சிவராசனும், சுபாவும் இறந்துள்ளனர் இன்று ராஜீவ் காந்தியின் பிறந்தநாள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்!"

சிவராசனது புகைப்படங்கள் இந்தியா வெங்கும் விளம்பரப்படுத்தப்பட்டன. அப்படியிருந்தும் கொலை நடந்ததில் இருந்து சரியாக மொத்தம் 90 நாட்கள் சிவராசன் குழுவினர் புலனாய்வுக்குழுவுக்கு தண்ணி காட்டியிருந்தனர்.

சிவராசன் உயிரோடு பிடிபடாததால், சிவராசன் யார்? புலி என்பதற்கு என்ன ஆதாரம்? என்ற கேள்வி எழும் என்பதால் புலனாய்வுக் குழுவினர் கடிதம் ஒன்றை தயார் செய்தனர்.

சிவராசன் இறக்கும் முன்பாக பிரபாகரனுக்கு எழுதிய கடிதம் என்று அதனைக் காட்டினார்கள். (அக் கடிதம் இங்கு காணப்படுகிறது. பார்த்துக் கொள்க)




சிவராசன் எழுதியதாக புலனாய்வுக்குழு வெளியிட்ட கடிதம் இதுதான்.



உயிரோடு பிடிபட்டால் ராஜீவ் கொலையில் இயக்கத் தொடர்பு தெரிந்து விடும் என்பதால், உயிரோடு பிடிபடாதிருக்க கடுமையாக முயன்றவர் சிவராசன்.

அதே சிவராசன் தன்னை புலிகளோடு தொடர்பு படுத்தக்கூடிய ஆதாரமாக கவிதை எழுதிவைத்துவிட்டு பலியானதாக கூறுவது நம்ப முடியாத கதை.

புத்திசாலித்தனமாக நினைத்து தயாரிக்கப்பட்ட அக்கடிதத்தில் ஒரு பெரும் தவறை தம்மையறியாது செய்துவிட்டது புலனாய்வுக்குழு.

எட்டு வருடங்கள் யுத்த களத்தில் புலிப்படை நிற்பதாக கவிதையில் கூறப்பட்டுள்ளது. 1991ல் புலிகள் ஆயுதமேந்தி கிட்டத்தட்ட 17 வருடங்களாகியிருந்தன.

இந்தியாவில் புலிகள் பயிற்சி பெற்ற காலகட்டம் 1983ம் ஆண்டு. அதுதான் புலனாய்வுப் பிரிவின் மூளைக்குள் இருந்திருக்கிறது. அதனால் எட்டு வருடம் என்று எழுதி விட்டனர்.

சிவராசனுக்காக வாதாடவோ, அவரைத் தெரியும் என்றோ, அவரது கையெழுத்தை அடையாளப்படுத்தவோ யாரும் வரமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் கிறுக்கல் எழுத்தில் தயாரிக்கப்பட்ட கடிதம் அது.

வழக்கு விசாரணைகளில் இதுபோன்ற சில ஆதாரங்களை தாமாக உருவாக்குவதும் புலனாய்வுக் குழுவினரின் பொதுவான வழக்கம்தான்! தடயங்களை உற்பத்தி செய்தல் என்று இதனை கூறலாம்.

ராஜீவ் கொலையை புலிகள் மறுத்தபோதும், பிரபாகரன் ஒருபோதும் மறுத்துக் கூறியதில்லை.

அதுமட்டுமல்ல புலிகள் சூசகமான வெளிப்பாடு ஒன்றையும் காட்டினார்கள்.

(தொடர்ந்து வரும்)

# அலசுவது - இராஜதந்திரி

# உருவிய வாள் உறைக்குள் திரும்பியது ஏன்?

ஐந்து மாகாண சபைத் தேர்தல்களும் ஏப்ரல் 6ம் திகதி நடைபெறப்போகின்றன.

அதற்கான பிரசாரங்கள் சூடுபிடித்திருக்கின்றன.

வடமேல் மாகாண சபைத் தேர்தல் போல, மீண்டும் வன்முறைகள் தலைதூக்கும் அறிகுறிகள் தென்படுகின்றன.

கொழும்பு மாவட்டத்தில் மட்டும் தேர்தல் வன்முறைகள் பெரியளவுக்கு இடம்பெறமாட்டாது.

வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் முதலீட்டாளர்கள், நட்சத்திர விடுதிகளில் உல்லாசப் பயணிகள் போன்றோர் கொழும்பு மாவட்டத்திற்குள்ளேயே பெரும்பாலும் மையம் கொண்டுள்ளனர்.

எனவே, கொழும்பு மாவட்டத்தில் வன்முறைகள் தலைவிரித்தாடுமானால், பெரும் பாதகங்கள் ஏற்படும், நற்பெயர் கெட்டுப் போகும் என்பதால் வன்முறையின் வீரியம் குறைவாகவே காணப்படும்.

ஆனால், தற்போது தேர்தல் நடைபெறும் ஐந்து மாகாணங்களில் மேல் மாகாணமே கேந்திர முக்கியத்துவம்மிக்க மாகாணமாகும்.

கொழும்பு மாவட்டத்தை உள்ளடக்கிய மாகாணம் என்பதால், இந்த மாகாண சபை தேர்தலில் ஏற்படும் வெற்றி தோல்விகள் முக்கியமானவையாக கருதப்படுகின்றன.

ஏனைய நான்கு மாகாணங்களில் வெற்றிபெற்றுவிட்டு, மேல் மாகாண சபையில் மட்டும் தோல்வி கண்டால்கூட அந்த வெற்றிகளும் முக்கியத்துவம் இழந்துவிடும்.

மேல் மாகாணத்தில்தான் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் சிறிமாவோ போன்றோரின் கோட்டையான கம்பஹா மாவட்டமும் அடங்கியிருக்கிறது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களை உள்ளடக்கியதே மேல் மாகாணமாகும்.

ஐந்து மாகாணசபைகளுக்குமான தேர்தலில், மேல் மாகாணசபையைக் கைப்பற்றுவதிலேயே ஆளும் தரப்பும், ஐ.தே.கட்சியும் பிரதான கவனம் செலுத்தி வருகின்றன.

தற்போதைய நிலவரப்படி கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.கட்சியே முன்னணியில் நிற்கிறது. கடந்த உள்ளூராட்சித் தேர்தலிலும் கொழும்பு மாநகர சபையை ஐ.தே.கட்சியே கைப்பற்றி இருந்தது.

இதில் முக்கியமான ஒரு விடயத்தை கவனித்தால்தான், கடந்த வாரத்தில் கச்சிதமாக அரங்கேற்றப்பட்ட பிரசார நாடகங்களையும் புரிந்து கொள்ளக்கூடியதாகவிருக்கும்.

கொழும்பு மாவட்டத்தில் இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளுக்கும் இடையே போட்டி கடுமையாக நிலவும்போது, தமிழ் பேசும் வாக்காளர்களே அவற்றின் வெற்றி தோல்வியை தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

கடந்த கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் தமிழ் பேசும் வாக்காளர்கள் பொது ஜன முன்னணியை முற்றாக நிராகரித்திருந்தனர். மாநகர சபையில் ஏற்பட்ட தோல்விக்கு அதுவும் ஒரு முக்கிய காரணமாக விளங்கியிருந்தது.

அதுமட்டுமன்றி மலையகப் பகுதிகளில் உள்ள பெரும்பாலான தமிழ் வாக்காளர்களும் பொதுஜன முன்னணியுடன் இணைந்து போட்டியிட்ட இ.தொ.கா.வுக்கு வாக்களிக்கவில்லை.

வடக்கு-கிழக்கில் ஜனாதிபதி சந்திரிக்கா அரசு மேற்கொள்ளும் இராணுவத்தீர்வு முயற்சிகள் பிரதேச பேதங்களுக்கு அப்பாற்பட்டவகையில் இலங்கை வாழ் தமிழ் மக்கள் அனைவரிடமும் எதிர்ப்புணர்வையே ஏற்படுத்தியுள்ளது.

அதன் வெளிப்பாடே கடந்த உள்ளூராட்சி தேர்தலில் கொழும்பு மாவட்டத்திலும், மலையகப் பகுதிகளிலும் பொது ஜன முன்னணிக்கு எதிராக தமிழ் மக்கள் வாக்களித்தமையாகும்.

தற்போது அந்த எதிர்ப்புணர்வு மேலும் வளர்ந்துள்ளதே தவிர குறைந்துவிடவில்லை. சந்திரிகா அரசுமீது கொஞ்ச நஞ்சமிருந்த நம்பிக்கையும் அற்றுப் போயுள்ளதையே இப்போது அவதானிக்க கூடியதாகவுள்ளது.

தமக்கு தமிழ் பேசும் வாக்காளர்கள் குறிப்பாக தமிழ் வாக்காளர்கள் வாக்களிக்கபோவதில்லை என்பதை பொ.ஜ.மு. தலைமையும் நன்குணர்ந்துள்ளது.

சிங்கள வாக்காளர்களை கவருவதற்கு யுத்த வெற்றியை நம்பியிருக்கும் நிலையில், தமிழ் வாக்காளர்களை திருப்திப்படுத்துவது இயலாத காரியமேயாகும்.

எனவேதான், தமிழ் வாக்காளர்கள் தமக்கு வாக்களிக்காதுவிட்டாலும், ஐ.தே.கட்சிக்கு வாக்களித்துவிடக்கூடாது என்பதே இம்முறை பொ.ஜ.முன்னணியின் உத்தியாகும்.

அதன் காரணமாகவே, தொண்டமான் தலைமையிலான இந்திய வம்சாவளி மக்கள் பேரணிக்கு பொ.ஜ.முன்னணி ஆரம்பம் முதலே ஊக்கமும், உற்சாகமும் கொடுத்து வந்தது.

அதேசமயம், ஆட்சியில் உள்ள கட்சிகளுடன் தமது நலனுக்கு ஏற்ப பேரம் நடத்த வசதியாக மலையக அமைப்புக்கள் அனைத்தையும் இ.தொ.கா. தனது ஆளுமைக்குள் கொண்டு வந்துள்ளது.

எனவே, இந்திய வம்சாவளி மக்கள் பேரணி என்பது பொ.ஜ.முன்னணிக்கும், இ.தொ.காவுக்குமே இலாபகரமானவையாகும்.

மாகாண சபைகளில் ஆட்சியை பிடிப்பதற்கு போதிய ஆசனங்கள் பொ.ஜ.முன்னணிக்கு கிடைக்காது விட்டால், இந்திய வம்சாவளி மக்கள் பேரணி அதற்கு ஆதரவளிக்கும்.

எனவே, இம்முறை கொழும்பு மாவட்டம் உள்ளடங்கிய மேல் மாகாணசபை, மற்றும் மலையகப் பகுதிகளில் தமிழ் வாக்காளர்களை கவருவதற்கு இந்திய வம்சாவளி மக்கள் பேரணியையே பொ.ஜ.முன்னணி நம்பியிருக்கிறது.

முஸ்லிம் வாக்காளர்களை அமைச்சர் பௌசியும், அமைச்சர் அஷ்ரப்பும் பார்த்துக் கொள்வார்கள் என்று விட்டுள்ளனர். அமைச்சர்கள் பௌசிக்கும், அஷ்ரப்புக்கும் இடையே பகிரங்கமாகவே மோதல் ஏற்பட்டுள்ளபோதும், ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் இருவரில் எவர்மீதும் நடவடிக்கை எடுக்க முடியாத நிலையிலேயே இருக்கிறார்.

அவர்கள் தமக்குள் மோதிக்கொண்டாலும், வாக்குகளை பெற்றுத் தந்தால் போதும் என்பதே பொ.ஜ.முன்னணித் தலைமையின் நிலைப்பாடாக இருக்கிறது.

ஆனால், நினைத்தது ஒன்று நடந்தது வேறொன்று என்ற கதையாக, அரசே எதிர்பாராத விதமாக யாழ் குடாநாட்டில் காணி சுவீகரிப்பு விவகாரம் பெரும் சர்ச்சையாக எழுந்தது.

தமிழ்க் கட்சிகள் இது தொடர்பாக அறிக்கைகள் விட்டபோதும் அரசு வெகு அலட்சியமாகவே இருந்தது. யாழ் மாவட்ட படைத் தளபதியும் சுவீகரிப்பு உண்மை என்பதை எம்.ரி.வி. தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் உறுதிப்படுத்தியிருந்தார்.

இவ்விவகாரம் வடக்கு-கிழக்கு தொடர்பான விடயம் மட்டுமல்ல, முழு நாட்டிலுமுள்ள தமிழர்களும் இந்த விவகாரத்தில் அரசுமீது கடும் அதிருப்தி கொண்டுள்ளனர் என்றும் இதனால் மாகாணசபைத் தேர்தலிலும் தமிழ் வாக்குகள் ஒரேயடியாக எதிராகத் திரும்பும் என்றும் தமிழ்க் கட்சி ஒன்று ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்தது.

ஜனாதிபதியின் செயலாளர் ஊடாகவும் குறிப்பிட்ட கட்சிப் பிரமுகர் அவசரமாக கவன ஈர்ப்பு செய்தாராம்.

இந்திய வம்சாவளி மக்கள் பேரணிக்கும் இந்த விவகாரம் பெரும் தலையிடியாக அமைந்ததுடன், வாக்குவங்கிகளில் சரிவை ஏற்படுத்தப்போகிறதே என்ற கவலையையும் தோற்றுவித்தது.

இதன் பின்னனியிலேயே, நீதியமைச்சரது கவனத்திற்கும் இவ்விவகாரம் சென்றது.

இப் பிரச்சனையை தணிக்கவில்லையானால், வாக்குச் சரிவு நிச்சயம் என்ற நிலையில்தான் 24.03.99 அன்று ஜனாதிபதியை சந்தித்தார் நீதியமைச்சர்.

அதன் பின்னர் வெளியான செய்திகள்தான் மர்மம் நிறைந்தவை. பிரசார நாடகமானவை.

25.03.99 தமிழ்ப் பத்திரிகைகள் சிலவற்றில் வெளியான செய்திகளை உற்று நோக்கினால் உண்மை புலப்படும்.

"யாழ் காணி சுவீகரிப்பை நிறுத்த ஜனாதிபதி உத்தரவிட்டதாக அறியப்படுகிறது" என்றே செய்தி காணப்பட்டது. ஆனால் அச் செய்திக்கு இடப்பட்ட தலைப்புக்கள் மட்டும், ஜனாதிபதி நேரடியாக உத்தரவிட்டுள்ளது போல காணப்பட்டன.

ஜனாதிபதி அவ்வாறு உத்தரவிட்டதாக பத்திரிகைகளுக்கு கூறியது யார்? எந்த அதிகாரிகளுக்கு அவ்வாறு உத்தரவிடப்பட்டது? அந்த செய்தியை மேற்படி பத்திரிகைகளுக்கு வழங்கியது யார்? போன்ற எந்த விபரங்களும் இன்றி அனாமதேயச் செய்திகளாக அவை வெளியாகியிருந்தன.

மிக முக்கியமான இந்த விவகாரத்தில் ஜனாதிபதி செயலகமோ, அல்லது ஜனாதிபதியோ, அல்லது ஜனாதிபதியைச் சந்தித்த நீதியமைச்சரோ தமது பெயரில் உத்தியோக பூர்வமாக மறுப்பை தெரிவிக்காது, கசிந்து வந்த செய்திகள்போல உலாவவிட்ட மர்மம் என்ன?

**இதுவரை ஜனாதிபதியின் உத்தரவு எதுவும் அதிகாரிகளுக்கு செல்லவில்லை!**

வடக்கு-கிழக்கு தமிழ்க் கட்சி ஒன்றின் ஊடாகவே மேற்படி செய்தி பத்திரிகைகளுக்கு கூறப்பட்டுள்ளது. அரசோ, அமைச்சரோ கூறவில்லை என்பதும் முக்கியமானதாகும்.

குறிப்பிட்ட செய்தியிலும், முன்னுக்குப் பின் முரண்பாடான தன்மைகள் காணப்பட்டன.

யாழ் குடாநாட்டு காணி சுவீகரிப்பு விடயம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா அறிந்திருக்கவில்லை எனவும், அது தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அது உண்மையானால், 11.03.99 அன்று பாராளுமன்றத்தில் அமைச்சர் ரத்வத்தையால், ஈ.பி.டி.பி தலைவர் தேவானந்தா பா.உ.வுக்கு வழங்கப்பட்ட குறிப்புக்கு அர்த்தம் என்னவென்பதும் கேள்வியாகிறது.

காணிச் சுவீகரிப்பு நடக்கவிருப்பதை பிரதிப் பாதுகாப்பமைச்சரே அறிந்திருந்திருக்கையில், ஜனாதிபதி மட்டும் அறிந்திருக்கவில்லை என்று சித்தரிப்பது கேலிக்கிடமாகவுள்ளது.

அதுமட்டுமன்றி, 1987இல் காமினி திசநாயக்கா கெஸட் மூலம் பிரகடனம் செய்ததாகக் கூறப்படும் விடயம் யாரும் அறியாதது. அதனை இன்றைய ஆட்சியாளர்கள் மட்டும் நன்கு அறிந்திருந்து உடனடியாக தற்போது நினைவுகூர முடிந்ததும் ஆச்சரியமானதே.

அதுதவிர, ஜனாதிபதி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால் எந்த அதிகாரிக்கு உத்தரவு வழங்கப்பட்டது என்பது பற்றி எதுவும் கூறப்படவில்லை.

நாம் அறிந்தவரை யாழ் அரச அதிபருக்கோ, ஏனைய சிவில் நிர்வாக அதிகாரிகளுக்கோ அப்படி எந்த உத்தரவும் இதுவரை வழங்கப்பட்டதாக தெரியவில்லை.

இந்த உத்தரவு வெளியானதாக கூறப்படும் 24.03.99 அன்று யாழ்ப்பாணத்தில் உள்ள படைத் தளபதியை பி.பி.சி. செய்தியாளர் ஆனந்தி சந்தித்து பேட்டி கண்டிருந்தார்.

அப்போது காணி சுவீகரிப்பு தொடர்பாகவும் கேள்வி எழுப்பியிருந்தார். சிவில் விமான தளம் அமைக்கவே காணி சுவீகரிப்பு நடக்க உள்ளதாகவும், 1987ம் ஆண்டே இதற்கான முடிவு எடுக்கப்பட்டுவிட்டதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

சுவீகரிப்பு நிறுத்தப்பட்டதாகவோ, உத்தரவு கிடைத்ததாகவோ அவர் கூறவில்லை.



எனவே, தமிழ் வாக்காளர்களை திருப்திப்படுத்துவதற்காக, உத்தியோக பூர்வம் இன்றி கசியவிடப்பட்ட சமாளிப்புச் செய்தியாகவே 'சுவீகரிப்பை நிறுத்த உத்தரவு' என்ற செய்தி வெளியாகியுள்ளது.

இன்னொன்றையும் கவனித்தாக வேண்டும். பகிரங்கமாக, நஷ்ட ஈடுகொடுத்து சுவீகரிப்பு செய்ய முனைந்தமையால்தான் இவ்விடயம் வெளியே தெரிந்து பிரச்சனையானது. எனவே, சற்றே ஆறப்போட்டுவிட்டு பின்னர் இரகசியமாக சுவீகரிப்பை செய்யலாம் என்ற தந்திரமும் இருக்கக்கூடும்.

வடக்கு-கிழக்கில் திட்டமிட்ட குடியேற்றங்களால் அள்ளுண்ட பகுதிகள் காணிச் சுவீகரிப்புக்கான கெஸட் பிரகடனம் செய்து அபகரிக்கப்பட்ட பகுதிகளல்ல. எவ்வித சட்டபூர்வ வழிமுறையும் இன்றி அடாத்தாக அபகரிக்கப்பட்ட பகுதிகளேயாகும்.

எனவே, தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள எதிர்ப்புணர்வைக் கண்டு பகிரங்க முயற்சிகளை நிறுத்திவிட்டு, இரகசிய முயற்சிகள் மூலம் எதிர்காலத்தில் குடியேற்றம் நடத்துவதற்கும் திட்டமிடலாம்.

ஏனெனில், வலிகாமத்தில் 12 ஆயிரம் ஏக்கர் பகுதி மட்டுமல்ல, தென்மராட்சியிலும் கணிசமான பகுதியில் மக்கள் மீளக்குடியேறுவதை படையினர் தடுத்து வருகின்றனர்.

இப்போது இல்லாதுவிட்டாலும், எக்காலத்திலும் குடியேற்றம் நடத்த வசதியாக இக் காணிகள் படையினரின் கைகளிலேயே இருக்கப்போகின்றன.

உதாரணமாக, திருமலை லிங்கநகரில் தமிழ் மக்கள் குடியிருக்கும் காணிகளை தமது நிலம் என்று இராணுவத்தினர் உரிமை கோருகின்றனர். அதற்கான ஆவணம் எதுவும் இராணுவத்தினரிடம் இல்லை. இவ்விடயம் ஜனாதிபதியின் கவனத்திற்கு பலமுறை கொண்டு செல்லப்பட்டும் பரிகாரம் காணப்படவில்லை.

இதேபோலவே யாழ் குடாநட்டிலும் எதிர்காலத்தில் படையினர் தமது பிடியில் உள்ள நிலங்கள்மீது உரிமை கோரலாம்.

எனவே, யாழ் குடாநாட்டில் காணி சுவீகரிப்பை நிறுத்துமாறு ஜனாதிபதி உண்மையாகவே உத்தரவிட்டால்கூட, அது பரிகாரமாகாது. பிரச்சனை பெரிதானதாலும், தமிழ் வாக்காளர்களை திருப்திப்படுத்தவுமே உருவிய வாளை உறையில் போட்டுக் கொண்டதாகவே கருதவேண்டும்.

'எனவே, வலிகாமத்திலும், தென்மராட்சியிலும் தமிழ் மக்கள் மீளக் குடியேற அனுமதிக்கப்படுவர்' என்று ஜனாதிபதியே உத்தியோகபூர்வமாக கூறுவதும், அதற்கான ஏற்பாடுகளுக்கு வழிவகை செய்வதுமே காணி அபகரிப்பு அபாயத்திற்கு நிரந்தரமான பரிகாரமாகும்.

ஆனால், தற்போது யார் மூலமோ பத்திரிகைகள் வாயிலாக வெளியான வாக்குறுதியை, பிரச்சனைக்கு தீர்வு காணப்பட்டதுபோல சித்தரிக்க தமிழ்க் கட்சிகள் தம் நலன் கருதி துணைபோயுள்ளன.

இந்த விவகாரத்தில் தமிழ்க் கட்சிகள் தாம் ஆவேசம் கொண்டதுபோல நடித்துவிட்டு, அதே வேகத்தில் தணிந்துவிட்டன.

ஒரு வரையறைக்குமேல் அரசை எதிர்க்க முடியாதளவுக்கு, இக் கட்சித் தலைமைகள் அரசின் கடைக்கண்பார்வைக்காக காத்திருப்பதே இத்தகைய விசித்திரமான நிலைகளுக்கு உண்மையான காரணமாகும்.

சோடாப் போத்திலில் மூடியை திறந்ததும் புறப்படும் வாயு (கேஸ்) போன்றதே இந்த தமிழ்க் கட்சிகளது கண்டனங்களுமாகும். சீறி எழுந்த வேகத்திலேயே தணிந்துபோய்விடும்.

எந்தப் பிரச்சனையிலும் உறுதியாக நின்று, அப்பிரச்சனையை நிரந்தரமாக தீர்ப்பதற்கு பாடுபடுவதற்கு இக் கட்சிகளிடம் திராணியில்லை. திறம்பட திட்டமிட்டு செயற்படத்தக்க தலைமைகளும் இல்லை.

காணி அபகரிப்பு விடயத்தில் ஈ.பி.டி.பி பாராளுமன்றத்தில் பேசியது. ஏனைய தமிழ்க் கட்சிகள் அறிக்கைகள் விட்டிருந்தன. ஆனால், இக் கட்சிகள் எதற்கும் இன்றுவரை இப்பிரச்சனை தொடர்பாக ஜனாதிபதியிடமிருந்தோ, முக்கிய அமைச்சர்களிடமிருந்தோ உத்தியோகபூர்வமான உத்தரவாதம் எதுவும் வழங்கப்படவில்லை.

ஆனால், எவ்வித ஆதாரமும் இன்றி, அநாமதேயச் செய்தி போல பத்திரிகைகளில் வெளியான செய்திகளைப் பார்த்துவிட்டு, அதன் பின்னணியை புத்திபூர்வமாக நோக்காது, 'ஜனாதிபதியின் முடிவை வரவேற்கிறோம்' என்று அநேகமாக சகல தமிழ்க் கட்சிகளும் ஒரே குரலில் பக்கப்பாட்டுப் பாடியுள்ளன.

அதுமட்டுமல்லாது, முக்கிய தமிழ்க் கட்சி ஒன்றே குறிப்பிட்ட செய்திகளை கசியவிட்டு பொது ஜன முன்னிணிக்கு தேர்தல் இலாபம் தேட முற்பட்டுள்ளது.

தேர்தல் களத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளால்தான் தமிழ் வாக்குகளைக் கவர மேற்படி செய்திக் கசிவுக்கு ஆட்சியாளரும் உடன்பட்டுள்ளனர்.

அதே சமயத்தில் ஜனாதிபதி தன் வாயால் காணி சுவீகரிப்பு விடயத்தில் தற்காலிக உத்தரவாரம் வழங்கக்கூட தயாராக இல்லை. ஏனெனில் சிங்கள வாக்காளர்களை அத்தகைய உத்தரவாதம் அதிருப்தி அடையச் செய்துவிடும். அதனால்தான் ஜனாதிபதி கூறியதாக யார் யாரோ செய்தி கூறும் உத்தி கையாளப்படுகிறது.

எப்படியிருப்பினும், இம்முறை தமிழ் வாக்குகள் பொதுஜன முன்னணிக்கோ, அதனைச் சார்ந்த அணிகளுக்கோ சாதகமாக இருக்கப்போவதில்லை.

தமிழ் வாக்காளர்கள் மத்தியில் அதிருப்தி அலை பயங்கரமாக வீசுகிறது. வடக்கு-கிழக்கு, மலையகம் என்ற பேதம் இன்றி அரசின் இராணுவத்தீர்வு முயற்சிகள் ஏற்படுத்தியுள்ள வெறுப்பை தமிழ் வாக்குகள் இம்முறையும் வெளிப்படுத்தவே செய்யும். ○

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

**கா**ணி சுவீகரிப்பு விடயத்தில் ஆதாரம் தேடாமலேயே வெளியான பத்திரிகை செய்திகள் புருவம் உயர்த்த வைக்கின்றன.

அதேபோல செம்மணி வழக்கு யாழ் நீதிமன்றத்தில் நீதிபதி அருள்சாஹரன் இல்லாமையால் ஒத்தி வைக்கப்பட்டது போலவும், அறிக்கையுடன் சென்ற சி.ஐ.டி. அதிகாரிகள் ஏமாற்றம் அடைந்தது போலவும் செய்திகள் பார்த்ததும், புருவம் மேலும் உயருகிறது.

26.03.99 இல் செம்மணி வழக்கு ஒத்தி வைக்கப்பட்டதற்கு காரணம் நீதிபதியல்ல. திட்டம் போட்டே நடந்த நாடகம் அது.

யாழ் மேலதிக நீதிபதியாக நியமிக்கப்பட்ட அருள்சாஹரன் கொழும்பில் வசிப்பவர். அவரை சென்றமுறை விமானத்திலேயே அழைத்துச் சென்று, கையோடு திருப்பி அழைத்து வந்தனர்.

அரச சட்டத்தரணி, சி.ஐ.டி. அதிகாரிகள், மண்ணியல் நிபுணர் ஆகியோருடன் ஒரே விமானத்தில்தான் நீதிபதியும் கலகலப்பாக சிரித்துப் பேசியபடி பயணம் செய்தனர். திரும்ப வந்தனர்.

26.03.99 அன்றும் வழக்குக்காக நீதிபதியை அழைத்துச் செல்ல வேண்டியதும் அரசுதான். ஆனால் அதற்கான ஒழுங்குகள் செய்யப்படவில்லை.

அதுமட்டுமல்ல, மண்ணியல் நிபுணர் நீதிபதி அருள்சாஹரனை தொடர்பு கொள்ள ஒரு வார காலமாக முயன்றிருக்கிறார். ஆனால் நீதிபதி எங்கிருக்கிறார் என்றேஅவரால் அறிய முடிய வில்லை.

எனவே, 25.03.99 இல் பத்திரிகையாளர் ஒருவருடன் பேசிய மண்ணியல் நிபுணர், 'நீதிபதி யாழ் செல்வது சந்தேகம்' என்று கூறியிருக்கிறார்.

இது அரசாங்கத்திற்கு மட்டும் எப்படி தெரியாமல் போகும்? நீதிபதி அருள்சாஹரன் யாழ் செல்ல விரும்பவில்லையென்றால்கூட, வேறு நீதிபதியை அரசு நியமித்திருக்கலாம். அருள் சாஹரன் அப்படித்தானே நியமிக்கப்பட்டார்.

26.03.99 அன்றுதான் நீதிபதி யாழ் செல்ல விரும்பாதது தெரியும் என்று கூறமுடியாது. ஏன் தெரியுமா? குறைந்தது மூன்று நாட்களுக்கு முன்னராவது நீதிபதியுடன் தொடர்பு கொண்டு யாழ் செல்லும் பயண ஒழுங்குகளை உறுதிப்படுத்தியிருக்க வேண்டும்.

### செம்மணி காட்சி இரண்டு

அதுமட்டுமல்ல, செம்மணி மண் அறிக்கையுடன் விமானத்தில் சி.ஐ.டி. அதிகாரி ஒருவர் யாழ் போனதாகவும் செய்தி வெளியானது. நீதிபதியும் அவருடன்தானே அதே விமானத்தில் செல்ல வேண்டும். ஏன் நீதிபதி வரவில்லை? முன்னரே போய்விட்டாரா? இல்லையா? என்றுகூட அந்த சி.ஐ.டி. அதிகாரி அறியாமல் யாழ்ப்பாணம் சென்றார் என்று கூறுவது தமாஷ்.

யாழ் சென்ற சி.ஐ.டி. அதிகாரி நீதிமன்றத்திற்கு விடுவிடுவென்று சென்றார். அங்கு நீதிபதி இல்லை. ஏமாற்றமடைந்தார் என்றும் செய்தி வெளியாகி இருந்தது.

நீதிபதி வரமாட்டார் என்பது தெரிந்து நீதிமன்றத்திற்கு பாதுகாப்புக்கூட வழங்கப்படவில்லை.சி.ஐ.டி. அதிகாரிக்கு மட்டும் தெரியாதாம்!

சரி, அதுதான் போகட்டும். நீதிபதிதான் இல்லை. அரச சட்டத்தரணி என்னவானார்? கொழும்பில் இருந்து அவர் ஏன் அழைத்துச் செல்லப்படவில்லை?

நீதிபதி வரமாட்டார். வழக்கு நடக்காது என்பது முன்கூட்டியே மிகவும் திட்டவட்டமாக தெரிந்த சங்கதிதான் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

இந்த நாடகத்தைக் கூட குறிப்பிட்ட சில செய்தியாளர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை என்பது நம்ப முடியாத ஆச்சரியம்.

எங்கோ, ஒரு தவறுக்கான தூண்டுதல் சில நலன் கருதி குறிப்பிட்ட சில செய்தியாளர்கள்மீது பிரயோகிக்கப்படுகிறதா? என்று சந்தேகம் வருகிறது.

செம்மணி விவகாரம், யாழ் காணி சுவீகரிப்பு இரண்டிலும் நாடகங்களை அம்பலப்படுத்த தமிழ்க் கட்சிகள் மட்டுமல்ல, பொறுப்புள்ள செய்தியாளர்கள் சிலரும் தவறிவிட்டனர் என்பது உண்மை!

●●●

**த**மிழ்க் கட்சிகள் ஒன்று கூடிப் பேசுவதும், அது செய்தியாக வருவதும் புதுமையுமல்ல. புதிரும் அல்ல.

தமிழ் மக்களிடையே தம்மீது ஏற்பட்டுள்ள வெறுப்பை தணிக்கவும், தாம் ஒற்றுமைக்கு தயார் என்று காண்பிக்கவும் ஒவ்வொரு காலகட்டத்தில் ஒற்றுமைக் காட்சிகள் அரங்கேறும்.

தமது கட்சிகளுக்குள் பிரச்சனைகள் ஏற்பட்டால் தமது தலைமையை தக்கவைக்க ஒற்றுமை நாடகம் மூலம் திசை திருப்பும் விளையாட்டாகவும் சிலர் பயன்படுத்துவதுண்டு.

பொதி தொடர்பாக ஐந்து தமிழ்க் கட்சிகள் திருத்தம் முன்வைத்தன. பின்னர் அத்திருத்தங்களுக்கு மாறாக ஒவ்வொரு கட்சியும் பேசி வருகின்றன.

இப்போது மறுபடி ஒற்றுமை விளையாட்டு. இது புதிய மொந்தையில் பழையகள்கூட அல்ல. மொந்தையும் பழசுதான்! ▬

தன்னைக் கவர்ந்த பெண் மந்திரவாதியை கம்பலாவுக்கு அழைப்பித்தான் அமீன்.

தலைநகரில் அவளுக்கு ராஜமரியாதை; பெரிய மாளிகை ஒன்றில் அவளைத் தங்க வைத்தான். அவளது உதவியாளர்களும் கூட வந்திருந்தனர்.

அவள் கம்பலாவுக்குள் காலடிவைத்த அன்றுதான் பிரிட்டிஷ்காரர் ஒருவர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டார்.

உகண்டா வானொலி அச் செய்தியை அன்று மாலையே அறிவித்திருந்தது.

உகண்டாவுக்குள் உளவு பார்த்தது; கிளர்ச்சிக்காரர்களுக்கு உதவியது; நாட்டுக்கு எதிராகச் சதிசெய்தது போன்ற குற்றச்சாட்டுக்கள் அவர்மீது அடுக்கப்பட்டன.

வானொலிச் செய்தியை மந்திரவாதியும் கேட்டிருந்தாள். அன்று இரவு அவளை அமீன் சந்தித்தபோது, அச் செய்தியைக் கேட்காதவள்போல பாசாங்கு செய்தாள்.

"வெள்ளை நிறத்தோடு தொடர்புடைய சத்துரு உனக்கு எதிராகக் கிளம்பும். அதனை அழிக்க வேண்டும். அதேசமயம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். சற்றே அயர்ந்தாலும் உன் தலைக்கு மேல் ஆபத்து உயர்ந்துவிடும்!" என்று கூறிக்கொண்டே போனாள்.

அமீனுக்கு ஆச்சரியம் என்றால் ஆச்சரியம். மந்திரவாதி வானொலி கேட்டிருப்பாள் என்ற சிந்தனைகூட அவனுக்கு எழவில்லை.

கண்மூடித்தனமான நம்பிக்கைகள் தெளிவாகச் சிந்திப்பதைத் தடுத்து நிறுத்திவிடும். அவள் கூறும் ஒவ்வொன்றும் அற்புத வாக்குகளாகவே அமீனுக்குள் எதிரொலித்தன.

# இடி அமீன்

அமீன் தன்னை மறந்தவனாக, **"இன்றுதான் ஒரு பிரிட்டிஷ் காரனைப் பிடித்தேன். அவன்தான் அந்த சத்துருவாக இருப்பானோ?"** என்று கேட்டான்.

'ஆம்' என்று ஒரு வார்த்தை அவள் வாயிலிருந்து வெளிவந்தால், அப்படியே போய் அந்த பிரிட்டிஷ்காரனை பிடித்துத் தின்றுவிடுவான் போலிருந்தது.

அவள் மந்திரவாதிகளுக்கே உரிய முறையில், சுற்றிவளைத்துப் பதில் கூறினாள்; "அப்படியா? எப்போது பிடிப்பட்டான்? பிரிட்டிஷ்காரன் என்றால் வெள்ளையனா? கறுப்பனா?" என்று கேட்டாள்.

**"வெள்ளையன்தான்!"** என்றான் அமீன்.

"வெள்ளை நிறத்தாலே ஆபத்து என்றுதான் என் அகக் கண்களுக்கு காட்சி தெரிகிறது. இவனாகவும் இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம். சில விஷயங்களை பட்டவர்த்தனமாகக் கூறமுடியாது. எதற்கும் வெள்ளை நிறம் தொடர்பான விஷயங்களில் விழிப்பாக இரு!" என்றாள்.



தலையைத் தொட்டு ஆசிர்வதித்தாள். அப்படியே அமீனின் நெஞ்சை தன் கைகளால் தடவிவிட்டாள். அவ்வாறு தடவும்போது "அமைதி, அமைதி, அமைதி" என்று முணுமுணுத்தாள்.

பக்தியோடு காமத்தைக் கலந்து அவள் நடத்தும் கூத்து அமீனை கிறங் கடித்துக் கொண்டிருந்தது.

அவனது சட்டை பொத்தான்களை விலக்கிவிட்டு, தைலம் போன்ற ஒன்றை அவன் மார்பில் பூசினாள். பிசுபிசுப்பாக இருந்தது.

அவன் மார்பை விரல்களால் நீவிவிட்டாள். தைல வாசனை கண்களை சொருக வைத்தது.

அந்த நேரம் அவள் தன் கைகளை மேலே உயர்த்தினாள். அவள் கைகள் உயர்ந்ததும், அமீனின் கண்கள் அவளது முன்னெழுச்சிகளில்தான் தாவின.

அவளுக்கும் தெரியும். அங்கே அவன் கண்களை நிலைக்க வைத்து, அவன் பார்வையை திருப்புவதுதான் அவள் தந்திரம்.

அவளது விரிந்த கூந்தலுக்குள் இருந்த வஸ்து ஒன்றை சட்டென்று எடுத்துக் கொண்டாள்.

அமீனின் கவனம் அவளது மார்பில் சிதறியிருந்ததால், அவள் அந்த வஸ்தை கூந்தலுக்குள் மறைத்து வைத்து எடுத்ததை அவன் கவனிக்கவில்லை.

ஏதோ தனக்காக ஆவி உலகில் இருந்து தருவித்த மந்திரப்பொருள் என்றே நினைத்தான். ஆச்சரியம், பயம் இரண்டும் சமவிகிதத்தில் கலந்த உணர்ச்சியுடன் இப்போது அவளைப் பார்த்தான்.

"இதோ! உனக்குத்தான். எப்போதும் உன் கழுத்தில் அணிந்துகொள். சத்துரு நெருங்காது. கெட்ட ஆவிகள் அண்டாது. தூக்கத்தில் துஷ்ட சொப்பனம் தோன்றாது!" என்றாள்.

அமீன் பயத்தோடு அதனை பெற்றுக் கொண்டான். தாயத்துப்போல இருந்தது. அந்த வஸ்து. கண்களில் ஒற்றிக் கொண்டான்.

அவளுக்காகவே கொண்டு வந்த தங்கக் கட்டிகள் மூன்றை காணிக்கையாகக் கொடுத்தான்.

அவளுக்கு உள்ளூர பெரும் உவகை ஊற்றெடுத்தது. தங்கக்கட்டிகளை இதற்கு முன்னர் யாரும் காணிக்கையாகக் கொட்டியதில்லை.

உள்ளூர ஊற்றெடுத்த உவகையை வெளியே காட்டாது, வெகு அலட்சியமாக அவற்றை நோக்கினாள்.

"பொருள் ஆசைதான் மனிதனை ஆட்டிப் படைக்கிறது. இந்தத் தங்கம் எத்தனை மனிதர்களை பங்கம் செய்திருக்கிறது! தங்கத்தை மதிக்காது தானம் தர நீ முன்வந்த போதே, உன் பாவங்களில் பாதி மாயமாய் மறைந்துவிட்டது அப்பனே!" என்றாள்.

அமீனுக்கு பெருமையாக இருந்தது. எனினும் அவளது ஆலிங்கனம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தான். கிட்டவில்லை.

தினமும் தன் உடலைத் தீண்ட அனுமதித்தால் அவனுக்கு திகட்டிவிடும் என்பது அவள் அறியாததல்ல.

விதம் விதமாக அவனை ஆட்டிப்படைப்பதுதான் அவளது நோக்கம். அமீன் தங்க முட்டையிடும் வாத்து. நீண்ட காலம் அதனைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். அதுதான் அவள் எண்ண மெல்லாம்.

கைது செய்யப்பட்ட பிரிட் டிஷ்காரனை நீதிமன்றத்தில் நிறுத்துமாறு கட்டளையிட்டான் அமீன்.

"ஏன் வீண் சிரமம்? குற்றச் சாட்டுக்களுக்கு போதிய ஆதாரம் நம்மிடமில்லையே?" என்று சொன்ன, உளவுப்பிரிவு அதிகாரியிடம் அமீன், **"உகண்டாவிலும் நீதிவிசாரணை இருக்கிறது. நீதிதான் தண்டிக்கும் என்று உலகை நம்பவைக்க வேண்டாமா?"** என்று இடிச் சிரிப்பை இறக்கினான்.

## தருவது ரசிகன்

உளவுப்பிரிவு அதிகாரி மேலும் தயங்க, அமீன் அதனைப் புரிந்து கொண்டவனாக, **"நீதிபதி நம் ஆள்தான். அவர் நீதிபதி; அவருக்கு நான் அதிபதி!"** என்றான்.

உகண்டாவின் முன்னாள் பிரதமர் பெனடிக்ரோ கிவானுக்கு. அவர் ஒபடேயின் காலத்தில் சிறையில் இருந்தார். அமீன் பதவிக்கு வந்ததும் விடுதலை செய்தான். பிரதம நீதியரசராக நியமித்தான்.

தம்மை உயர்பதவிக்கு நியமித்த-அரசுக்கு விசுவாசமாகத் தீர்ப்புக் கூறும் நீதியரசர்களும் இருக்கிறார்கள். கிவானுக்கு அப்படிப்பட்ட மனிதரல்ல; நேர்மையானவர்.

சிறையில் இருந்து விடுதலை செய்து பிரதம நீதியரசராக நியமித்தமையால் தனக்கு விசுவாசமாக இருப்பார் என்றே அமீன் நம்பினான்.

அதனால் அவர் முன்பாகவே பிரிட்டிஷ் காரர்மீதான வழக்கு நடந்தது. **"ஒருவாரத்திற்குள் தீர்ப்பை அறிவித்துவிடுங்கள்."** என்று அமீன் தொலைபேசியில் நீதியரசருக்கு கூறினான்.

அமீன் அவ்வாறு கட்டளையிட்டது நீதியரசருக்கு பிடிக்கவில்லை. அதனைக் காட்டிக் கொள்ளாமல், "அப்படியே ஆகும்!" என்றார்.

அமீன் அத்தோடு விடவில்லை. **"குறைந்தது பத்து வருடமாவது கம்பி எண்ண வைக்க வேண்டும்!"** என்றான்.

நீதியரசருக்கு எரிச்சலாக இருந்தாலும், "பார்க்கலாம்" என்றார்.

'பார்க்கலாம்' என்ற பதில் அமீனுக்கு சிறிது சந்தேகத்தைக் கொடுத் தாலும், தன் முடிவுக்கு விரோதமாக செயற்பட துணிவிருக்காது என்று நினைத்தான்.

அந்த நினைப்பைக் கெடுத்தது நீதியரசர் வழங்கிய தீர்ப்பு.

## உண்மைத் தொடர் அதிர் இடி 55

**கடந்தவாரம்**

**பிரிகேடியர் ஆரூபே கைதாகி கொல்லப்படுகிறார். அவரது உடல் மருத்துவமனையில் வைக்கப்பட்டிருக்கிறது. அங்கு சென்ற அமீன் பிணவறைக்குள் கதவை மூடியபடி 20 நிமிடம் இருக்கிறான். அமீன் சென்ற பின்னர் அரூபேயின் உடலைப் பார்த்த மருத்துவ அதிகாரி அதிர்கிறார்ஷ. அந்த உடலின் கையில் தசைப்பகுதியைக் காணவில்லை....**

**இனி....**

"சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் இல்லை என்பதால், பிரிட்டிஷ் பிரஜை விடுதலை செய்யப்படுகிறார். இனி மேலும் இப்படியான குற்றச்சாட்டுக்களை மேலெழுந்த வாரியாக சுமத்தக் கூடாது." என்று தீர்ப்புக் கூறியிருந்தார் நீதியரசர் கிவானுக்கு.

தீர்ப்பை அறிந்ததும் இடி அமீன் தீயை மிதித்தவன்போலானான்.

தனது சத்துருவை தப்பவைத்து விட்டாரே என்ற கோபத்தில், அவனது உதடுகளில் இருந்து கொடூரமான உத்தரவு பறந்தது!

**"நீதிமன்றத்தில் வைத்து அவனது நேர்மைக்கு செருப்படியை பரிசாக கொடுங் கள். பின்னர் அள்ளிப்போட்டுக் கொண்டு வாருங்கள். அவனது இரத்தம் எனக்கு வேண்டும்."**

பிற்பகல் 3.30 மணிக்கு :.பேஜோ 504 கார் ஒன்று உயர் நீதிமன்ற வளாகத்துக்குள் துரித வேகத்தில் புகுந்தது.

அதிலிருந்து ஐந்துபேர் ஆயுதங்களுடன் குதித்தனர். அப்போது பிரதம நீதியரசர் தனது அலுவலக அறையில் இருந்தார்.

உள்ளே திமுதிமுவென்று புகுந்த குண் டர்களைக் கண்டதும், எழுந்தோட முயன்றார். அதற்கு சந்தர்ப்பமே கொடுக்காது பாய்ந்து பிடித்துக் கொண்டனர்.

"யார்... யார் நீங்கள்?" என்று கேட்க, அவர்கள் குரூரமாக முறைத்தபடி, "உனக்கு கடைசித் தீர்ப்பை தரப்போகிறவர்கள்!" என்றனர்.

தரதரவென்று அவரை வெளியே இழுத்துப் போனார்கள். பிரதம நீதியரசரின் அலுவல கம் மேல் தளத்தில் இருந்தது.

மாடிப்படிகள் வழியாக இழுத்துக் கொண்டு கீழ்தளத்துக்கு அவரைக் கொண்டு சென்றனர். அங்கு விஷயமறிந்து கூட்டம் கூடிவிட்டது.

வந்தவர்களிடம் ஆயுதம் இருந்தது. அதனால் கூட்டத்தினருக்கு அவர்கள்மீது பயம் இருந்தது.

யாரும் அவர்களைத் தட்டிக் கேட்கத் துணியவில்லை.

நீதியரசரின் பாதங்களில் இருந்த காலணிகள் கழற்றப்பட்டன. அவற்றால் அவருடைய முகத்தில் தாறுமாறாக அடித்தனர்.

அடி தாங்காது நீதியரசர் மயங்கிப்போனார்.

அவரை அப்படியே தூக்கி தமது :.போஜோ காருக்குள் போட்டுக்கொண்டு பறந்துவிட்டனர்.

அமீன் முன்பாக நீதியரசர் நிறுத்தப்பட்டார்.

**"முன்னாள் பிரதமரே காணாமல் போகப் போகும் கொடுமை என் ஆட்சியில்தான் நடக்கப்போகிறது. நான் என்ன செய்வது? நன்றி கெட்டுப்போன நீர்தான் உமது முடிவை என் கையில் ஒப்படைத்திருக்கிறீர்!"**

அப்போதுதான் மயக்கம் தெளிந்திருந்த நீதியரசர் தடுமாற்றமான குரலில்; "நான் தவறாக எதுவும் செய்துவிடவில்லையே," என்றார்.

**"அப்படியானால் நான் தவறு செய்யும்படி கூறினேன் என்றா சொல்கிறாய்? முட்டாள் நீதிபதியே, யார் கையில் அதிகாரம் இருக்கிறதோ, அவர்கள் சொல்வதுதான் நீதி. மீதியெல்லாம் அநீதி. இப்போது உனக்கு ஏதோ என்னால் முடிந்த நீதி இதுதான்."**

அமீனின் பிஸ்டல் துப்பிய தோட்டா நீதியரசரின் உயிரை உறிஞ்சியது.

அவரது உடலின் நெஞ்சுப் பகுதியில் சதைத் துண்டை அறுத்தெடுத்த அமீன், அன்று அவனுக்கு பசியில்லாத காரண்தாலோ, என்னவோ அதனை குளிர்சாதனப் பெட்டியில் பத்திரப் படுத்தினான்.

அவரது உடலை எரித்துவிடுமாறு கட்டளையிட்டான்.

அக்கொலைக்கு அமீன் கூறிய காரணத்தை யாரும் நம்பவில்லை.

**"முன்னாள் ஜனாதிபதி ஒபடேயின் ஆட்கள் ஊடுருவிவிட்டனர். அவர்கள்தான் பிரதம நீதியரசரை கடத்திப் போய்விட்டனர். இது உகண்டாவின் நீதித்துறைக்கு எதிரிகள் விடுத்துள்ள சவால்!"** என்று அறிக்கை விட்டான் அமீன்.

அதன் பின் சில வாரங்களுக்குப் பின்னர், மக்கெரேரே பல்கலைக்கழக உபவேந்தர் :.பிராங்க் கலிமுஸோவுக்கும் பயங்கர அனுபவம் ஒன்று காத்திருந்தது.

(இடி தொடரும்)

---

# அஜித்-ஹீரா உறவு முறிந்தது...



சினிமாக் காதல் போன்றது அல்ல நிஜக் காதல். அதுபோல நிஜக் காதலர்கள் போன்றவர்கள் அல்ல சினிமா உலக காதலர்கள். பல நடிக, நடிகையர் அதனை நிரூபித்து வருகின்றனர்.

அஜித்குமார், ஹீரா இருவரும் காதலித்ததும், கைகோர்த்து உலகம் சுற்றியதும் தெரிந்த சங்கதி. கடந்த ஆண்டு ஜூலை மாதத்தில் இருவரும் பிரிந்தனர். ஹீரா ஆவேசமாக பேட்டிகளும் கொடுத்தார்.

பின்னர் சில மாதங்களுக்குள் ஊடல் முடிந்து கூடல் கண்டனர். மறுபடி காதல் வானில் சிறகடித்தனர்.

இப்போது மறுபடி குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார்கள். இம்முறை அஜித்குமார் நேரடியாக பத்திரிகையாளர்களை சந்தித்து பேட்டி கொடுத்திருக்கிறார்.

"கடந்த மூன்று வருடங்களாக என் தனிப்பட்ட வாழ்க்கைதான் முக்கியம் என்று நினைத்தேன். எல்லாவற்றையும் என் தனிப்பட்ட வாழ்க்கையில் இழந்துவிட்டேன்.

இப்போது எனக்கு என் தொழில்தான் முக்கியம். என் அப்பா, அம்மாவை அடுத்து என் தொழிலை நேசிக்கிறேன். அதுதான் முக்கியம் என்று கருதுகிறேன்" என்று கூறியுள்ளார் அஜித்.

அஜித்திடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவரது பதில்:

**கே: அந்தரங்க வாழ்க்கை என்று கூறுவது, ஹீராவுடன் வாழ்ந்த வாழ்க்கையைக் கூறுகிறீர்களா?**

ப: ஆமாம்!

**கே: அப்படியானல் ஹீராவுடன் உங்களுக்கு இருந்த உறவு முறிந்துவிட்டதாக கூறலாமா?**

ப: இந்தக் கேள்விக்கு நான் பதிலளிக்க விரும்பவில்லை.

**கே: உங்களுக்கு மணப்பெண் தேடுவதாகக் கேள்விப்பட்டோம். வேறு பெண்ணை திருமணம் செய்து கொள்ள நீங்கள் சம்மதம் கூறிவிட்டீர்களா?**

ப: என் அம்மா, அப்பா பார்க்கும் பெண்ணை திருமணம் செய்து கொள்வேன். நல்ல பெண் கிடைத்தால் நாளைக்கேகூட திருமணம் செய்து கொள்வேன். 2001ல் என் திருமணம் நிச்சயம் நடக்கும்.

**கே: காதல் திருமணத்தில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?**

ப: போகிற போக்கைப் பார்த்தால் பெற்றோர்கள் நிச்சயிக்கும் திருமணம்தான் சிறந்தது என்று தோன்றுகிறது.

# காதலனை மீட்ட காதலி



அவுஸ்திரேலியாவில் சிட்னிநகரில் சில்வர் வாட்டர் என்னும் சிறைச்சாலை இருக்கிறது. ஆயுதம் திருடிய குற்றத்துக்காக ஒருவர் இங்கு தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

25.03.99 அன்று அந்தக் கைதி தப்பித்துவிட்டார். கைதிகள் தப்புவது புதுமையல்ல. இந்த ஆசாமி தப்பிய முறைதான் புதுமை.

சிறைச்சாலை மைதானத்தில் திடீரென்று ஹெலிகொப்டர் வந்து இறங்கியது. அதனை செலுத்தி வந்தவர் ஒரு பெண்.

அந்தப் பெண் துப்பாக்கியும் வைத்திருந்தார். அந்தக் கைதி ஓடிச்சென்று ஹெலியில் ஏறினார். ஹெலி பறந்து போனது.

சிட்னிக்கு வெளியே ஒரு இடத்தில் இறங்கி, கார் ஒன்றைக் கடத்திக்கொண்டு சென்றுவிட்டனர். ஹெலியில் வந்தவர் கைதியின் காதலியாம். காதலனுக்காக ஆபத்தைச் சந்திக்க துணிந்திருக்கிறார்.

# நாடு கடத்தல்



தாய்லாந்தில் கடற் கரைகளில் உல்லாசப் பயணிகளது தொல்லை தாங்க முடியவில்லை.

நிர்வாணமாக புரளுவது, பகிரங்கமாக கடற்கரையில் காதல் லீலைகளில் ஈடுபடுவது என்று ஒரே கும்மாளம்.

பொறுத்துப் பொறுத்துப்பார்த்த தாய்லாந்து அரசு இப்போது பொங்கி எழுந்துள்ளது.

கடற்கரைகளில் காதல் லீலைகள் செய்யும் வெளிநாட்டவர்கள் உடனடியாக நாடு கடத்தப்படுவர் என்று சட்டம் கொண்டுவந்துள்ளது.

இத்தகைய தவறுகள் நடக்காது கண்காணிக்க பொலிசாருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# தங்கப் பதக்கம்



உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் எதிர்வரும் மே மாதம் ஆரம்பமாவதை அடுத்து, இப்போதே கிரிக்கெட் இரசிகர்கள் திருவிழா உற்சாகம் கொள்ளத் தொடங்கிவிட்டனர்.

உலகக் கோப்பை போட்டியில் பெரிதும் எதிர்பார்க்கப்படும் கதாநாயகன் டெண்டுல்கர். அவரது உருவம் பொறித்த தங்கப் பதக்கம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

உலகெங்கும் இந்த தங்கப் பதக்கம் விற்பனை செய்யப்பட உள்ளது. இந்தியாவில் இதன் விலை 4 ஆயிரம். நம்நாட்டுக்கு வந்தால் இருமடங்கு விலையாக இருக்கலாம். வாங்க ஆட்கள் இருக்கிறார்கள்.

# காருக்குள் விவகாரம்



இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த ஜெருசலத்தில் நடந்த கிளுகிளுப்பான விவகாரம் இது.

போக்குவரத்துப் பொலிசாரையும் அலட்சியம்செய்து ஒரு கார் தாறுமாறாக ஓடிக்கொண்டிருந்தது.

அதனைக் கண்ட சிறை அதிகாரி ஒருவர் தனது காரில் அந்தக் காரைத் துரத்திப் பிடித்தார். அப்போது அவர்கண்ட காட்சி அதிர்ச்சியடைய வைத்தது.

நிர்வாணக் கோலத்தில் இருந்த அழகி ஒருத்தி, கார்ச் சாரதியின் மடியில் அமர்ந்திருந்து செக்ஸ் உறவில் ஈடுபட்டிருந்தாள்.

உடனடியாக அக்காரை ஓரமாக நிறுத்த உத்தரவிட்டார் அதிகாரி. பின்னர் போக்குவரத்து பொலிசார் வந்து வழக்குப் பதிவு செய்தனர்.

அந்தப் பெண் இடைவழியே தன் காரில் ஏறியதாகவும், அவளது கவர்ச்சியில் மயங்கி போக்குவரத்து விதிகளை மீறி தவறு செய்ததாகவும் சாரதி கூறியுள்ளார்.



## வரைந்தது எப்படி?

→ படத்தைப் பார்த்ததும் அற்புதமான ஓவியம் என்று பாராட்டத் தோன்றும். ஆனால் இந்த ஓவியத்தின் பின்னணியை அறிந்தால் ஆச்சரியப்படுவீர்கள்.

12 ஹெக்டேயர்- (30 ஏக்கர்) கோதுமை வயலில் இவ்வோவியம் வரையப்பட்டுள்ளது. இதனை வரைய ஸ்ரேன் ஹேட் என்ற கலைஞர் பயன்படுத்திய 'தூரிகை என்ன தெரியுமா? உழவு இயந்திரம்! நம்ப முடியாதிருக்கிறதல்லவா? அதுதானே இது உலக சாதனையாக மெச்சப்படுகிறது.

அமெரிக்காவின் தென்மேற்கு கன்ஸாஸ் மாநிலத்திலுள்ள கோதுமை வயல்களை தன்னுடைய 'கை வண்ண'த்துக்கு ஸ்டேன் ஹேட் களமாகப் பயன்படுத்துகிறார். அமெரிக்கப் பழங்குடியினரின் வம்சாவளியில் பிறந்தவரான சகினா கிராண்ட் என்பவரின் உருவத்தையே இப்படத்தில் உழவு இயந்திரம் மூலம் தத்ரூபமாக ஃடேன் ஹேட் வரைந்திருக்கிறார்.



மாடுமேய்ப்பாளர் (கௌ போய்) ரோஜர்ஸ் என்பவரின் பிரமாண்டமான உருவமே இவருடைய ஓவியங்களில் மிகப் பெரியது என்று கூறப்படுகிறது.

இப்படத்தை 65 ஹெக்டேர் (160 எக்கர்) வயல் பரப்பில் ஸ்டேன் ஹேட் வரைந்துள்ளார். இது தவிர மிகப் பெரிய அளவிலான சூரிய காந்தி பூ ஒன்றையும் இவர் வயல் வெளியில் வரைந்துள்ளார்.

உலகிலேயே உழவு இயந்திரத்தால் வயலில் வரையப்பட்ட முதல் ஓவியம் இதுதான். வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்.

## முதந் பரிசு

↑ வட அமெரிக்காவின் சிறந்த இசைக் கலைஞரை கண்டுபிடிக்கும் போட்டி ஒன்று லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்றது. இசைக் கலைஞர் தனியாகப் பாடாமல் இன்னொருவருடன் இணைந்து பாட வேண்டும் என்பது நிபந்தனை.

அதாகப்பட்டது, அன்று நடந்தது வளர்ப்பு பிராணிகளுக்கான இசைப் போட்டி. வளர்ப்புப் பிராணிகளுடன் அவற்றின் எஜமானியோ, எஜமானரோ இணைந்து பாடலாம்.

அப்போட்டியில் பரிசுபெற்ற 'பூடில்' இன சன்னம் சிறு நாய்க்குட்டியே இந்த அழகியின் அணைப்பில் காணப்படுகிறது. அணைத்திருப்பவர் கனடாவைச் சேர்ந்த நடிகை. பெயர்: ஆன்ட்று. போட்டியில் இருவரும் இணைந்து பாடுவதையே காண்கிறீர் கள். பரிசு பெற்ற 'பூடில்' இன நாய்க்கு 'பொம்ஜின்' என்று பெயர்.

நாயின் இசையை ரசிக்கக்கூட ஒரு போட்டி! உலகில் எத்தனை வினோதங்கள்! ■

## ஆட்டம் இழக்காமல் 99




↑ உலக சாதனை படைத்து சிலர் நீண்ட காலத்திற்கு முன்னர் இன்றும் உயிருடன் தான் இருக்கிறார்கள். அத்தகைய சில வயோதிபர்கள் இன்றும் திடகாத்திரமுடன் வாழ்ந்து வருகிறார்கள்.


படத்தில் காணப்படுபவர் லென்வேல் ஒன்ஸ்லோ. இந்த அம்மானுக்கு இப்பொழுது 99 வயதாகிறது அடுத்த வருடம் சதம் போட்டுவிடுவார். பிரிட்டனிலுள்ள பேர்மிங்ஹாமில் வாழ்ந்து வருகிறார்.

இரண்டாவது உலகப் போரின் போது பிரிட்டிஷ் இராணுவ வீரர்களுக்கான மோட்டார் சைக்கிள்களை வடிவமைத்துக் கொடுக்கும் பணியை ஏற்றிருந்தார். ஒன்ஸ்ளொவுடன் அதே தொழிலில் போட்டி போட்டவர்கள் எவரும் இன்று உயிருடன் இல்லை.

1890ம் ஆண்டு பிறந்த ஒன்ஸ்லோ தனது 12வது வயதில் மோட்டார் சைக்கிளில் ஓடிப் பழகினார். அத்துடன் நின்றுவிடாமல், அந்த வயதிலேயே மோட்டார் சைக்கிள்களைப் பாகம் பாகமாகப் பிரித்து மீண்டும் பொருத்தி ஓடவைத்து அசத்தினாராம். புதுப்புதுப் பாகங்களையும் தானாகவே செய்து பொருத்தி பரீட்சித்துப் பார்ப்பாராம்.

இன்றும்-இந்த வயதிலும்-தானே வடிவமைத்து மோட்டார் சைக்கிளில் ஜாலியாக சுற்றுகிறார். இவ்வண்டிக்கு அவர் சூட்டிய பெயர் என்ன தெரியுமா?- 'சூப்பர் ஒன்ஸ்லோ ஸ்பெஷல்' ■

## வாகன வீடு!





↗ வீடில்லாப் பிரச்சனை ஐரோப்பிய நாடுகளிலும் தலை தூக்கியுள்ளது. வீடுகள் வாங்கினால் ஊதியத்தில் பாதியை மாதா மாதம் கட்டினால் தான் கடன் தீரும். வாடகைக்கு குடியிருப்பதும் கட்டுப்படியாகாது.

அதனால் ஐரோப்பிய நாடுகளில் இப்போது இந்த வாகன வீடு மவுசு பெறத் தொடங்கியுள்ளது.

முன்பக்கம் மட்டும் வாகன என்ஜின் இருக்கும். பின்பகுதியில் படுக்கையறை, குளியலறை, படிக்கும் அறை என்று சகல வசதிகளும் இருக்கும். நாமிருவர், நமக்கிருவர் என்ற கொள்கையுடைய குடும்பம் தாராளமாக தங்கலாம்.

இரவில். இந்த வாகன வீடுகளை நிறுத்தி வைக்க மைதானங்கள் உள்ளன. பகலில் வாகனம். இரவில் வீடு.

## விரல்கள் 24



↑ கையில் பத்து, காலில் பத்து, மொத்தம் இருபது விரல்கள் என்பது பொதுவானது. விதிவிலக்காக இருந்தால் புதுமைதானே.

எழில் கொஞ்சும் மலையகத்தில் மஸ்கெலியாவைச் சேர்ந்த பொ.சிவராஜாவுக்கு 24 விரல்கள். (இரண்டு டசின்.) கால்களில் ஆறு, ஆறு, கைகளில் ஆறு, ஆறு. சிலருக்கு கைகள் இரண்டில் மட்டும் ஆறுவிரல்கள் இருக்கும். இவருக்கோ கை, கால் இரண்லும் படைக்கும்போதே திட்டமிட்டு செய்த மாதிரி ஆறுவிரல்கள். புதுமைதானே. ■

## தகவல் பெட்டி

→ தலைகீழாக நடந்து உலக சாதனை படைத்தவர் பற்றி ஏற்கனவே முரசில் படித்திருப்பீர்கள்.

தலைகீழாக சமதரையில் நடந்துதான் அந்த சாதனை படைக்கப்பட்டது. ஆனால் நம் அயல் நாடான அன்புக்குரிய தமிழ்நாட்டில் மலையின் உச்சியில் இருந்து தலைகீழாக நடந்து சாதனை படைத்துள்ளார் கருணாகரன்.

பழனி மலையில் 700 படிக்கட்டுக்கள் உள்ளன. உச்சியில் இருந்து மளமளவென்று 700 படிகளையும் தலைகீழாகத் தாண்டினார் கருணாகரன்.

இந்த சாதனையை உலக சாதனையாக பதிவு செய்யுமாறு கின்னசுக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

கருணாகரன் கராத்தே பயிற்சியாளர். சாதித்துக் காட்ட வேண்டும் என்று தெம்பு இருந்தால், அம்பாக செயற்பட்டு இலக்குகளை எட்டலாம் என்கிறார். ■



## உச்சிமுதல் தரைவரை

## மரண நாற்காலி

→ "பௌத்த தர்மத்தைக் கடைப்பிடிக்கும் இந்நாட்டில் எந்தக் குற்றவாளிக்கும் மரண தண்டனை வழங்கலாகாது" என்று 'தர்மிஷ்ட ஆட்சி'யை நிலை நிறுத்தப்போவதாகக் கூறிய முன்னாள் ஜனாதிபதி கே.ஆர்.ஜயவர்த்தன தூக்குத் தண்டனைக்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

இப்பொழுது நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்து விட்டமையினால், மீண்டும் தூக்குத் தண்டனை வழங்குவதற்கு ஜனாதிபதி சந்திரிக்கா ஆணை பிறப்பித்துவிட்டார். அதனைத் தொடர்ந்து கண்டி போகம்பரைச்சிறைச்சாலை போன்ற இடங்களில் தூக்கிலிடப்படும் இடங்கள் புதுப் பொலிவு பெற ஆரம்பித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.


குற்றவாளியாகக் காணப்பட்ட ஒரு மனிதனை தூக்கக் கயிற்றில் தொங்கவிட்டுக் கொல்வது மனிதாபிமானமற்ற செயல் என்பதனால், மேலை நாடுகளில் மின்சாரக் கதிரை (அல்லது படுக்கை) இப்பொழுது பயன்படுத்தப்படுகிறது. இதில குற்றவாளியை இருக்க வைத்து (அல்லது படுக்கவைத்து) உயரழுத்த மின்சக்தியைப் பிரயோகித்தால் பட்டென்று-நோவு-வேதனை எதுவுமின்றி-உயிர் போய்விடும்.

இத்தகைய மின்சாரக் கொலைச் சாதனத்தைக் கண்டு பிடித்தவர் ஒரு பல் வைத்தியர்.

அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் அல்பேட் சௌத் விக் என்பவர் தன்னிடம் பல் பிடுங்க வரும் நோயாளிகளை அமர அல்லது படுக்க வைக்கப்பயன்படுத்திய ஆசன அமைப்பை வைத்தே மின்சாரக் கொலைக் கதிரையை வடிவமைக்கும் யோசனையை உருவாக்கினார்.

தனது கருத்தை அமெரிக்க சட்டமன்ற உறுப்பினர் (செனட்டர்) ஒருவரிடம் கூறியிருக்கிறார். இந்த 'மனிதாபிமான யோசனை'யின்படி மின்சாரக் கதிரை தயாரானது. நியூயோர்க் நகரில் 1888ல் முதலாவது மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

அடுத்த வருடம் அமெரிக்காவின் பல மாநிலங்களிலும் 'மின்சார கதிரை மரண தண்டனை, சட்டமாக்கப்பட்டது.



(நாற்காலி ஆசை உள்ளோருக்கு சாகும் போதும் நாற்காலியில் அமர்ந்து சாவது சந்தோசமாக இருக்கக்கூடும்)

இன்று உலகில் ஆக 97 நாடுகளில் மரணதண்டனை நடை முறையில் உள்ளது. சிறீலங்காவையும் சேர்த்தால் 98 நாடுகள் மரண தண்டனை விதிக்கும் நாடுகளாகின்றன. ■

சினிமா விமர்சனம்

## கௌசல்யா முத்தம்

மலையாளத்தில் இருந்து தமிழுக்கு வந்துள்ள மொழி மாற்றுப்படம் 'ஏலம்'. 'டெல்லி டைரி', 'ஹைவே' போன்ற மொழிமாற்றுப் படங்கள் மூலம் தமிழ்ப் பட ரசிகர்களிடம் பிரபலமானவர் சுரேஷ் கோபி. அவர்தான் நாயகன். நாயகி கௌசல்யா.

இரண்டு சாராய கோஷ்டிகள் இடையே நடைபெறும் மோதல்தான் பிரதான கதை. இதற்கிடையே சுரேஷ் கோபியும், கௌசல்யாவும் காதலிக்கின்றனர்.

உதவி கலெக்டராக வருகிறார் கௌசல்யா. தமிழ்ப் படங்களில் பவ்வியமாக நடிக்கும் கௌசல்யா, இதில் முத்தக் காட்சியில் நடிக்கிறார். உதட்டோடு உதடு வைத்து சுரேஷ் கோபி முத்தமிடும் காட்சி தணிக்கைக்கு தப்பிவிட்டது.

சண்டைக்காட்சிகளில் மகா விறு விறுப்பு. சுரேஷ் கோபியின் நண்பரே அவரை ஒழித்துக் கட்ட உதவுவது, நெருங்கிய உறவினரே எதிரியின் கையாளாக இருப்பது போன்ற திருப்பங்களும் கதையில் உண்டு.

சண்டைப்பிரியர்கள் நம்பிப் பார்க்கலாம். 'ஏலம்' பொழுது போக்குக்கு உத்தரவாதம், சலிப்பு ஏற்படாது. மலையாள பிரபல இயக்குநர் ஜோஷி இயக்கியுள்ளார். சத்யராஜ் நடித்த 'ஏர்போர்ட்' படத்தையும் ஜோஷிதான் இயக்கியிருந்தார்.

## பலமான காயமா?

பிரசாந்த்துக்கு படப்பிடிப்பில் காயம் ஏற்பட்டது மெய். அதனை பெரிய காயம் என்றும், அதற்காக சிகிச்சை பெற வெளிநாடு போக உள்ளதாகவும் வந்த செய்திகள் பொய்!

கன்னத்தில் லேசான காயம்தான் ஏற்பட்டது. அதனை பெரிய விளம்பரமாக மாற்றியது 'பூமகள் ஊர்வலம்' படத் தயாரிப்பாளர்கள்தான்.

தமது படத்திற்கு விளம்பரமாக இருக்கும் என்பதால், பத்திரிகைகளில் பெரிதாக செய்தி போட வைத்தனராம்.

குறிப்பிட்ட செய்திகள் வெளியான சில நாட்களின் பின்னர் படப்பிடிப்பில் கலந்துகொண்டார் பிரசாந்த்.

## படையப்பா பதிவப்பா

'படையப்பா' படம் வெளிவரும் நாளை ரஜினி ரசிகர்கள் விழாவாக கொண்டாடப்போகிறார்கள். எப்போது வெளிவரும் என்று காத்திருக்கிறார்கள்.

நம்நாட்டிலும் திரையில் பார்க்க முடியாவிட்டாலும் வீடியோவில் பார்க்கத் துடிக்கிறார்கள்.

இப்போதே பல வீடியோ கடைகளில் படையப்பா பிரதிக்கு பதிவு செய்து வைத்துவிட்டனர் ரஜினி ரசிகர்கள்.

## 'மே' மாதம் டும் டும்

குஷ்பு, சுந்தர் சி. கல்யாணம் எப்போது? என்ற கேள்விக்கு விரைவில் பதில் தரப் போகிறார்கள்.

இந்த ஆண்டு மேமாதம் கோயம்புதூரில் மங்கள வாத்தியம் முழுங்க மாலை மாற்றப் போகிறார்கள்.

அப்படியிருந்தும் குஷ்பு, சுந்தர் இடையே அடிக்கடி லடாய் என்று செய்திகள் வந்த வண்ணம் உள்ளன.

## மீட்கப்பட்டனர்

ரூபஸ்ரீ, குமரிமுத்து, காந்திமதி, மீசை முருகேஷ் ஆகியோர் சிங்கப்பூருக்கு சென்றனர். அங்கு விசா விவகாரத்தில் பொலீசில் மாட்டிக்கொண்டனர்.

பின்னர் அங்குள்ள தமிழ் பிரமுகர் ஒருவர்தான் உதவிக்கரம் நீட்டி மீட்டாராம்.

## "ஈழப்போராட்டத்தை வைத்து படம் எடுக்க ஆசைதான்!"

ஈழப்போராட்டத்திற்கு எதிராக சில படங்கள் வருகின்றன. அதற்கு ஆதரவாக நீங்கள் ஒரு படம் எடுக்கலாம் அல்லவா? என்று ஒளிப்பதிவாளரும், இயக்குநருமான பாலு மகேந்திராவிடம் கேட்கப்பட்டது.

அதற்கு பாலு அளித்துள்ள பதில்- "நிச்சயமாக எடுக்கலாம். அதற்கான முயற்சியில் பத்து வருடங்களுக்கு முன்பாக நான் தீவிரமாக இறங்கியபோது பயங்கரமான அனுபவங்கள் ஏற்பட்டன. அதனால் நான் பின்வாங்கினேன்.

ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டம் பற்றி ஒரு படமாவது நான் எடுத்தேயாக வேண்டும் என்ற அவா இன்றும் என்னுள் ஜுவாலையாக எரிந்து கொண்டிருக்கிறது.

அப்படி எடுக்கும்போது அது நிச்சயம் ஒரு காதல் கதையாக இருக்காது. விடுதலைப் போராட்டங்களுக்கு நாம் இங்கு காதல் கதைகள் மூலம்தானே தீர்வு சொல்லி வருகிறோம்." என்று கூறியுள்ளார் பாலு.

"நமக்கு ஏன் இதுவரை ஒஸ்கார் விருது கிடைக்கவில்லை?" என்ற கேள்விக்கு பதிலளிக்கும்போது:

"முதலில் நீங்கள் ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும். ஒஸ்கார் விருதுதான் உலகின் மிகப் பெரிய சினிமா விரு... என்று நீங்கள் நினைப்பது தவறு. ஒஸ்கார் விருதைவி... மரியாதை பண்ணப்படும் விருதுகள் பல உள்ளன.

ஒஸ்கார் விருது ஹொலிவூட் படங்களது உலகளாவிய ஆ... ரஞ்சக புகழோடு சம்பந்தப்பட்ட விருது. மிகவும் சிறந்த வெ... நாட்டுப்படம் என்ற ஒரே ஒரு விருதுதான் வேறு மொழி... படங்களுக்கு வழங்கப்படும். இவை தவிர வேறு எந்த ஒரு ...லும் வேறு மொழிப் படங்கள் ஒஸ்கார் விருது வாங்க முடியாது.

சிறந்த வேற்று மொழிப் படங்களோடு நமது தமிழ்ப் பட...களை ஒப்பிட்டுப் பார்த்தால், அந்த விருதுகூட நமக்கு ஏ... கிடைக்கவில்லை என்பது புரியும்."

## தடையப்பா

ரஜினியின் 'படையப்பா' தெலுங்கிலும் தயாராகி...கிறது. 'படையப்பா' என்னும் சொல் ஆந்திராவில் நுழை... முடியாது. ஆகவே முருகன் விஷ்ணுவாகமாறி. அ... 'நரசிம்மா' ஆகியுள்ளார்.

தமிழர்கள் மட்டும் வணங்கும் கடவுளாகவே ஆந்... மாநிலத்தவர் முருகனை கருதுகிறார்கள். அதனால்தா... இந்த மாற்றம். இந்துக்கள் மத்தியிலேயே இந்துக் கடவு... மொழி ரீதியாக பிரித்து விட்டார்கள்.




**முகப்பில்** ரம்யா கிருஷ்ணன்
படம்: படையப்பா
முரளி

திரையுலக மறுபக்கம் **97**
தமிழ்நாட்டிலிருந்த **மயன்**

# பிரசாந்த் வீட்டில் ஆட்டுத்தலை வீசியது யார்? உண்மை அம்பலம்!

**ச**ங்கீத நடிகையை பார்த்திபன் காதலித்தார். அதனால் பார்த்திபன், சீதா இடையே உள் குடும்ப மோதல் ஏற்பட்டது. பின்னர் பார்த்திபனுக்கு சங்கீத நடிகைக்கும் உறவு முறிந்தது.

நடிகர் ராமராஜன் தன் மனைவி நளினியுடன் முரண்பட்ட நேரத்தில், சங்கீத நடிகையை நெருங்கினார். இருவரும் திருமணம் செய்யவும் தயாராகினர். ஆனால், நளினியும் ராமராஜனும் ஊடலை துறந்து கூடியதால் அத் திட்டம் இரத்தாகியது.

தொடர் காதல் தோல்விகளால் துவண்டு போன சங்கீத நடிகையை தட்டிக்கொடுத்தவர் ஒளிப்பதிவாளர் சரவணன். கடந்த ஆண்டே கல்யாணம் செய்ய இருந்தனர்.

சங்கீத நடிகையின் துரதிஷ்டம், இரு வீட்டிலும் எதிர்ப்புக்கொடி. அதனால் இந்த ஜோடி தற்போது இரகசியமாக தம் காதலைத் தொடர்கிறது.

சங்கீத நடிகை தனது காரை தானே ஓட்டிச் செல்லுகிறார். ஏதாவது ஷொப்பிங் காம்ப்ளக்ஸில் காரை நிறுத்திவிட்டு அங்கு தயாராக நிற்கும் சரவணனின் காரில் தொற்றிக்கொள்கிறார்.

சென்னை கடற்கரைகளில் ஒன்றான மகாபலிபுரம் சாலையில் சரவணன் கார் அடிக்கடி தென்படுகிறது.

காரை சாலை ஓரமாக நிறுத்தி வைத்துவிட்டு காருக்குள்ளேயே தனிமையில் இனிமை காண்கிறார்கள் சங்கீத நடிகையும் சரவணனும்.

### தொடர்தொல்லை

**இ**ளம் நடிகர்களுக்கு பெண்களது காதல் தொல்லைகள் அதிகமாகிவிட்டன. பிரசாந்த், விஜய், அஜித், அப்பாஸ் ஆகியோருக்கு தொல்லைகள் அதிகம்.

பிரசாந்த் வீட்டின் முன்பாக மந்திரிக்கப்பட்ட ஆட்டுத்தலையும், முட்டைகளும் வீசியெறியப்பட்டன. இது பற்றி பிரசாந்த்தும் அப்பா தியாகராஜனும் பொலிஸ் கமிஷனரிடம் புகார் கொடுத்தனர்.

அச் செய்தி பத்திரிகைகளிலும் பெரிதாக வெளியானது. பரபரப்பாகப் பேசப்பட்டது.

அனுபாமா என்ற பெண்தான் இதன் பின்னணியில் நின்றதாக பொலிஸ் கூறியது. ஆனால் அதற்கான காரணத்தை கூறாமல் பொலிஸ் மறைத்துவிட்டது.

தற்போது அந்த உண்மையை தமிழக புலனாய்வு நிருபர் ஒருவர் கண்டுபிடித்து வெளியிட்டுள்ளார். அந்த விபரங்கள் இதோ.

பிரசாந்த் வீட்டில் ஆட்டுத்தலை வீசப்பட்ட அன்றைய இரவு சுமார் 11.30 மணியிருக்கும்.

சிணுங்கின தொலைபேசியை தியாகராஜன் எடுக்க, "இப்போ ஆட்டுத்தலை. அடுத்தது பிரசாந்த் தலை!" என்று தொலைபேசி. எண்ணை எக்சேஞ்ச் மூலம் கண்டு பிடித்தது பொலிஸ்.

அனுபாமா என்ற பெண்தான் பிரசாந்தை மிரட்டியவர். அந்தப் பெண்மீது வழக்கு எதுவும் பதியவில்லை. அறிவுரை சொல்லி அனுப்பப்பட்டார் என்றது பொலிஸ் செய்தி.

உண்மையோ வேறு!

அது என்ன?

சினிமாவில் தற்போதும் கொடி கட்டிப் பறப்பவரின் அண்ணன் மகள் வாசுகி. குடும்ப நட்பால்... பிரசாந்த் வீட்டு விசேஷங்களுக்கு வாசுகி வருவது வழக்கம். அப்படி வரும்போது தன் கல்லூரித் தோழியான தொழிலதிபர் ஒருவரின் மகளான அனுபாமாவையும் அழைத்து வருவார்.

பிரசாந்த்துடனான பழக்கத்தை காதலாக்க வாசுகி முற்பட, இரு வீட்டிலும் வாசுகியை கண்டித்தனர். மறுபடியும் ஒரு இடைவெளிக்குப் பின்னர் பிரசாந்த் வாசுகி பழகினார்கள்.

மறுபடியும் பெரியவர்கள் கண்டித்தனர். அதிலும் தியாகராஜன் ரொம்பவே வாசுகியைக் கண்டித்தார்.

இந்நிலையில்தான் ஜீன்ஸ் படம் வெளியானது. பிரசாந்த் நடவடிக்கைகளும் மாறியது. அப்போது முட்டைக் கூட்டில் ஆசிட் நிரப்பி பிரசாந்த் வீட்டுக்கு வீசப்பட்டது. அப்போது பொலிசில் புகார் செய்தார் தியாகராஜன்.

### முட்டை வீச்சு

'ஜீன்ஸ்' பட தோல்விக்கு காரணம் பிரசாந்த்தான் என்ற கோபத்தில், அந்தப் படம் சம்பந்தப்பட்ட சிலர் ஆசிட் வீச்சு நடத்தியதாக அப்போது சொல்லப்பட்டது. அதன் பின்னர் எந்தப் பிரச்சனையும் இருக்கவில்லை.

பின்னர் சில மாதங்கள் சென்றதும், தொலைபேசி மிரட்டல்கள் வந்தன. அதன்பிறகே மந்திரித்த முட்டைகளை மஞ்சள் துணியில் வைத்து, அனுபாமா உதவியோடு பிரசாந்த் வீட்டில் போட்டார் வாசுகி. அறுபட்ட ஆட்டுத்தலை வீச்சுக்கும் வாசுகிதான் காரணம்.

சினிமா உலக பெரும் புள்ளியின் உறவுப் பெண் என்பதால் வாசுகியின் பெயர் வெளியே வரவில்லை.

பிரசாந்த் வாசுகியைக் காதலித்தாரா? என்றால் நட்பாக பழகியதை அப்பெண் தப்பாக எடுத்துக் கொண்டார் என்கிறார்கள்.

"கண்ணாடி முன்னாடி
தள்ளாடித் தள்ளாடி
வண்டாக ஆட்டுமா?-அரை
கண்பட்டு கைபட்டு
பண்பட்ட தேன்சிட்டு
கள்ளுண்டு பார்க்கட்டுமா?

பருவம் எல்லாம்
அதிசயங்கள்,
இதயமெல்லாம் இரகசியங்...
அதிசயங்கள்
மடியில் வைத்தேன்.
இரகசியங்கள்
மனதில் வைத்...




### திருட்டு வீடியோ

'எதிரும் புதிரும்' படம் சமீபத்தில்தான் தமிழ்நாட்டில் திரைக்கு வந்திருக்கிறது. அதற்கு முன்னரே நம்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வீடியோ மற்றும் சி.டி.யில் வெளியாகி விட்டது. அதனைப் பார்த்து நாமும் விமர்சனம் வெளியிட்டிருந்தோம்.

'எதிரும் புதிரும்' பட வீடியோ வெளியானதால் தயாரிப்பு வட்டாரம் கதிகலங்கிப்போனது. தொடர்ந்து இவ்வாறு நடந்தால் என்னாவது? தமிழக முதல்வரிடம் முறையிட்டனர். திருட்டு வீடியோ எடுப்போர் கைதானால் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் ஒரு வருடம் சிறையில் வைக்கப்படுவர் என்று கூறியுள்ளார் கருணாநிதி. அதனால் 'என்றென்றும் காதல்' உட்பட பல படங்களுடைய வீடியோ பிரதிகள் வெளியாகத் தாமதமாகியது.

### 555

'உன்னைத் தேடி' படத்தில் அறிமுகமானவர் மாளவிகா. இப்போது 'பூப்பறிக்க வருகிறோம்' படத்திலும், அஜித், கார்த்திக் நடிக்கும் 'ஆனந்த பூங்காற்றே' படத்திலும் நடிக்கிறார்.

மாளவிகா தாராளமான நடிகை. தன்னுடன் நடிக்கும் நாயகர்களுடன் சட்டென்று ஒட்டிக்கொள்வார். மாளவிகா புகை பிடிக்கும் பழக்கம் உள்ளவர். அவர் விரும்பும் சிகரெட் 555.

நடிகர்கள் சிகரெட் பிடித்தால், நெருக்கமான காட்சிகளில் நடிக்கும்போது வாயை கழுவிவிட்டு செல்லுவார்கள். நடிகைகளும் புகைத்தால் என்னாகும்? மாளவிகாவும் அஜித்துடன் நெருங்கி நடிக்கும் காட்சிகளில் அப்படித்தான் செய்தாராம்.

அதனைக் கவனித்த அஜித், தனக்கு சிகரெட் மணம் பிடிக்கும் என்று கூறிச் சிரித்தாராம். அதனால் 'உன்னைத் தேடி' படத்தில் மாளவிகாவுக்கு சிகரெட் பிடிப்பதில் சிரமம் இருக்கவில்லை.

# மினி சினி

✪ விஜயகாந்தை வைத்து 'கன்னுபடப் போகுதய்யா' படத்தைத் தயாரித்து வரும் சூப்பர் குட் ஃபிலிம்ஸ் நிறுவனம், பிரபு கதாநாயகனாக நடிக்கும் படமொன்றையும் தயாரிக்கிறது.

✪ தமிழில் படமேதுவும் இல்லாமல் இருக்கும் வினிதா 'ஹேரா' என்ற இந்திப்படத்தில் நடித்து வருகிறார். இதில் மிதுன் சக்கரவர்த்தி கதாநாயகன்.

✪ பாலுமகேந்திரா இயக்கத்தில் பார்த்திபன் கதாநாயகனாக நடிக்கவிருக்கும் புதிய படத்திற்கு 'அள்ளி அணைக்கையிலே' என்று பெயரிடப்பட்டுள்ளது.

✪ 'படையப்பா'வில் ரஜினியின் மகளாக நடித்து வரும் வனிதா விஜயகுமார், 'ஓம் நமச்சிவாய' என்ற கன்னடப்படத்தின் மூலம் அங்கு அறிமுகமாகிறார்.

✪ பிரசாந்த்-கௌசல்யா இணைந்து நடிக்கும் 'ஆசையில் ஓர் கடிதம்' படத்திற்கு முதலில் 'அன்பே', 'அன்பே அன்பே', 'ஆசைக்காதல்', 'ஓர் ஆசைக் காதல் கடிதம்' எனப் பல பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டிருந்தன.

✪ மணிரத்னத்தை இயக்குநராக அறிமுகப்படுத்திய சத்ய ஜோதி ஃபிலிம்ஸ், அடுத்து தயாரிக்கும் படத்தின் மூலம் மணிரத்னத்தின் உதவியாளர் கவி கணேஷை இயக்குநராக அறிமுகப்படுத்த உள்ளது.

✪ 'பிரத்யார்தா' என்ற கன்னடப்படத்தில் உள்நாட்டு மந்திரி என்ற முக்கிய வேடத்தில் நடிக்க நடிகர் திலகத்தை அணுக, அவர் அதில் நடிக்க மறுத்துவிட்டாராம்.

✪ கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் விஜய் ஜோடியாக 'மின்சாரக் கண்ணா' படத்தில் நடிக்கும் மீனா, அதற்காக தன் உடம்பை மெலிய வைக்க உடற்பயிற்சி செய்து வருகிறார்.

✪ 'தலைவாசல்' செல்வா இயக்கும் 'நண்பா' படத்தில் அர்ஜுன்-ஜோதிகா, ரஞ்சித்-ஈஸ்வரிராவ் என இரட்டை ஜோடிகள் இணைந்து நடிக்கிறார்கள்.

✪ தமிழில் வெற்றி பெற்ற 'பூவேலி' தெலுங்கில் தயாராகி வருகிறது. தமிழில் நாயகியாக நடித்த கௌசல்யாவே தெலுங்கிலும் நடிக்கிறார்.

## ரம்யாவின் பயம்

ரஜினியோடு முதன் முதலாக ஜோடி சேர்ந்துள்ளார் ரம்யா கிருஷ்ணன். ஆனாலும் ரம்யாவுக்கு ஒரு பயம் ரஜினியை காதலித்து, ஏமாற்றமடைந்து, பின்னர் ரஜினிக்கு எதிராக வில்லியாகிறார். அதனால் ரஜினி ரசிகர்கள் தன்மீது கோபப்படப் போகிறார்களே என்று பயந்து போயிருக்கிறார் ரம்யா கிருஷ்ணன்.

அதனை ரஜினியிடமே நேரடியாக கூறினாராம். வாய்விட்டு சிரித்து விட்டாராம் ரஜினி. 'அப்படியெல்லாம் என் ரசிகர்கள் நடந்துக்க மாட்டாங்க. பயப்படாதே! தைரியமாயிரு' என்று கூறினாராம். அப்படியிருந்தும் ரம்யாவின் பயம் தீர்ந்ததாக தெரியவில்லை. ரஜினியின் நாயகி என்பது சந்தோசம். வில்லியாக என்பதால் பயம்.

## அஜீத்-மோனிகா

'துள்ளாத மனமும் துள்ளும்' படம் ...கா வெற்றிபெற்றுள்ளது. இதனை இயக்கியவர் எஸ்.எழில். கதை, வசனமும் அவர்தான்.

எழில் இயக்கும் அடுத்த படத்தின் நாயகன் முடிவாகிவிட்டது. அஜித்குமார். அவருக்கு ஜோடி மும்பை அழகி மோனிகா. கிளின்ரலின் உள்ளத்தை கிள்ளியவர் பெயரில் வரும் இந்த மோனிகா, யாருடைய நெஞ்சத்தைக் கிள்ளப் போகிறாரோ?

படத்தின் பெயர் இன்னமும் முடிவாகவில்லை. இசை: ...எஸ்.ஏ.ராஜ்குமார். தட... ...ம் ராஜசுந்தரம். ...படத்திற்கு பெயர் ...சூட்டா... ...விட்டாலும், ...படப்பிடிப்பு ...ஜோராமாக ...விட்டது.


நெப்போலியன்-சுவாதி
படம்: சிவன்


வெங்கடேஷ்-ரம்பா

## காதோடு சொல்லுகிறோம்

**ம**கனை வைத்து படம் எடுக்க அப்பா பூஜை போட்டார். இப்போது தள்ளிப் போடப்பட்டுவிட்டது. தன்னை வைத்து பணம் சம்பாதிப்பதிலேயே தந்தை குறியாக இருப்பதாக மகன் சலித்தாராம். மகன் மூன்றெழுத்து இளம் நாயகர்.

**மீ**ன் நடிகையிடம் அவரது உடல் பெருத்துவிட்டது என்று முன்னணி நாயகர் ஒருவர் கூறினாராம். அதனால் மிகவும் கலங்கிய நடிகை, உடலை குறைப்பதில் சிரத்தை காட்டிவருகிறார். இலண்டனில் இரகசியமாக சந்தித்தபோதுதான் நடிகர் அவ்வாறு கூறினாராம்.

**பா**ண்டிய நடிகருடன் கிசுகிசுக்கப்பட்ட மூன்றெழுத்து நடிகை அவர். 'ர'வில் தொடங்கி 'கா'வில் பெயர் முடியும். அந்த நடிகை சக நடிகைகளோடு ஃபயர் போல நெருக்கமாக பழகுவதாக பத்திரிகைகளில் செய்திகள் வந்தன. செய்தியைப் பார்த்தும் தகவல் எப்படி கசிந்தது என்று அதிர்ந்து போனாராம் நடிகை. அவர் மட்டுமல்ல, அவருடன் நெருக்கமாக உள்ள நடிகைகளும் அதிர்ந்து போயுள்ளனர்.

**பி**ரகாசமான வில்லன் நடிகரின் ஜொள்ளும், லொள்ளும் தாங்க முடியவில்லையாம். அவர் நாயகனாக நடித்த படம் நன்றாக ஓடியதால் மனிதர் தலைகால் தெரியாமல் ஆடுகிறார். 'பூ' நடிகை இயக்குநர் ஒருவரது காதலி என்பது தெரிந்தும், நடிகர் அவருடனும் சில்மிஷம் பண்ணினாராம். நடிகை நைசாக நழுவிவிட்டாராம்.

## ...தி

...ராஜாவின் பல படங்கள் ...தோல்வியைத் தழுவியதால், ...டியாவது ஜெயிக்கும் வெறி... ...ரார் தனது மகன் மனோஜ் ...க நடிக்க அவர் இயக்கி ...தாஜ்மஹால், படப்பிடிப்பு ...ம் முடிவடைந்துவிட்டது. ...யும் கட்டத்தில் ஒரு பெயர் ...மான படத்தின் பெயர்தான் ...ாதிராஜா தன் மகனின் ...றிவிட்டார். மனோஜ் என்ற ...பாரதியாக மாறிவிட்டது. ...என்றிருந்த பெயர் சினிமா ...திராஜாவானது. இப்போது ...ஜ் சினிமாவுக்காக மாற்றி...

## யாரை விரும்புகிறார்?

வீட்டிக்கு வருகிறார் அழகான மீனா. கண்டதுமே காதலிக்கிறார்கள் கரணும், ராஜீவ் கிருஷ்ணாவும்.

அதற்கிடையே இரண்டு சிறுமிகள் மீனாவோடு பழகி வருகிறார்கள். அவர்களது தந்தை பிரபு. சிறுமிகளுக்கு மீனா தங்கள் அம்மாவாக மாறவேண்டும் என்று ஆசை.

ஒரு பக்கம் இரண்டு காதலர்கள். மறுபக்கம் அன்பைப் பொழியும் சிறுவர்கள். மீனா என்ன முடிவு செய்கிறார்? அதனை அறிய 'மனம் விரும்புதே உன்னை' வரும்வரை காத்திருக்க வேண்டும்.

நடிகை லட்சுமியின் கணவர் சிவசந்திரன் இயக்குகிறார். இசை: இளையராஜா.

## ராஜஸ்தான்

சித்திரைப் புத்தாண்டுக்கு 'படையப்பா'வுடன் மோதும் படம்: 'மோனிசா என் மோனலிசா'. டி. ராஜேந்தர் படம் இது. இப்போது இன்னொரு படமும் புத்தாண்டு பந்தயத்தில் குதிக்க உள்ளதாம். சரத்குமார், விஜயசாந்தி நடித்த 'ராஜஸ்தான்' படம்தான் அது.

சத்யராஜ், விஜயகாந்த் போன்றோருடன் ஒப்பந்தமாகி, பின்னர் வாபஸானவர் விஜயசாந்தி. 'ராஜஸ்தான்' படத்திலும் இடையே வாபஸ்வாங்கிவிடுவார் என்று நினைத்தனர். ஆனால் ஏமாற்றாமல் நடித்து முடித்திருக்கிறார்.

## கைது

தமிழ்நாட்டில் படம் வெளியான சூட்டோடு இலங்கை போன்ற நாடுகளுக்கு வீடியோவாக வந்துவிடுகிறதல்லவா. அது எப்படி? சில படங்கள் திரைக்கு வருவதற்கு முன்னரே 'எடிட்டிங்' ரூமில் இருந்தும் நைசாக திருடப்படுகிறது. படம் திரைக்கு வந்ததும் திரையரங்க உரிமையாளர்களும் சி.டி., மற்றும் வீடியோக்காரர்களுக்கு நல்ல விலைக்கு விற்கிறார்களாம்.

'உன்னைத்தேடி' பட திருட்டு வீடியோ தொடர்பாக சென்னை திரையரங்க உரிமையாளர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## கவிதை எழுதுகிறேன்!

நான்,
ஒரு வறுமைக் கிராமத்தின்
வயிற்றிலிருந்து,
வழுக்கி விழுந்தேன்.

வந்த நாட்தொட்டுப்
பருவம் சில 'கடந்தேன்;
பள்ளி சென்றேன்;
பாரம்பரியம்,
வழி முறைக்குள் வாழ்ந்து வந்தேன்.

இன்றெனக்கு,...
உண்மைகளும் நேர்மைகளும்,
சந்தேகக் கூட்டுக்குள்
சலிக்கின்ற கிளிபோல,
சங்கடமாய்த் தெரிகிறது.

பொய்களால் கட்டிய
இந்த உலகக் கோட்டை,
தகர்ந்திடாமல் போய்விடுமோ?
என்ற தாழ்வுணர்ச்சி.
எனக்கு!

மற்றவர்கள் செவிடர்கள்;
மற்றவர்களுக்கு
நான் மடையன்.
நானும் அவர்களும்,
நிலவை ரசித்தோம்;
பிள்ளையும் பிசாசும் போல.
நான் சொல்வதை,
ஏற்றுக் கொள்ளச் சொல்லாமலே;
அவர்கள் புறக்கணித்து விடுகிறார்கள்!

அவர்கள் எதுவும் சொல்லாமலே
என்னை ஏற்கச் சொல்கிறார்கள்;
நான் அன்பையும் மெய்யையும்,
மேய்ந்து. தேடுகிறேன்!
நிர்வாண உலகத்தில்,
ஆடையுடன் நின்று வெட்கப்படுகிறேன்!

நான் சமுத்திரத்தில்,
நீச்சலடிக்கிறேன்;
அவர்கள் தரையில் துடுப்பு வலிக்கிறார்கள்!

அவர்கள் மேளமடிக்கிறார்கள்;
நான் புல்லாங்குழல் வாசிக்கிறேன்.

அவர்கள் கனைக்கிறார்கள்;
நான் கவிதை எழுதுகிறேன்!

**ஈச்சையூர்ச் சிவா.**

## உறுதி கொண்ட நெஞ்சினாய்

இன்னும் இந்த உடலில்
உயிர்
ஒட்டியிருக்கிறது;
எழு எழுவோம்.....!
***
பூத்துக்கிடந்த இந்தப் பூமி
புழுதிப்பட்டுப் போனதற்காய்
நாம்
அழுது வடிக்கப் போவதில்லை.
பாலை வனத்தையே
உழுது பயிரிட-நெஞ்சில்
உறுதியிருக்கிறதே
எழு எழுவோம்.....!
***
தோல்விகள் நிரந்தரமில்லை;
வெற்றிகள் நிச்சயமில்லை;
அதே காற்றும் நிலவும்
சூரியனும்
சுற்றி வருவது
துக்கம் விசாரித்து அல்ல...,
சுகம்கேட்டு–
எழு எழுவோம்....!
***
பசித்திருக்கும் வயிற்றைத்
தடவிப் பார்க்கிறோம்;
நோய்கண்ட உடம்புதான்
பசியெடுக்காது.
நாம் விதைத்தது விளையும்!
உழைத்தது உயர்வுதரும்!
எழு எழுவோம்.
***
வயது போயும்;
வாரிசுகள் வந்து
பிறநாடுபோயும்;
நம்மிலே பலர்
மண்ணாகிப்போயும்....
நாம்
தனித்துப் போய் விடவில்லை.
***
எம்மைச்சுற்றி
கசங்கிய சருகுகளாய்
இன்னும் மனிதங்கள்....
அவை நீர் கிடைக்கத் துளிர்க்கும்;
துள்ளி எழும்...!
எழு. எழுவோம்.....!
***
வீடிழந்துபோயும்
நாம்–
வெற்று மனிதராய்
வெறுங்கையுடன் வரவில்லை;
நெஞ்சமுட்ட–
சுமக்க முடியாமல்,
நம்பிக்கை சுமந்து வந்தோம்!
எழு எழுவோம்....!
***
விடியலுக்கு முந்திய
இந்த இருட்டிலே,
விழிநிறைந்த
கனவுகளுடன்
நாம் சிரித்து மகிழ்ந்திருந்த
இந்தச் சிவந்த மண்ணிலே–
மரித்துப் போகலாம்;
***
எம் உழைப்பும் உறுதியும்
வாழும்... வாழ வேண்டும்...!
இன்னும் இந்த உடலில்
உயிர் ஒட்டியிருக்கிறது.
எழு எழுவோம்....!

**உரும்பராய் சிவன்சுதன்.**

## கண்ணீர் பூக்கள்



**வ**ன்னியில் புலிகளது மாவீரர் துயிலும் இல்லத்தில், கண்ணீர் பூக்களைத் தூவுகிறார் இந்த கன்னியாஸ்திரி. மனித இழப்புக்களை யார்தான் ஈரணிப்பர்?

அரசியல் தீர்வு கானல் நீரானதால், வடக்கு-கிழக்கு யுத்த பூமியானது-விளைநிலங்கள் எங்கும் கல்லறைகள்.

## தடங்கலுக்கு வருந்துகிறோம்

நெஞ்சம் வெடித்து
மனசு பற்றி எரிந்தது
உன்னை நினைத்து–!
0–0
என்ன செய்வது
எனக்கும் ஒரு மனசே!
0–0
வெப்பக் கண்ணீர்
விட்டு சற்று
வாழ்க்கையின்
எல்லைக்கு – நீ
ஓடிவர முயற்சித்திருக்கிறாய்–
நன்றி உனக்கு
ஒரு தரம்.
0–0
நான் வெப்பப்படுத்த
கண்ணீர் இல்லாமலேயே
இங்கு!
0–0
பெண்ணே!
என்னைத்தவிர
என்னோடு உள்ளவையெல்லாம்
பூச்சியம்!
0–0
என்
சாக்கடைக்கு வராத
உன் தோட்ட புழுதியை
சுவாசித்து–
உன்னை நீ நிரப்பிவிடு
0–0
சமூகச் சுவற்றில் நீ
வரையப்பட்டுள்ளாய்
எனக்கு
சுவருடைக்கத் தெரியாது!
0–0
உன்னுள் நீ–
தொலைந்திருக்கிறாய்
இனியாவது தேடிக்கொள்!
0–0
உன் டயரியில் எழுது
வாழ்க்கை பாதை ஓரத்து
முட்செடி நான் என்று!
0–0

**எம்.ஏ.தஸ்ரீப்- அக்கரைப்பற்று.**

## யார் இவர்?



நடிகர் ரஜினிகாந்த்தின் அன்புப் பிடியில் இருக்கும் இரண்டு சிறுவர்களில் ஒருவர், இன்று பிரபல நடிகர். யார் என்று உங்கள் கணிப்பை சரி பார்க்க பக்கம் 18க்கு நகரவும்.

## இந்தவாரம் உங்கள் பலன்

**04.04.99 முதல் 10.04.99வரை**

**ஜோதிடர் 'கானா'**

### மேடம்:

கிரக நிலைகள் ஓரளவு பலம் கொள்வதால் தடைப்பட்ட கருமங்கள் கைக்கூடும். குடும்பத்தில், தொழில் நிலையில் அமைதி நிலவும். சுக்கிரன் 2ம் இடத்தில் ஆட்சி பலம் பெறுவதால் திருமணம் கைகூடலாம். பணம் ஓரளவு புழங்கும்.

அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண் : 6
அதிஷ்ட திகதிகள் : 6, 9.

### இடபம்:

இராசிப்படி நற்பலன்கள் கொடுக்கும் நேரமாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி, புதிய தொழில், கல்வி வாய்ப்புக்கள், உறவினர்களின் உதவி, புதியவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு உருவாகும்.

அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண் : 3
அதிஷ்ட திகதிகள் : 3, 10.

### மிதுனம்:

சனி வீட்டில் இருப்பதும் வியாழன் 10ம் இடத்தில் ஆட்சிபலம் பெறுவதுவும் சில தடை தாமதங்கள் இருந்தாலும் கருமங்கள் கைகூடும். பணவருவாய் காணப்படும், கணவன்-மனைவி உறவு நன்றாக இருக்கும், பிரயாண வாய்ப்புகள் ஏற்படும்.

அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளம் சிவப்பு; எண் : 2.
அதிஷ்ட திகதிகள் : 7, 10.

### கடகம்:

கிரக நிலைப்படி சமபலன்களே ஏற்படும். எடுத்த கருமங்கள் தள்ளிப்போட வேண்டிவரும். குடும்பத்தில் கவலை ஏற்படும், தொழில் சிறப்பாக தொடரும், காதலர்கள் ஒன்று சேர முயல்வார்கள், உறவினர்களுடன் பிரச்சனைகள் ஏற்படலாம்.

அதிஷ்ட நாட்கள் : ஞாயிறு, புதன்.
அதிஷ்ட நிறம் : சாம்பல்; எண்: 5.
அதிஷ்ட திகதிகள் : 5, 10.

### சிம்மம்:

சனி,செவ்வாய், சுக்கிரன் என்பனவும் இவற்றில் வியாழன் ஆட்சி பெறுவதாலும் முன்னர் தடைப்பட்ட கருமங்கள் ஈடேறும், வெளிநாட்டுப் பிரயாணம் ஏற்படும், இடமாற்றம், புதிய வாய்ப்புக்கள் என்பன காணப்படும். காதலர் உறவு மலரலாம், பணவரவு காணப்படும்.

அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: மஞ்சள்; எண் : 3
அதிஷ்ட திகதிகள் : 6, 9.

### கன்னி:

தொழில் சிறப்பைக் கொடுக்கும், குருவின் பலமும் சூரியன் பக்கபலமும் திருமணம் நிச்சயிக்கப்பட்டு குடும்பவாழ்க்கை நிலை பெறச்செய்யும். சகோதரர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், மனதில் தன்னம்பிக்கை ஏற்படும்.

அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை, எண் : 6
அதிஷ்ட திகதிகள் : 6, 10.

### துலாம்:

நல்ல கிரக சேர்க்கையால் குடும்பத்தில் பற்று ஏற்படும், எதிர்பார்த்த செய்தி சந்தோசம் தரும். மனதில் மகிழ்ச்சி ஏற்படும், தொழில், கல்வி சிறப்படையும்,

அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மரூண்வர்ணம்; எண் : 1
அதிஷ்ட திகதிகள் : 5, 10.

### விருட்சிகம்:

தொழிலில் சிக்கல்கள் தோன்றும். எடுத்த கருமங்கள் தோல்வியில் முடியும். மனம் சஞ்சலத்துடன் காணப்படும். வெளிவட்டாரத்தில் சிக்கல்கள் உருவாகப் பார்க்கும். தொழில், கல்வி விடயங்களில் கவனத்துடன் நடந்து கொள்வது நலம்.

அதிஷ்ட நாட்கள் : வியாழன், செவ்வாய்.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண் : 5
அதிஷ்ட திகதிகள் : 4, 7.

### தனுசு:

கிரக பலன்கள்-ஸ்தானங்கள் நன்றாக உள்ளதால், கல்வி,தொழில் சிறப்பைக் கொடுக்கும், எடுத்த கருமங்கள் சித்தியாகும். உறவினர் நண்பர்களின் உதவி கிடைக்கும். புதிய காதல் உறவுக்கு இடமுண்டு.

அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண் : 9
அதிஷ்ட திகதிகள் : 9, 10.

### மகரம்:

எடுத்த கருமங்கள் தடை-தாமதத்துடன் நிறைவுபெறும். சனி நீசம் அடைவதுவும் குரு 3ம் வீட்டில் பலம் பெறுவதுவும் ஓரளவு நல்ல பலன்களைத் தரும். குடும்பத்தைப் பற்றிய கவலை தொடரும். பண வருவாய் குறையாது. குடும்பத்தில் மனச்சஞ்சலம் காணப்படும். வாரக்கடைசியில் சுப செய்தி கிடைக்கும்.

அதிஷ்ட நாட்கள் : ஞாயிறு, வியாழன்.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண் : 2
அதிஷ்ட திகதிகள் : 2, 29.

### கும்பம்:

குடும்பத்தின் கஷ்டங்கள் குறையும். பணவருவாய் சீராகும், பிள்ளைகளால் மகிழ்ச்சி. நோய் துன்பங்களினால் செலவு அதிகரிக்கும். எதிர்காலத் திட்டங்கள் போடப்பட வாய்ப்புண்டு. கணவன்-மனைவிக்கிடையில் பிரச்சனைகள் தோன்றும்.

அதிஷ்ட நாட்கள்: திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம்: கறுப்பு; எண் : 6
அதிஷ்ட திகதிகள்: 30, 3.

### மீனம்:

கிரக நிலைப்படியும் இராசி பலன்படியும் எடுத்த முயற்சிகள் நன்மையளிக்கும். புதிய செய்திகள் மனத்தை தைரியப் படுத்தும். தொழில்,கல்வி சிறப்பாகத் தொடரும், உறவினர்களின் சுப செய்திகள் என்பன காணப்படும்.

அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளம் பச்சை; எண்: 3.
அதிஷ்ட திகதிகள் : 6, 9.

## நில்-கவனி-முன்னேறு

## ஒரு குழுக்கு வழி!

**கு**லுக்கல் முறையில் அதிஷ்டசாலிகளைத் தேர்ந்தெடுப்பது போல, துரதிஷ்டசாலிகளையும் தேர்ந்தெடுக்கலாம்.

ஆனால் இந்தக் குலுக்கலை அரசாங்கம்தான் நடத்தும்.

குலுக்கல் சீட்டில் குறிப்பிட்ட இலக்கம் இருக்கும்.

அந்தச் சீட்டு கிடைக்கும் மனிதர் எவ்வளவு வருடங்கள் வாழலாம் என்பதைக் குறிப்பதே அந்த எண்.

ஒருத்தருக்கு நாற்பது என்ற எண் வந்தால், குலுக்கல் தேதியிலிருந்து நாற்பது வருட காலம் அவர் உயிரோடு வாழ அரசாங்கம் அவரை அனுமதிக்கும்.

நாலு என்று வந்தால் நாலாவது வருஷமே அரசாங்கம் வந்து அவரைக் கைது செய்து உடனே தூக்கில் போட்டு விடும்.

இந்த முறை நடைமுறைக்கு வந்தால் குலுக்கல் என்றாலே மக்கள் நடுங்குவார்கள்.

இன்னும் பத்து வருஷம்தான் நீ வாழலாம் என்று குலக்கல் சீட்டு தெரிவித்ததும் குறிப்பிட்ட மனிதர் கொஞ்சம் நல்லவராகக் கூட மாறலாம்.

குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் பட்டவரின் மார்பில் அவர் விடைபெற வேண்டிய திகதியை, பச்சை குத்தும் முறையில்- அழிக்க முடியாத அடையாளமாகப் பொறித்துவிடுவார்கள்.

அந்த ஆசாமியும் நாம் இறப்பதற்கு முன் நல்லது செய்துவிடுவோம் என்ற நல்ல எண்ணத்துடன் செயல்படத் தொடங்குவார்.

அரசியல்வாதிகள் அனாவசியமாகச் சதிகள் செய்து கொண்டிருக்க வேண்டாம்.




தலைவராக இருப்பவரைப் பார்த்து மற்றவர்கள், பொறாமைப்பட வேண்டிய அவசியமிராது. 'அவர் என்ன; இன்னும் இரண்டு வருடங்களில் போய் விடுவார். சகித்துக்கொள்வோம்' என்று இருப்பார்கள்.

அதிக வருடம் உயிரோடு இருக்க அனுமதி பெற்றவர் என்றால் அவரிடம் சில கூடுதல் பொறுப் புக்களை ஒப்படைக்கலாம்.


அடிக்கடி கைக்கடிகாரத்தைத் திருப்பி மணி பார்த்துக் கொள்வதுபோல் தனது முடிவு காலம்,திகதியை அன்றாடம் எல்லோரும் பார்த்துக் கொள்ளலாம்.

இந்தக் குலுக்கலில் இருபத்தைந்து வயதுக்கு மேற்பட்டவர்கள்தான் கலந்துகொள்ள முடியும் என்று சட்டம் இயற்றி விட்டால், நாட்டில் இளைஞர்களே அதிகம் பேர் இருப்பார்கள்.

-பிரகஸ்பதி



**பெயர்:** பி. அஸ்வின் சுதர்சன்,
**வயது:** 19
**முகவரி:** 43, 5ம் வட்டாரம்' ஆனந்தபு ரம்,புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு .
**பொழுது போக்கு:** வானொலி, உதைபந்து.



**பெயர்:** வை.யோகேஸ்வரி,
**வயது:** 20
**முகவரி:** திரையரங்கு வீதி, திருக்கோவில்.
**பொழுது போக்கு:** வானொலி, பத்திரிகை.

## ஹலோ டாக்டர்....

**கேள்வி : அல்சரைத் தடுப்பதற்கு என்ன வழி?**

**பதில்:** சரியான நேரத்தில் சாப்பிடப் பழகுங்கள்.

ஒரேயடியாக மூக்கு முட்டச் சாப்பிடுவதைத் தவிர்த்து, சிறிது சிறிதாக 5 அல்லது 6 தடவைகள் சாப்பிடுவது நல்லது.

காலை உணவை 7 மணிக்கெல்லாம் சாப்பிடத் தொடங்குங்கள். இரவு உணவை 8 மணிக்குள் முடித்துக் கொள்ளுங்கள்.

சூடான, காரமான, வறுத்த உணவுகளைச் சாப்பிடுவதைத் தவிருங்கள்.

புகை பிடிப்பது, புகையிலை, வெற்றிலை போடும் பழக்கம், அடிக்கடி கோப்பி, தேனீர் போன்ற பானங்கள் வேண்டவே வேண்டாம்.

மது அருந்துவது, கண்ட கண்ட குளிர் பானங்களை அருந்தும் பழக்கம் வேண்டாம்.

எதற்கெடுத்தாலும் கோபப்படுவது, உணர்ச்சி வசப்படுவது, அதிகமாக கவலையில் மூழ்குவது போன்றவற்றில் இருந்து விடுபட்டு வாய்விட்டுச் சிரித்துப் பேசிச் சந்தோஷமாக இருங்கள்.

மருத்துவர்களின் ஆலோசனைகளைப் பெறாமல் மருந்து மாத்திரைகளைப் பயன்படுத்தாதீர்கள்!.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## ஏன் பேன்?



- பேன், ஈறு பிரச்சனை இருந்தால் தலையில் அரிப்பு இருக்கும். அதற்காகக் கூந்தலைக் கண்டபடி பிராண்டக் கூடாது. அது பிரச்சனையை இன்னும் தீவிரமாக்கும்.
- அரிப்பு நின்று விட்டால் பேன்கள் ஒழிந்து விட்டதாகச் சிலர் கவனக்குறைவாக இருப்பதுண்டு. சரியாகப் பராமரிக்காவிட்டால் தலையில் ஆங்காங்கே சிவப்பு நிறத் தடிப்புக்களும் தொற்றும் ஏற்படக்கூடும்.
- தினமும் கூந்தலை நன்றாக வாருவதன் மூலம், ஈறுகள் பேன்களாக மாறுவதைத் தவிர்க்கலாம். அதாவது கூந்தலை வாருவது ஈறுகளை உடையச் செய்துவிடும். சீப்பின் ஸ்பரிசம் பட்டதுமே தலைக்குள் ஒளிந்து கொள்ளும் பேன்களும் ஈறுகளும் உண்டு. தொடர்ந்து வாரினால் அவை சீப்பில் சிக்கிக் கொண்டு வெளியே வந்துவிடும்.
- உங்கள் வீட்டில் யாராவது ஒருவர் தலையில் பேன்கள் இருப்பது தெரிந்தால், மற்றவர்களும் தலையைச் சரி பார்ப்பது அவசியம். பஞ்சுப் பொம்மைகள், சோபா, மெத்தை, தலையணை ஆகியவற்றில் அவை ஒட்டிக் கொண்டுள்ளனவா எனவும் சரி பார்க்கவும்.
- பேன் தொல்லை மிகத் தீவிரமாகி விட்டால் மொட்டை அடிப்பதுதான் ஒரே வழி. எனவே எச்சரிக்கையாக இருங்கள்.
- பேன்களுடைய ஆறு கால்களுமே பலவீனமானவை. எனவே வேகமாகவும், அழுத்தமாகவும் கூந்தலை வாரினால் அவற்றின் கால்கள் உடைந்துவிடும். அதற்குப் பிறகு கூந்தலில் அதனால் தாக்குப் பிடிக்க முடியாமல் வந்து விடும்.
- பேன்களை நீக்கும் மருந்துகளை ஒரு முறையோடு நிறுத்திவிடாமல், ஒரு வாரத்திற்குப் பிறகு மீண்டும் ஒரு முறை உபயோகிக்க வேண்டும்.
- இவ்வகை மருந்துகளைத் தொடர்ந்து உபயோகிப்பது கூந்தல் ஆரோக்கியத்தைப் பாதிக்கும். ஒரு வயதுக்கும் கீழான குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், தாய்ப்பால் கொடுப்பவர்கள் இவற்றை உபயோகிப்பதைத் தவிர்க்க வேண்டும்.
- பேன் தொல்லை, ஆரம்பப் பருவத்தில் இருந்தால், மருந்துக்கடைகளில் கிடைக்கும் கருந்துளசித் தூளை தலையில் தடவி சிறிது நேரம் ஊற விட்டு அலசினால் சரியாகிவிடும்.

## காய், காய் பாகற்காய்

பாகற்காயில் கொம்பு பாகற்காய், மிதி பாகற்காய் என இரண்டு வகைகள் உண்டு. இரண்டுமே கறி சமைத்து உண்ணக் கூடியவை. இது கசப்பாக இருந்தாலும், பக்குவமாகச் சமைத்தால் உண்பதற்குச் சுவையாக இருக்கும்.



* பாகற்காய் உணவுப் பையிலுள்ள பூச்சியைக் கொல்லும். பசியைத் தூண்டும். பித்தத்தைத் தணிக்கும். மலத்தை இளக்கும். பெண்களுக்கு பாலைக் கொடுக்கும். இதனுடன் சிறிது புளி சேர்த்துக் கொண்டால் நல்லது.

* பாகற்காயை அவ்வப்போது உணவில் சேர்த்துக் கொண்டால் காய்ச்சல், இருமல், இரைப்பு, மூலம், வயிற்றுப்புழு ஆகியன அகலும். நீரிழிவு வியாதி உள்ளவர்கள் இதை எந்த வகையிலும் உட்கொள்வது நல்லது.

* பாகற்காயின் கசப்பு விஷம் இல்லை. அது அமுதத்திற்கு ஒப்பானது. நம் உடல் தனக்கு வேண்டிய அளவு இதன் சத்தை உறிஞ்சிக் கொண்டு மிகுதியைக் கழிவுப் பொருட்களாக வெளியே தள்ளி விடும்.

* பாகற்காய் மட்டும்தான் மருத்துவத்திற்குப் பயன்படுகின்றது என்றில்லாமல் இதனுடைய இலை, வேர்கூட நன்றாகப் பயன்படுகிறது.

* பாகல் இலையின் சாறு ஓர் அவுன்ஸில், சிறிது வறுத்துத் தூளாக்கிய சீரகத்தைக் கலந்து காலை, மாலை இரண்டு வேளையும் உட்கொண்டால் விஷக்காய்ச்சல் நின்று விடும்.

* பாகல் இலையை அரைத்து உடம்பெல்லாம் தடவி ஒரு மணி நேரம் ஊறிய பின் குளிக்க வேண்டும். இவ்வண்ணம் மூன்று நாட்கள் செய்து வந்தால் போதும் நாய்க்கடியின் விஷம் உடம்பில் ஏறாது.

* இரண்டு அவுன்ஸ் பாகல் இலைச் சாற்றில் சிறிதளவு வெல்லத்தைக் கரைத்துக் குடித்தால் வயிற்றிலிருக்கும் பூச்சிகள் வெளியேறிவிடும்.

* நீரிழிவுக்கு, குணம் தெரியும் வரை ஓர் அவுன்ஸ் பாகல் இலைச்சாறில் சிறிதளவு பெருங்காயத்தூளைக் கலந்து சாப்பிட்டு வர வேண்டும்.

* ஓர் அவுன்ஸ் பாகல் இலைச் சாற்றுடன் ஆட்டுப்பால் அல்லது பசுவின் மோரை அதற்குச் சமமாகக் கலந்து மூன்று நாட்கள் காலையில் சாப்பிட்டு வந்தால் காசநோய் மட்டுப்படும்.

# கண்ணீரில் கரைந்த இரவுகள் 81

புவனா

டயானாவின் கைகளைப் பற்றிக்கொண்ட டோடி ஃபயட் மெதுவாக குனிந்து, மென்மையாக கையில் முத்தமிட்டார்.

டயானாவுக்கும் முத்தம் புதிதல்ல. டோடிக்கும் முத்தம் புதியதல்ல. ஆனாலும் அன்றைய ஸ்பரிசம் இருவருக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தியது.

அன்று டோடியும், டயானாவும் மனதில் இனம் புரியாத பல வித உணர்ச்சிகளோட பிரிந்து சென்றனர்.

அன்றிரவே டோடி டயானாவுடன் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டார்.

எதற்காக எடுத்தார்? அது அவருக்கே தெரியவில்லை. என்ன பேசுவது என்றே தெரியவில்லை.

டயானாவும் மறுமுனையில் மௌனம் அனுஷ்டித்தார். அவருக்கும் டோடியின் மனநிலைதான்.

பின்னர் ஒருவிதமாக டோடிதான் பேசினார்.

"இன்றைய சந்திப்பு என் வாழ்க்கையில் மகத்தான நாள். நான் மிக சந்தோசமாக இருக்கிறேன். இது வரை என் வாழ்க்கையில் கைநழுவிப் போன ஏதோ ஒன்று இப்போது கைக் கெட்டியது போல உணர்கிறேன்!" என்று கூறினார்.

டயானாவுக்கோ நம்பமுடியவில்லை. தன் மனதில் எத்தகைய உணர்ச்சிகள் உள்ளனவோ, அதே உணர்ச்சிகள்தான் டோடிக்குள்ளும் என்றறிந்து வியப்புற்றார்.

தன் மனதில் உள்ள உணர்ச்சிகளை கூறிவிட்ட திருப்தியில், டோடி தொடர்பைத் துண்டித்து விட்டார்.



மத்தியிலும் டோடியின் மனதில் ஏக்கம் தணியவில்லை.

தன்னிடம் உண்மையாக அன்பு காட்ட யாருமில்லையே என்ற ஏக்கம், தாயின் மரணத்தின் பின்னர் பெரிதாக வளர்ந்திருந்தது.

பணத்திற்காகவே தன்னைப் பல பெண்கள் மொய்க்கிறார்கள் என்பதை டோடி நன்கறிந்திருந்தார்.

தன்மீது உண்மையான நட்புக் காட்டும் பெண் ஒருத்தியைத்தான் டோடி தேடினார். தேடிக்கொண்டிருந்தார்.

மாதாந்தம் ஒரு இலட்சம் டொலர்கள் டோடியின் கைச் செலவுக்காக ஃபாயிட்டால் கொடுக்கப்பட்டது.

ஒரு இலட்சம் டொலர் என்றால், அந்த நேரத்தில் கிட்டத்தட்ட 50 இலட்சம் ரூபாய்கள்.

டோடியிடம் ஒரு பழக்கம் இருந்தது. எங்கு சென்றாலும் தனது கையினால் பணத்தை தொடுவதில்லை. அவருடன் செல்லும் உதவியாளர்கள்தான் பணத்தை செலுத்துவார்கள்.

இதனால் சில உதவியாளர்கள் பெரும் செல்வந்தர்களானார்கள். ஆற்றிலே போகும் தண்ணீரை அள்ளிக் குடிப்பதுபோல, டோடியின் கைச் செலவுக்கான பணத்தை உதவியாளர்கள் தங்கள் பைகளில் போட்டுக்கொண்டனர்.

## கைச்செலவுக்கு 50 இலட்சம்

அதற்குள் மறுநாளும் சந்திப்பதற்கான இடத்தையும், நேரத்தையும் தீர்மானித்து விட்டனர்.

மறுநாள் சந்தித்தபோது டோடி, தன் கதையின் பல பக்கங்களை டயானா முன்பாக விரித்துவைத்தார்.

உலகில் விலை உயர்ந்த ரோல்ஸ்ரொயில் கார்களில் மட்டும் மொத்தம் 64 கார்கள் அல் ஃபாயிடிடம் இருக்கின்றன.

தரையில் பொழுதைக் கழிப்பதில் சலிப்புற்றால், கடலில் ஜாலியாக இருப்பதற்கு சொகுசுப் படகு ஒன்று இருக்கிறது.

அதன்விலை மூன்று கோடியே 20 இலட்சம்.

இலண்டன் பார்க் லேன் பகுதியை கிட்டத்தட்ட தன் பணபலத்தால் வளைத்திருந்தார். அங்கு ஏராளமான சொத்துக்கள் ஃபாயிட் குடும்பத்தின் பெயரில் இருந்தன.

இலண்டன் மாநகரின் வார ஏடான 'ஒப்சேவர்' மற்றும் தினப் பத்திரிகையான 'ருடே' இரண்டையும் விலைக்கு வாங்க ஃபாயிட் முன் வந்தார். அதன் உரிமையாளர்கள் மறுத்து விட்டனர்.

"எவ்வளவு கொட்டிக் கொடுத்தாலும் சரி, ஆங்கிலேயரில்லாத வேறு இனத்தவருக்கு விற்பனை செய்ய மாட்டோம்!" என்று கூறிவிட்டனர்.

### உலகம் சுற்றினார்

'பணம், பணம், பணம்! பிரிட்டனையே கலக்க வேண்டும், உலகையே கலக்க வேண்டும்' என்று அல் ஃபாயிட் வெறியாக இருந்தார். பிரிட்டன் தவிர ஃபிரான்ஸ் உட்பட பல நாடுகளிலும் சொத்துக்களை வாங்கிப் குவித்தார்.

ஆனால் டோடிக்கு இவற்றில் ஆர்வமில்லை. உலகம் சுற்றுவதிலும், தன் விருப்பம் போல கேளிக்கைகளில் ஈடுபடுவதிலும் அவர் காலம் கழிந்தது.

டோடியின் ஆரம்பக் கல்வி எகிப்தில்- சென் மார்க்ஸ் பள்ளியில் தொடங்கியது. பின்னர் சுவிற்ஸர்லாந்து லீ ரோசே பள்ளியில் சேர்ந்தார்.

அதன் பின்பு, சாண்ட் ஹேஸ்ட்- ரோயல் மிலிட்டரி அக்கடமியில் சேர்ந்து பயின்றார்.

டோடிக்கு 15 வயதானபோது 'மே. ஃபெயார் அப்பாட்மெண்ட்' என்ற இல்லம் அவருக்குச் சொந்தமாகக் கொடுக்கப்பட்டது.

அவருடைய பாவனைக்காக ஒரு ரோல்ஸ் ரொயில் காரும், அதற்கான சாரதியும் ஏற்பாடு செய்யப்பட்டன.

தன் மகனை சொகுசாக வாழவைக்க ஃபாயிட் காட்டிய அக்கறைகள்தான் இவை.

ஐக்கிய அரபுக் குடியரசின் விமானப் படையில் டோடிக்கு ஒரு பதவி கொடுக்கப்பட்டது.

டோடி அப்பதவியை ஏற்க விரும்பவில்லை. திரைப்படத்துறையில் ஈடுபடவே ஆர்வம் கொண்டிருந்தார்.

திரைப்படத்துறையில் பல பெண்களது சகவாசம் கிட்டியது. பிரபல நடிகைகள் டோடியின் மடியில் புரண்டார்கள். தங்கள் மடியையும் தந்தார்கள்.

திகட்டும் அளவுக்கு பெண்கள். சலிக்கும் அளவுக்கு இன்பம். இத்தனை களியாட்டம்



டோடி

### கெலி ஃபிஷர்

டோடியின் காதலிகளில் ஒருவர் கெலி ஃபிஷர். மொடல் அழகியாக பவனி வந்த கெலி ஃபிஷர் டோடியின் காதலிகளில் முக்கியமானவர்.

பிரபலமான ஹொலிவூட் நடிகைகளை விட கெலி ஃபிஷர் டோடியை அதிகம் கவர்ந்தாள்.

அதேநேரம் அதிகமாகக் கறந்தாள். அவருக்கு டோடி காசோலைகளாகக் கொடுத்த பணமே பல கோடிகளைத் தாண்டும் என்று உதவியாளர்கள் கூறுகிறார்கள்.

கெலி ஃபிஷர் பற்றி டோடி டயானாவிடம் வெளிப்படையாகக் கூறினார்.

"மோதிரம் மாற்றிக்கொள்ளும் அளவுக்கு கெலி ஃபிஷரை நான் நம்பினேன். ஆனால், அவள் எனது நம்பிக்கைக்கு அருகதையானவள் அல்ல என்பதை சில சம்பவங்கள் மூலம் உணர்ந்து கொண்டேன்." என்று கூறினார் டோடி.

தனது இன்னொரு பக்கத்தையும் மறைக்காமல் கூறுகின்ற டோடி மீது டயானாவுக்கு மதிப்பு அதிகமானது.

டோடியும் தன்னைப் போலவே தொடர் ஏமாற்றங்களைச் சந்தித்தவர் என்பதையறிந்ததும், மேலும் ஈர்க்கப்பட்டார் டயானா.

தன்னைப்போல காயப்பட்ட ஒருவரால்தான், தன் வலியை உணர முடியும் என்று நினைத்து ஆறுதலடைந்தார்.

டோடியோ தனக்குக் கிடைத்த சிநேகிதியை எண்ணி வானில் மிதந்தார்.

தமது குடும்ப நண்பரான மைக்கேல் கோல் என்பவரிடம் டோடி கூறினார்!

"மைக்கேல்! எனக்கு இவரைப் போல ஒரு பெண் சிநேகிதி என்றும்- இனி- எப்போதும் கிடைக்கப்போவதில்லை."

(அடுத்த வாரமும் வரும்)


பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.





வாரம் ஒரு பட்டுச் சேலை FM

பெயர்:......................

முகவரி:......................

......................

தொழில்:......................

கையொப்பம்:......................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 10-04-1999

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.



இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

டிக்கோயா வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | பி. நவநீதா, ஒட்டரி தோட்டம், டிக்கோயா. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




அம்மன் ஜுவல்ஸ்–முரசு இணைந்து வழங்கும்

வைர மோதிரப் போட்டி

- முதலாவது அதிஷ்டசாலியின் அழகிய விரல்களுக்கு வைர மோதிரம் பரிசாகக் காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- 16 வாரங்கள் மட்டும் பரிசுக் கூப்பன்களை சேகரித்தால் போதும்.
- பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் இதில் பங்கு கொள்ளலாம்.
- இங்கு வெளியாகும். பரிசுக் கூப்பன்களை தொடர்ந்து சேகரியுங்கள். நாம் அனுப்புமாறு அறிவித்த பின்னர் அனுப்பலாம்.

அம்மன்–முரசு இ வைர மோதிரப் போட்டி





அச்சம் நீங்கினாயோ? - அடிமை!
ஆண்மை தாங்கினாயோ?
பிச்சை வாங்கிப் பிழைக்கும் - ஆசை
பேணுதல் ஒழித்தாயோ?

-சுப்பிரமணிய பாரதியார்.

# புத்திசாலி மந்திரி

## பாப்பா முரசு சிறுகதை



ஒரு மன்னரிடம் புத்திசாலி அமைச்சர் ஒருவர் இருந்தார்.

அவர் புத்திசாலி மட்டுமன்றி, மன்னரிடம் மிகுந்த விசுவாசத்துடனும் இருந்து வந்தார். மன்னனும் அவர் மேல் நன்மதிப்பு வைத்திருந்தார்.

மன்னரிடம் அந்த மந்திரிக்கு உள்ள செல்வாக்கும், மன்னர் மந்திரி மேல் வைத்திருக்கும் மதிப்பும் அந்நாட்டின் தளபதிக்குப் பொறாமையை ஏற்படுத்தியது.

அவன் மந்திரியை மன்னரிடமிருந்து பிரித்துவிட நாள் பார்த்துவந்தான்.

ஒரு நாள் தளபதி, மன்னரிடம்,

"மன்னவா! மந்திரி உங்களிடம் அன்பு வைத்திருப்பவர் போலவும், உங்கள் மீது விசுவாசம் உள்ளவர் போலவும் காட்டிக் கொள்கிறாரே தவிர, உண்மையில் அவர் மனதில் உங்களைப் பற்றி விபரீத எண்ணங்களை வைத்திருக்கிறார்!" என்றான்.

"என்ன?" என்று ஆச்சரித்துடன் கேட்டான் மன்னர்.

"மன்னா! நமது கஜானாவிலிருந்து பொற்காசுகளைக் கடனாக வழங்கி, மன்னர் காலமான பிறகு அதைத் திருப்பிச் செலுத்தினால் போதும் என்று தவணை விதிக்கிறார்.

இதிலிருந்தே அவருடைய தீங்கெண்ணத்தை அறியலாம்!" என்றான் தளபதி.

இதைக் கேட்டு மன்னர் சினம் கொண்டார்.

உடனே மந்திரி வரவழைக்கப்பட்டார்.

"மக்களுக்குக் கடன் வழங்கி, அதை மன்னர் காலமானவுடன் திருப்பித் தாருங்கள் என்று நிபந்தனை விதித்தீரா?" என்று அரசன் அவரைப் பார்த்துக் கேட்டான்.

"ஆம்!" என்றார் மந்திரி.

"என்ன கெட்ட எண்ணம்?" என்று சீறினார் மன்னர்.

"இல்லை மன்னா... தங்கள் மீதுள்ள நல்லெண்ணத்தினால்தான் இப்படிச் சொன்னேன்!" என்றார் மந்திரி.

"இது எப்படி நல்லெண்ணமாகும்?" என்று கேட்டார் மன்னர்.

"மன்னர் காலமான பிறகு கடனைத் திருப்பித் தாருங்கள் என்று நான் சொல்லி இருப்பதால், மன்னர் காலமாகி விடக்கூடாது. அவர் நீண்ட நாட்கள் உயிரோடு இருந்தால், கடனை மெதுவாகச் செலுத்தலாம் என்று நினைப்பார்கள்.

அதற்காக அவர்கள் அனைவரும் தங்கள் ஆயுளுக்காகப் பிரார்த்தனை செய்வார்கள் அல்லவா? அதற்காகத்தான் இப்படி நிபந்தனை விதித்தேன்!" என்றார் மந்திரி.

இதைக் கேட்ட மன்னர், மந்திரியின் புத்திசாலித்தனத்தையும், தன் மீது அவர் கொண்டிருக்கும் விசுவாசத்தையும் எண்ணி, அவரைக் கட்டித் தழுவிப் பாராட்டினார்.

## அதிசயம் - ஆனால் உண்மை!





← அராபியாவில் 19 ஆண்டுகள் வரை முஸ்லிம் வல்லரசை ஆண்ட கலீஃபா ஹிஷாம், வருடா வருடம் குதிரைப்பந்தயம் நடத்திவந்தார். இதில் 4000 அரபிக்குதிரைகள் 112 மைல் ஓட்டத்தில் பங்குபெறும்.

↑ புனித லெனார்ட்ஸ் ஆன்-ஸீ என்ற தேவாலயம் இங்கிலாந்தில் உள்ளது. இங்குள்ள பெரும்பாலானவர்கள் மீனவர்கள். எனவே பிரசங்க மேடையும் படகு வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

→ நியூகினி பழங்குடி மக்கள் நூலிழை போன்ற மெல்லிய புல்லின் கூர்மையான நுனியை உபயோகித்து முகச் சவரம் செய்து கொள்கிறார்கள்.



## முஸ்தபா கமால் பாஷா

'அட்டா ரேர்க்' அதாவது 'துருக்கியின் தந்தை' என அழைக்கப்படுபவர்தான் முஸ்தபா கமால் பாஷா. 'ஐரோப்பாவின்



நோயாளி' என்று எள்ளி நகையாடப்பட்ட துருக்கியை முற்போக்கு நாடாக மாற்றிய பெருமை இவரையே சாரும்.

சலோனிக்கா என்ற இடத்தில் 1880ல் அல்பேனியத் தம்பதியருக்கு மகனாகப் பிறந்த இவர், ஒரு போர் வீரனாக வாழ்க்கையைத் தொடங்கினார். துருக்கி சுல்தானின் எதேச்சதிகாரத்தை வெறுத்த 'இளம் துருக்கியர்' (யங் ரேடர்க்) இயக்கத்தில் இணைந்தார்.

முதல் உலகப் போரில் கலிப்போலி மீது பிரிட்டிஷ்காரர்கள் தொடுத்த தாக்குதலை இவர் வெற்றிகரமாக முறியடித்தார். எனினும் போரில் துருக்கி படுதோல்வியடைந்தது.

துருக்கியைக் கட்டியெழுப்ப மக்கள் கட்சி என்ற தேசிய இயக்கத்தைத் தோற்றுவித்தார். 1920ல் அங்காராவில் தேசிய பேரவையைக் கூட்டி அதன் தலைவராகவும், தளபதியாகவும் பொறுப்பேற்றார்.

துருக்கி மண்ணிலிருந்து அன்னியப் படைகளை வெளியேற்றினார். கிரேக்கர்களைத் தோற்கடித்தார். பின் துருக்கியைக் குடியரசாகப் பிரகடனப்படுத்தி ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார்.

துருக்கியை மதச்சார்பற்ற அரசாக அறிவித்தார். இஸ்லாம் சமயம் சார்ந்த புனித சட்டங்களையும் முற்போக்கு சீர்திருத்தங்களையும் புகுத்தினார்.

1938ல் இவர் இறக்கும்வரை இவர் ஜனாதிபதியாக இருந்தார்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **10.04.1999.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **291**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 289

**பரிசுக்குரியவர்:**
செல்வி. சாமினி சந்திரசேகரம்,
மட்/மகிழவட்டவான்.ம.வி., ஆயித்தியமலை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| பிரசஞ்சலா திருமலர் செல்வி, கனிஷ்ட பாலிக்கா, நாவலப்பிட்டி. | க.கார்த்தீபன், றோயல் கல்லூரி, கொழும்பு. |
| கி.பிரவீனா, சேர்ச் றோட், பலாங்கொடை. | மனோஜ் ஏஞ்சலோ, 20/17, நுககாபுர, கிருலப்பனை, கொழும்பு-05. |
| எஸ்.ஜே.சம்பத் ஜீன், 23 ஞானசூரியம் சதுக்கம், மட்டக்களப்பு. | செல்வி ஆர்.கமலினி, தமிழ் மஹாவித்தியாலயம், வெலிமடை. |
| எஸ்.உமாசுதன், கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. | செல்வன் எம்.றுஷ்டி, டீ.எஸ்.சேனாநாயக்க கல்லூரி, கொழும்பு. |
| செ.நிக்ஷன், மன்/முருங்கன்.ம.ம.வி., மன்னார். | ரி.யுவராஜா, மொட்டிங்ஹேம் தமிழ் வித்தியாலயம், மஸ்கெலியா. |

## குகை ஓவியம்

இலங்கையில் சீகிரிய, இந்தியாவில் அஜந்தா போன்ற குகை ஓவியங்கள் இன்றும் காலத்தால் அழியாமல் உள்ளன. இதே போல் ஸ்பெயின் நாட்டில் ஒரு குகை ஓவியம் உள்ளது.

ஸ்பெயின் நாட்டின் வடக்குப் பகுதியில் அல்டாமிரா குகை அமைந்துள்ளது. இந்தக் குகையின் மேற்கூரையில், அழகிய ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.

இது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்



தீட்டப்பட்டவை என்று கருதப்படுகிறது. இந்த ஓவியங்களில் மாடு, குதிரை, மான், ஆடு, பன்றி, வான்கோழி போன்ற உருவங்கள் பெருமளவில் தீட்டப்பட்டுள்ளன.

இந்த ஓவியங்கள் அனைத்தும் தெளிவாகத் தெரியக்கூடிய வகையில் சிவப்பு, மஞ்சள், கறுப்பு, கபில வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஓவியங்களில் வண்ணம் சேர்க்க என்ன கலவை பயன்படுத்தப்பட்டது என்பது இன்றுவரை புரியாத புதிராக உள்ளது.

இந்தக் குகை ஓவியங்கள் 1879ல் தான் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. இது இப்போது மிகச் சிறந்த சுற்றுலாத்தலமாக இருப்பதோடு, ஸ்பெயின் நாட்டிற்கு பெருமளவான அன்னியச் செலாவணியையும் ஈட்டிக் கொடுக்கிறது.

## டென்னிஸ் விளையாட்டு



- ★ டென்னிஸை போன்று 'ஜூடே பவுமா' என்ற விளையாட்டை 1050ம் ஆண்டிலேயே கிரேக்கர்களும் ரோமானியர்களும் விளையாடி இருக்கிறார்கள்.
- ★ 'டென்னெஸ்' என்ற ஃபிரெஞ்சு வார்த்தையிலிருந்து வந்தது 'டென்னிஸ்' என்ற சொல்.
- ★ 1496ம் ஆண்டு ஃபிரான்ஸின் பாரிஸ் நகரில் அமைக்கப்பட்டதே உலகின் மிகப்பழமையான டென்னிஸ் விளையாட்டு மைதானம். அது இன்றும் உள்ளது.
- ★ 1979ல் ஃபிரான்ஸில் மிக அழகான புதிய டென்னிஸ் மைதானம் அமைக்கப்பட்டது.
- ★ டென்னிஸில் முதல் உலக சாம்பியன்- கிளெர்ஜ் என்ற ஃபிரெஞ்சுக்காரர்.
- ★ ஆண்களுக்கான உலக சாம்பியன்களுக்காக 'டேவிஸ் கோப்பை'யும் பெண்களுக்கான உலக சாம்பியன்களுக்காக 'வைட்மேன் கோப்பை'யும் வழங்கப்படுகின்றன.
- ★ இங்கிலாந்தில் நடைபெறும் விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகள்தான் உலகப் பிரசித்த பெற்றவை.

## குளிர்சாதனப் பெட்டி

இப்போது பல வீடுகளில் குளிர்சாதனப் பெட்டிகள் உள்ளன. இந்தக் குளிர்சாதனப்பெட்டி உருவாக முக்கிய காரணமாக இருந்தது ஒரு நாய் என்றால் ஆச்சரியப்படுவீர்கள்.

நோர்வே நாட்டின் பனிப்பகுதியில் லேனா எனப்படும் நதியொன்று ஓடுகிறது. இந்நதியின் பனிக்குழியில் புதைந்திருந்த மிருகம் ஒன்றின் சடலத்தைப் பார்த்து 1798ம் ஆண்டில் ஒருநாள் நாய் ஒன்று வெகு நேரமாகக் குரைத்துக் கொண்டிருந்தது.

இதைப் பார்த்தவர்கள் நாய் குரைக்கும் இடத்திற்குச் சென்றார்கள். அங்கே புதைந்திருந்த மிருகத்தின் சடலத்தைக் கண்டார்கள். மிருகத்தின் உடல்கெடாமல் இருப்பதைக் கண்டார்கள்.

பொருட்களை மிகுந்த குளிருள்ள இடத்தில் வைத்தால் கெட்டுப்போகாது என்ற



உண்மை அப்போது புலப்பட்டது. இதை வைத்து மேலும் ஆராய்ந்தபோது, குளிரில் பக்ரீரியாக்கள் செயலிழந்துவிடுகின்றன என்ற உண்மை கண்டறியப்பட்டது.

இந்த அடிப்படைதான் இப்போதுள்ள குளிர்சாதனப் பெட்டிகள் கண்டுபிடிக்க காரணமாக அமைந்தது.

## விடுகதைகளும் விடைகளும்

1. சிறகில்லாதவன், சில நேரம் பறப்பான். அவன் யார்?
2. தொட்டால் போதும் துவளுவான், மறுபடி நிமிர்வான். அவன் யார்?
3. ஒற்றைக் கண்ணன், துணியைக் கண்டால் ஓடியாடுவான். அவன் யார்?
4. வெளிச்சத்தில் வாங்கியதை இருட்டில் கொடுப்பான், அது என்ன?
5. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல். அது என்ன?
6. உரசினால் உயிரை விடுவாள். அவள் யார்?
7. வெள்ளைக்காரன்- வேண்டிய மட்டும் உண்ண உதவுவான். அவன் யார்?
8. பார்த்தால் பசப்புக்காரி; சுவைத்தால் கசப்புக்காரி. அவள் யார்?
9. வெள்ளை மாளிகைக்குள் மஞ்சள் புதையல் அது என்ன?
10. தண்ணீராய்ப் பிறந்தவன்; புகையாக மறைகிறான்.

### விடைகள்

1. பஞ்சு
2. தொட்டாச்சுருங்கி
3. தையல் ஊசி
4. கமெரா
5. கிளி
6. தீக்குச்சி
7. பற்கள்
8. பாகற்காய்
9. முட்டை
10. பெற்றோல்

(தொகுப்பு: ஏ. அகல்யா.)

**முன்கதை சுருக்கம்**

**பிரபல தொழிலதிபர் ருத்ரமூர்த்தியின் ஒரே மகன் நித்தியன். பம்பாயில் சிறையிலிருந்து விடுதலையாகி வருபவனை வெளிநாட்டில் இருந்து வருபவனாகக் கூறி விசாலிக்கு மணம்முடிக்க திட்டமிடுகிறார். நித்தியனோ சாந்தாவைக் காதலிக்கிறான். நித்தியன் சிறையில் இருந்து வந்தவன் என்ற விடயம் விசாலி வீட்டுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அவ்வாறு இருந்தும் கல்யாணம் செய்ய சம்மதம் என்கின்றனர். நித்தியனோ சாந்தாவை கல்யாணம் செய்ய விரும்புகிறான். சாந்தாவை கல்யாணம் செய்தால், தான் தற்கொலை செய்வேன் என்று தந்தை ருத்ரமூர்த்தி மிரட்டுகிறார். நித்தியன் பணிவதாக நடிக்கிறான். இந்நிலையில் சாந்தா காணாமல் போகிறாள்.**

**இனி......**

இன்ஸ்பெக்டர் குமரன் மேலும் திடுக்கிட்டவராய் டெலிஃபோனில் கேட்டார்.

"ஜோசப் நீங்க என்ன சொல்றீங்க? நித்தியன் எதுக்காக தன்னோட ப்ளட் க்ரூப்பை மாத்திச் சொல்லனும்.?"

"போலீஸ்ல மாட்டிக்குவோம்ங்கிற பயம்தான் ஸார்..... சாந்தா காணாமே போனதுக்கு நித்தியன் தான் முழுக்காரணமா இருக்க முடியும் சார்."

"ஜோசப்! சாந்தாவை கல்யாணம் பண்ணிக்க நித்தியன் ஆர்வமா இருந்திருக்கான். அவரால எப்படி சாந்தாவுக்கு ஆபத்து வந்திருக்க முடியும்."

"சார்...... சாந்தா மாதிரியான ஏழைப் பெண்களைக் காதலிக்கிறது சந்தோஷமா இருக்கிறது....... இதெல்லாம் நித்தியன் மாதிரியான பணக்கார இளைஞர்களுக்கு ஒரு பொழுது போக்கு மாதிரி. சாந்தாவை கல்யாணம் பண்ணிக்கிற மாதிரி நித்தியன் போலியான ஒரு ஆர்வத்தைக் காட்டியிருக்கலாம்."

"நீங்க சொல்ற பாயிண்ட்டையும் மனசுக்குள்ளே வெச்சுக்கிட்டு நித்தியன் கிட்ட விசாரணை நடத்திப் பார்க்கலாம். பை தி பை...... மிஸ்டர் ஜோசப் நித்தியனின் உண்மையான ப்ளட் க்ரூப் மேட்டர் உங்களுக்கு எங்கேயிருந்து கிடைச்சது?"

"அவரோட ஃபேமிலி டாக்டரோட நர்சிங் ஹோமுக்கு ஃபோன் பண்ணி கேட்டேன்."

"தகவல் சொன்னது யார் டாக்டரா?"

"இல்லை."

"பின்னே?"

"ஹாஸ்பிடல்ல இருந்த ஒரு ஸ்டாப் நர்ஸ்."

"சரி...... நித்தியனை இது சம்பந்தமா நான் விசாரிக்கிறேன். அவர் ப்ளட் க்ரூப் விஷயத்துல பொய் சொல்லி இருந்தா ஸ்டேஷனுக்கு கூட்டிப் போய் லாக்கப்புல வெச்சு விசாரிச்சுட வேண்டியதுதான்."

"அப்புறம்...... இன்னொரு விஷயம் சார்..... "

"என்ன?"

"நித்தின் பம்பாய்ச் சிறையில போன வருஷம் பூராவும் இருந்துட்டு வந்திருக்கார்."

"ஈஸ்ட்"

"எஸ்.... சார்"

"நித்தியன் எதுக்காக ஜெயிலுக்குப் போனார்?"

"காரணம் சரியாத் தெரியலை சார்."

"இதை உங்களுக்கு யார் சொன்னது?"

"சாந்தா காணாம போன விஷயமா அவ தங்கியிருந்த ஹாஸ்டல்ல வொர்க்கிங் விமன்ஸ் சிலபேரை விசாரணை பண்ணினபோது ஒரு பொண்ணு சொன்ன தகவல் இது."

"அந்தப் பொண்ணோட பெயர் என்ன?"

"நர்மதா சார்."

"நர்மதாவுக்கு எப்படி தெரியுமாம்."

"சாந்தா பம்பாய் ஜெயில்ல இருந்த நித்தியனுக்கு அடிக்கடி லெட்டர் எழுதறது உண்டாம். போன மாசத்துல ஒருநாள் சாந்தா நித்தியனுக்கு லெட்டர் எழுதிட்டிருக்கும் போது அவளுக்கு வெளியேயிருந்து ஒரு ஃபோன் கால் வந்திருக்கு. ஃபோனை அட்டெண்ட் பண்றதுக்கு எழுதின லெட்டரை அப்படியே மேஜை மேல வெச்சுட்டு ஹாஸ்டல் ஆபீஸ் ரூமுக்குப் போயிருக்கா..... அந்த நேரத்துல சாந்தாவோடு கொஞ்ச நேரம் பேசிட்டு போகலாம்ங்கிற எண்ணத்துல நர்மதா சாந்தா ரூமுக்கு வந்திருக்கா மேஜை மேல் இருந்த லெட்டர் பார்வைக்கு கிடைச்சிருக்கு. ஆர்வம் தாங்காமே அந்த லெட்டரை எடுத்துப்படிச்சிருக்கா. நித்தியன் ஜெயில்ல இருக்கிற விஷயம் தெரிஞ்சிருக்கு. பட் நர்மதா அந்த விஷயத்தை தெரிஞ்சிக்கிட்ட மாதிரி சாந்தாகிட்ட இதுவரைக்கும் காட்டிக்கவே இல்லையாம். இப்போ விசாரணைன்னு வந்தபிறகு அதுவும் சாந்தா காணாமே போயிருக்கிறதுனால அந்த உண்மைகளையெல்லாம் சொல்ல வேண்டியதாயிருச்சுங்கிறது நர்மதாவோட ஸ்டேட்மெண்ட். ப்ளட் க்ரூப் விஷயத்துல நித்தியன் சொல்லியிருக்கிற பொய்யையும் அவர் ஜெயிலுக்கு போய்விட்டு வந்திருக்கிற விஷயமும் கொஞ்ச நெருடலாயிருக்கு சார்...."

"ஜோசப்! நீங்க இப்ப தந்திருக்கிற விஷயங்களை வெச்சுக்கிட்டு நான் ஃபாதரா



# டிசம்பர் பௌர்ணமி

**23**

என்கொயரி பண்ணிக்கிறேன். நீங்க மத்த என்கொயரி கவனிங்க."

"எஸ் சார்."

குமரன் ரிஸீவரை வைத்துவிட்டு அருகில் நின்றிருந்த விசாலியை ஏறிட்டார்.

"மிஸ் விசாலி"

"சொல்லுங்க இன்ஸ்பெக்டர்."

"நித்தியன் பம்பாய் ஜெயில்ல இருந்தது உண்மையா?"

விசாலி சில விநாடிகள் தயங்கி விட்டு தொடர்ந்தாள். "உண்மைதான் இன்ஸ்பெக்டர். பட் தான் செய்யாத குற்றத்துக்காக அவருக்கு கிடைச்ச தண்டனை அது. ஹி ஈஸ்....... ஹார்ம்லஸ்."

குமரன் புன்னகைத்தார்.

"கோர்ட் தப்பு பண்ணாது மிஸ் விசாலி. நித்தியன் ஒரு குற்றமும் பண்ணாமே அவருக்கு அந்த ஒரு வருஷ ஜெயில் தண்டனைகிடைச்சிருக்காது. எதுக்காக தண்டனை கொடுத்திருக்காங்கன்னு உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும்"

"சொல்லுங்க"

"ரெண்டு வருஷசத்துக்கு முந்தி நித்தியன் பம்பாய் ஏர்போர்ட்ல மெட்ராஸ் ஃப்ளைட்டுக்

**கிரைம் சக்கரவர்த்தி**

**ராஜேஸ்குமார்**

காக காத்திட்டிருந்தபோது அறிமுகம் இல்லாத பெண்ணொருத்தி தன்னோட சூட்கேஸை அவர் பக்கத்துல வெச்சுட்டு பார்த்துக்கும்படி சொல்லிவிட்டு டாய்லட் பக்கம் போயிருக்கா. அந்த நேரத்துல ஏர்போர்ட் போலீஸ் வந்து பயணிகளின் லக்கேஜ்களை சோதனை போட்டிருக்காங்க. அப்படி சோதனை போட்டதில அந்தப் பெண்ணோட சூட்கேஸுக்குள்ளே போதை மருந்து இருந்திருக்கு. போலீஸ் அந்த சூட்கேஸ் நித்தியனோடதுதான்னு நினைச்சு ஸ்டேஷனுக்கு கொண்டு போயிட்டாங்க."

"அந்த பொண்ணு?"

"போலீஸ் சோதனை போட வந்ததுமே

**மர்மம், காதல் குடும்ப நயம் கலந்த விறு விறு தொடர்**

அவ தலை மறைவாயிட்டாளாம்."

"நித்தியன் உண்மையைச் சொல்ல வேண்டியது தானே?"

"சொல்லியும் பம்பாய் போலீஸ் கேட்கலை. விவகாரத்தை கோர்ட்டுக்கு கொண்டு போய் ஸ்டாக் விட்னஸை ஏற்பாடு பண்ணி போதை மருந்து கடத்தலில் நித்தியனுக்கும் பங்கு உண்டுன்னு கோர்ட் ஃப்ரூவ் பண்ணிட்டாங்க. விளைவு? ஒரு வருஷ சிறை தண்டனை. ஒரு நிரபராதியை பம்பாய் கோர்ட் அநியாயமா தண்டிச்சுருச்சு"

"நித்தியன் நிரபராதியா? இல்லையாங்கிறது அந்த கேஸ் ஹிஸ்டரியைப் படிச்சுப் படிச்சுப் பார்த்தாத்தான் தெரியும். பம்பாய் போலீஸுக்கு தகவல் கொடுத்தா போதும் அடுத்த தபாலிலேயே நித்தியனோட கேஸ் ஹிஸ்டரி காப்பி என் மேஜைக்கு வந்துடும். "

"இன்ஸ்பெக்டர்! நித்தியனைப் பார்த்தா உங்களுக்கு குற்றம் பண்ணுகிற நபர் மாதிரியா தோணுது."

"இந்த காலத்துல யாரையுமே நம்ப முடியலை நீங்க சர்டிபிகேட் தர்ற அளவுக்கு இருக்கிற நித்தியன் சாந்தா காணாமே போயிருக்கிற விஷயத்துல என்கிட்டேயே பொய் சொல்லியிருக்கார்."

"என்ன பொய்?"

"சாந்தா காணாமல் போன இடமான முகுந்தன் வீட்ல ரெண்டு விதமான இரத்தக் கறைகள் இருந்தது. ஒரு இரத்தக் கறை பி. பாஸிட்டிவ். இன் னொரு இரத்தக் கறை ஓ. பாஸிட் டிவ். அதுல சாந்தாவோட ப்ளட் க்ரூப் பி. பாஸிட்டிவ். இன்னொரு க்ரூப் பான ஓ. பாஸிட்டிவ் இரத்தம் சாந்தவோடு சம்பந்தப்பட்ட வங்கள்ல யாருக்கு இருக்குன்னு இரகசியம ஒரு சர்வே எடுத்துப் பார்த்தப்ப அது நித்தியனோட ப்ளட் க்ரூப். ஆனா இன்னிக்கு சாயந்திரம் நித்தி யன்கிட்ட உங்க ப்ளட் க்ரூப் என்ன க்ரூப்ன்னு கேட்டப்ப ஏபி. நெகடிவ்ன்னு சொன்னார் எதுக்காக அவர் பொய் சொல்லனும்?"

விசாலி முகம் சிவந்தாள்."சார் ! சாந்தா காணாமே போயிருக்கிற விஷயத்தில் நித்தியன் ரொம்பவும் நொந்து போயிருக்கார். இந்த நிலைமையில் நீங்க அவர் மேலேயே சந்தேகப்படுறது கொஞ்சம் கூட சரியில்லை."

"ப்ளட் க்ரூப் விஷயத்துல நித்தியன் எதுக்காக பொய் சொல்லணும்.?"

"மிஸ்டர் இன்ஸ்பெக்டர்! கண்ணால் பார்ப்பதும் பொய் காதால் கேட்பதும் பொய் தீர விசாரிப்பதே மெய்ன்னு பெரியவங்க சொல்லியிருக்காங்க. ஸோ.....நீங்க மறுபடியும் இந்த ப்ளட் க்ரூப் விஷயமா நித்தியன்கிட்டே விசாரிச்சு பாருங்க. உண்மையான தகவல் கிடைக்கும்."

குமரன் எழுந்தார்.

"உங்க ஃபாதரை நாளைக்கு காலையில வந்து என்கொயரி பண்ணிக்கிறேன் . இப்போ என்னோட உடனடித்தேவை நித்தியன். நித்தியன் கிட்டே என்னவோ தப்பு இருக்கு. அந்த தப்பு என்னான்னு தெரிஞ்சா சாந்தா காணாமே போனதுக்கு விடை கிடைச்சுடும்."

குமரன் விசாலியிடம் விடை பெற்றுக் கொண்டு ஜீப்புக்கு வந்தார்.

வேகமாக இருபது நிமிடப் பயணம்.

ஜீப் போர்ட்டிக்கோவில் போய் நிற்க தூக்கக் கலக்கத்தோடு வேலையாள் ஓடி வந்தான். இன்ஸ்பெக்டர் குமரனை பார்த்ததும் கும்பிட்டான்.

"அய்யா......... "

"போய் நித்தியனை எழுப்பு"

"சின்னய்யாங்களா?"

"ம்....."

"அவர் வீட்ல இல்லீங்களே!....."

"இல்லையா? எங்கே போயிருக்கார்?"

"தெரியலீங்கய்யா...... பத்து நிமிஷத்துக்கு முன்னாடிதான் காரை எடுத்துக்கிட்டு வெளியே கிளம்பிப் போனார்."

"எங்கே போறேன்னு சொல்லலையா?"

"ஒண்ணுமே சொல்லலீங்கய்யா ஆனா ரொம்ப அவசர அவசரமாக புறப்பட்டுப் போனார். அவரோட இடுப்புல....... "

வேலையாள் குரலை இழுக்க...... குமரன் நெற்றி சுருங்கினார்.

"ம்...... சொல்லு........ அவரோட இடுப்புல என்ன?"

"துப்பாக்கி சொருகி வெச்சிருந்தாங்க."

(பௌர்ணமி தொடரும்)

# நடிகை ஸ்ரீவித்யா தன் அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறார்

**01**

# என் கதை

ஜூன் 8-ஆம் தேதி. காலையில் என் தொலைபேசி அழைத்தது. பேசியவர் என் வழக்கறிஞர். "அம்மா, இன்னிக்கு நம்ம கேஸுலே தீர்ப்பு வருது!" என்றார். என் மனசு படபடத்தது.

"என்ன ஆகும்னு நெனைக்கிறீங்க...?"

"ஒண்ணும் சொல்ல முடியாது. என்ன வேணும்ன்னாலும் நடக்கலாம். ரெண்டு பேருக்கும் சொத்துல உரிமை உண்டுன்னு கூட சொல்லலாம்னு பேசிக்கிறாங்க. கோர்ட் விவகாரம்னா எதுவும் நடக்கலாம்."

'கடவுளே! ஐந்து வருடப் போராட்டத்துக்குப் பிறகு உண்மை ஜெயிக்காதா? நான் உழைச்சு சம்பாதிச்ச காசுல கட்டின வீடு. கணவன் என்று வந்த ஒருவர் என்னை வீட்டை விட்டு அடிச்சுத் துரத்தி தெருவுல நிக்க வெச்சுட்டு வீட்டை எடுத்துக் கிட்டாரு. தன் சம்பாத்தியத் துல வாங்கின வீடுன்னு சொல்றாரு. எனக்கு அந்த வீட்டை விட, நான் சொல்றது உண்மைங்கறது நிரூபிக்கப்படணும். நேர்மை என்பக்கம்தான்னு எல்லாருக்கும் தெரியணும்.' கண்ணை மூடிக் கொண்டேன்.

## திரும்பிப் பார்க்கிறேன்

இந்த வழக்கின் ஐந்து வருடப் போராட்ட நாட்களைத் திரும்பிப் பார்த்தேன்.

சென்னை நகர வழக்கறிஞர்களுக்கு என் வழக்கு விவகாரம் அத்துப்படி! என்ன ஆகிறது வழக்கு என்று பார்க்க வருவார்கள். என் பக்கம் வாதாட மூத்த வழக்கறிஞர் வந்தால், அவருடைய வாதத் திறமையைப் பார்க்க பல இளம் வழக்கறிஞர்கள் கூடுவார்கள். கூடவே, என் நட்சத்திர அந்தஸ்தும் கூட்டம் சேர்க்கும்.

இப்படித்தான் ஒருநாள், குறுக்கு விசாரணை தினம். என் முன்னாள் கணவர் அதாவது, இந்த வழக்கின் பிரதிவாதியை குறுக்க விசாரணை செய்தார்கள்.

"உங்களுடையது காதல் திருமணமா?"

"ஆம்."

"உங்களுடைய மனைவி அதாவது திரைப்பட நடிகை ஸ்ரீவித்யாவை முதன் முதலில் எப்போது சந்தித்தீர்கள்?"

"நல்ல குடி போதையில் அவர் வேறு ஒரு நபருடன் படுக்கையில் இருந்தபோது சந்தித்தேன்."

நீதிமன்றத்தில் சலசலப்பு. அவருடைய வக்கீல் தலையிலடித்துக் கொண்டார். நீதிபதியின் முகத்தில் லேசான சலனம். அவர் இப்படித்தான் பேசுவார் என்பது எனக்குத் தெரியும். என்னை பலர் முன்பு இப்படி அவமானப்படுத்த வேண்டும் என்பதற்காகவே அப்படிச் சொல்வார் என்பதை எதிர்பார்த்திருந்தேன். மனதை திடப்படுத்திக் கொண்டுதான் கோர்ட்டுக்குச் சென்றேன். என்னை மட்டுமல்ல, பெண்மையே அவருக்கு ஒரு கேவலம்தான்.

**ஸ்ரீவித்யா**

இப்படிக் கேவலப்படுத்து வதில் ஒரு கொடூர சந்தோஷம்.

அன்று கோர்ட்டைவிட்டு வெளியே வந்தேன். கருப்பு கோட்டுடன் அந்தப் பெண் வழக்கறிஞர் என்னிடம் வந்தார். எனக்கு முன்பின் அறிமுகமில்லாதவர். "இந்த மிருகத்துடன் எப்படி இத்தனை நாள் குடும்பம் நடத்தினீங்க?"

என்னிடம் பதில் இல்லை. அவர் என்னை முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டுச் சென்றார்.

## கேள்வியின் நாயகி

இந்தக் கேள்விக்கு மட்டுமா? எனக்குத் திருமணமான இருபது ஆண்டுகளில் பல கேள்விகளுக்கு என்னிடம் விடை இல்லை. 'அபூர்வ ராகங்கள்' படத்தில் வருகிற 'கேள்வியின் நாயகனே...' பாடலைப் போல நான் பல கேள்விகளுக்கு நாயகியாக இருந்திருக்கிறேன்.

கடந்த கால நினைவுகளை கலைத்துப் போட்டு நிகழ் காலத்திற்கு வந்தேன். எப்படியும் இன்று தீர்ப்பு வரபோகிறது. ஆணோ, பெண்ணோ... தீர்ப்பென்கிற பிரசவம் நடந்துதான் ஆகவேண்டும். மனதை திடப்படுத்திக் கொண்டேன்.

சாகும்போது என் அம்மா-புகழ்பெற்ற பாடகி எம்.எல்.வசந்தகுமாரி- சொன்னார்: "என் சங்கீதம் மட்டும் உண்மையாயிருந்தா நீ நிச்சயம் ஜெயிப்பே."

தெய்வமாகிப்போன அம்மாவின் வார்த்தைகள் புதுத்தெம்பைக் கொடுத்தன. அம்மாவின் சங்கீதம் உண்மைதான். சத்தியம்தான். தீர்ப்பு எனக்குச் சாதகமாக வந்தது.

மறுநாள் செய்தித்தாள்களில் என் வழக்கின் தீர்ப்பு ஒரு முக்கியச் செய்தியாக வந்தது.

என் சொத்து எனக்கே திரும்பி வரப் போகிறது. நிம்மதிப் பெருமூச்சு விட்டேன். ஆனால், வெற்றியின் சந்தோஷம் என்னைப் பாதிக்கவில்லை. இதில் நான் வெல்வதை விட நீதியும், உண்மையும் வெல்ல வேண்டும். வென்றது.

இப்போது இந்தத் தொடர்கூட என் வெற்றியை பறைசாற்றி விளம்பரம் தேடிக் கொள்கிற முயற்சி அல்ல. இந்த 31 வருட சினிமா வாழ்க்கையில் நான் பார்க்காத பணம், புகழ் இல்லை. 700 படங்களை முடித்துவிட்டு இன்றைக்கும் உங்களின் அபிமானத்தோடு திரையில் உலா வந்து கொண்டிருக்கிறேன். பணத்துக்காக சினிமாவுக்கு வந்தேன் என்பதைவிட, என்னுடைய கலைத் தாகம் தான் என்னை சினிமாவுக்கு இழுத்தது என்பது என் குடும்பத்தைத் தெரிந்தவர்களுக்குப் புரியும்.

பிரபல பாடகி எம்.எல்.வசந்தகுமாரியின் ஒரே மகள் நான். என் வீட்டிற்கு எதிரேதான் நாட்டியப் பேரொளி பத்மினி, ராகினி, லலிதா இருந்தார்கள். என் பால்ய பருவத்திலேயே அவர்கள் நாட்டியக்



குழுவில் நானும் ஓர் அங்கம். ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்த சாவித்திரி, அஞ்சலி தேவி, ராஜ சுலோசனா போன்ற பிரபலங்களின் மடியில் தவழ்ந்தவள்.

ஐந்து வயது இருக்கும்போது எம்.ஜி. ஆருடன் ஃபோனில் பேசினேன். "நான் உங்களைத்தான் திருமணம் செய்து கொள்வேன்" என்று சொல்லியிருக்கிறேன். எதற்கு இதையெல்லாம் சொல்கிறேனென்றால் இந்தத் தொடர், விளம்பரம் தேடுகிற முயற்சி அல்ல.

பெண்மையைக்காலில் போட்டு மிதிக்கிற எந்த ஆணும் வெற்றி பெற்றதில்லை என்பதற்கு என் வழக்கும் ஓர் உதாரணம்.

மற்ற பெண்களைவிட வேலைக்குப் போகிற பெண்களும், சினிமா நடிகைகளும் பாதுகாப்பற்றவர்கள். பல கழுகுகளிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஒவ்வொரு நாளும் போராடியே ஆகவேண்டும்.

தனக்கென்று ஒரு தோள், ஒரு கணவர், குழந்தைகள் எல்லாவற்றையும் மீறி ஒரு சமூகப் பாதுகாப்பு அவளுக்குத் தேவை. அந்தப் பாதுகாப்பு கிடைக்கும் வரையில் ஒவ்வொரு நடிகையும் தேடிக் கொண்டேயிருப்பாள். பணமும், புகழும் நிச்சயம் அந்தப் பாதுகாப்பைத் தராது; பாதுகாப்பு என்று தேடிப் பாதாளத்தில் விழுந்த நடிகைகள் பலர் உண்டு. அவர்களில் நானும் ஒருத்தி.

## விலைபோனவள் அல்ல

'நடிகைதானே...' என்கிற ஏளனப் பார்வையை சிலர் வீசப்போவது எனக்குப் புரியாமல் இல்லை. ஆரம்பத்தில், பிர பலமான ஒருவரைக் காதலித்தேன். அவருக்கு மனைவியாக வாழ விரும்பினேன். அது நடக்கவில்லை. துவண்டுபோனேன். அந்த அதிர்ச்சியிலிருந்து மீள, அந்தக் காதலை முற்றிலும் மறந்து போக இன்னொருவருக்கு மனைவியானேன், பாதுகாப்புத் தேடி.

அந்த முறைப்படி பார்த்தால் நான் பத்தினி அல்ல. அதே சமயம், யாரிடமும் வாய்ப்பிற்காகவோ, பணத்துக்காகவோ விலை போனதும் இல்லை; போகவும் மாட்டேன்.

பாதுகாவலனாக இருக்கவேண்டியவரே மீண்டும் என்னை சினிமாவுக்குள் தள்ளினார். (தொடர்ந்து வரும்)

# உதட்டில் ஒரு மிச்சம்

## சுபா

## 24

### இதுவரை

அரவிந்த் ஒரு பைலட். அவனது மனைவி ஜ்யோதி. அவர்களது நண்பன் விக்ரம். அவனுக்கு ஜ்யோதி மீது ஆசை. இதற்கிடையே அரவிந்த், அமைச்சர் பிரகாஷ் குப்தாவுடன் பைலட்டாக ஓடக்கரை கிராமத்திற்குச் செல்கிறான்.

அக்கிராமத்தை வளைத்துப்போட அமைச்சர் திட்டமிட அதை- எதிர்க்கிறார்கள் கிராம இளைஞர்கள்.

பொலிஸ் சுடுகிறது. சீனு இறக்கிறான். கிராம இளைஞர்கள் கொதிக்கின்றனர். அமைதி வழி சரிப்படாது என்று ஆயுதம் ஏந்த முடிவு செய்கின்றனர்.

நிலத்தை அபகரிப்பதில் அமைச்சர் தீவிரம் காட்டுகிறார். அமைச்சரைக் கொல்ல இளைஞர்கள் திட்டமிடுகின்றனர்.

இனி....

பிரகாஷ் குப்தா தொண்டையைச் செருமிக் கொண்டார். மைக்கில் கணீரென்று பேசினார்.

"என் உயிருக்கு மேலான இளைஞர்களே... இந்த நாட்டின் எதிர்காலம் என்னைப் போன்ற கிழவன் கையில் இல்லை. உங்களைப் போன்ற உற்சாகமான இளைஞர்களின் கைகளில்தான் இருக்கின்றது. இந்தியாவின் எதிர்காலம் மட்டுமில்லை, இந்த உலகத்தின் எதிர்காலமே உங்கள் கைகளில்தான் உள்ளது. உலகம் இப்போது சுருங்கிவிட்டது. எல்லைகளால் பிரிக்கப்பட்ட நாடுகள் இப்போது கைகோர்த்து வியாபாரங்களில் சேர்ந்து விட்டன. இது மாபெரும் வளர்ச்சிக்கு ஒரு அறிகுறி. தொழில் துறையில் நாம் வீறு நடைபோட வேண்டும்.

படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புப் பெருக வேண்டும் என்பதற்காகத்தான் சிறு கார்களைத் தயார் செய்யும் இந்தத் தொழிற்சாலையை இங்கே நிறுவ முயற்சி செய்தேன். ஆனால், என் நல்லெண்ணத்தைத் திரித்து மக்களுக்குத் துரோகியாக என்னைச் சித்தரித்துக் காட்ட சில அரசியல் கட்சிகள் இந்த ஊர் இளைஞர்களைப் பயன்படுத்திக் கொண்டுள்ளன. அவர்களது உணர்வுகளைத் தூண்டிவிட்டு, என்னை அழித்துவிட வேண்டும் என்று, திட்டத்திற்கு மேல் திட்டமாய்த் தீட்டிக் கொண்டிருக்கின்றன. ஓடக்கரை இளைஞர்களுக்கு இங்கே நான் ஓர் உறுதி தருகிறேன். இந்தக் கார் தொழிற்சாலையில் ஓடக்கரை இளைஞர்களுக்கு வேலைகள் கொடுத்த பின் தான் வெளியாட்களுக்கு வாய்ப்புத் தரப்படும்."

ஓடக்கரை இளைஞர்களைத் தவிர கூலிக்குக் கொண்டு வரப்பட்ட மற்றவர்கள் கைதட்டினார்கள்.

"எல்லாம் கண்துடைப்பு" என்றாள் நர்மதா, பற்களுக்கிடையில் "ஓடக்கரை இளைஞர்கள் பேரில் மட்டும் என்றில்லை. நம் ஊரைச் சேர்ந்த யார்மீதும் அவர்களுக்கு நம்பிக்கையில்லை. கட்டிடம் எழுப்பும் பணியில்கூட சேர்த்துக் கொள்ளவில்லை."

"நர்மதா... ஷிவா எங்கேயாவது தென்பட்டானா?" என்றாள், அவன் அம்மா விடாப்பிடியாக.

"இன்னும் இல்லையம்மா..." என்றாள் நர்மதா, கண்ணோரம் துளிர்த்த நீரைப் புடவைத் தலைப்பில் ஒற்றிக்கொண்டு.

"இன்றைக்கு என் உயிரைக் காப்பாற்றியது ஓர் இளைஞன்தான். அவன் எனது ஆஸ்தான பைலட் அரவிந்த். அக்கிரமத்திற்குப் பணிய மறுத்தான். தைரியமாக எதிர்த்து நின்றான்."

பிரகாஷ் குப்தாவின் குரல் சின்ன இடைவெளி விட்டுத் தொடர்ந்தது.

"தைரியமாக எதிர்த்து நின்றதால், என் பைலட் அரவிந்தையே சுட்டுவிட்டார்கள். என் பைலட் ஆஸ்பத்திரியில் குணமாகி, எந்தப் பிரச்சனையுமில்லாமல் வீடு திரும்ப நாம் எல்லோரும் ஒரு நிமிடம் மௌனமாக பிரார்த்தனை செய்வோம்."

ஒரு முழு நிமிடம் மௌனமாகக் கழிந்தது.

சூரியன் விழுந்து கொண்டிருந்தான். வெள்ளை வெளிச்சம் மஞ்சளாகி, இப்போது சிகப்பு சேர்ந்து, நிழல்கள் மறைந்து விட்டன. இன்னும் இருளாகி விட்டால், இவ்வளவு தூரத்திலிருந்து சுடுவதன் அசௌகர்யம் தேவேந்திரனுக்கு உறைத்தது.

"இப்போது மாண்புமிகு அமைச்சர், நம் இளைஞர் அணியின் அடையாளக் கொடியை ஏற்றுவார்கள்," என்ற அறிவிப்பைத் தொடர்ந்து கூட்டம் ஓயாமல் கை தட்டியது. ஆளுயர கனமான ரோஜா மாலை அவர் கழுத்தில் ஏறியது. அங்காங்கே பட்டாசுகள் வெடிக்க ஆரம்பித்தன. புஸ்வாணங்கள் அரையிருட்டில் தீப்பூக்களைச் சொரிந்தன.

கொடி ஏற்ற எப்படியும் அமைச்சர் மேடையிலிருந்து இறங்கித்தான் ஆக வேண்டும். மேடையிலிருந்து சற்றுத் தொலைவில் அந்தக் கொடிக்கம்பம்.

ஒரே கோணத்தில் படுத்ததால் அடிவயிற்றில் உற்பத்தியான வலியைப் பொருட்படுத்தாமல் தேவேந்திரன் கழுத்தை நிமிர்த்தினான். டெலஸ்கோப்பின் கூட்டல் குறியை கொடிக்கம்பம் அருகே ஃபோகஸ் செய்தான். அதே நேரம்,

"இங்கே எல்லாம் தரோவாகச் செக் பண்ணிவிட்டோம் சார்!" என்று பதறிக் கொண்டே தமிழகப் பொலிஸ் அதிகாரி பின் தொடர மோகனன் கோவில் கோபுரத்தின் உள்ளே வளைந்து ஏறிய படிக்கட்டுக்களில் மூச்சிரைக்காமல் ஏறினார். ஒவ்வொரு தளத்திலும் நின்றார். சாளரம் வழியே பைனாக்குலரில் பட்டாசுகளின் வர்ண ஜாலங்கள் விளையாட்டு காட்டின.

நான்காவது தளத்தின் வழியே பார்த்ததும் விறைத்தார். "என்னையா அது? அந்த மண்டபத்தின் கூரை மேல் மரக்கிளைகளின் மத்தியில் ஒரு துணி தெரியவில்லை?"

பைனாக்குலரைக் கவனமாகத் தீட்டியதில் டெலஸ்கோப் ரைஃபிள்! மைகாட்! தேவேந்திரன்தான் அது. பிரதமரைக் குறிபார்த்துக் கொண்டு.....!

"நாங்கள் பார்த்தபோது, அங்கே யாரும் இல்லை சார்!" என்று பதற்றமடைந்த அதிகாரியை கை உயர்த்தி அடக்கினார்.

பட்டாசு ஆரவாரங்களுக்கிடையில் அமைச்சர் மேடையை விட்டு வெளியே வந்தார். கொடிக்கம்பம் நோக்கி நகர்ந்தார். நோ, இனிமேல் அவரை எச்சரிக்க முடியாது தேவேந்திரனைத் தான் செயலிழக்கச் செய்ய வேண்டும். இந்த உயரத்திலிருந்து தேவேந்திரனின் பின்னந்தலையை அவர் பிஸ்டலால் சிதறடிக்க முடியும். ஆனால் சுடப் போவதில்லை. தேவேந்திரனை உயிருடன் ஒரு வெற்றிக்கனியாகப் பிடிக்கப் போகிறார்.

சாளரத்தில் கால் உயர்த்தி வைத்தார். முழங்காலில் கை ஊன்றி பிஸ்டலை ஸ்டெடியாக்கினார். குறிபார்த்து விசை இழுத்தார்.

★★★

டெலஸ் கோப்பின் கூட்டல் குறிக்குள் பிரகாஷ் குப்தாவின் முகம் வந்ததும், தேவேந்திரன் விசையில் விரல் வைத்து இழுக்க முன், அந்தச் சப்தம் பட்டாசு ஒலிகளில் ஒன்றி ஒளித்துக் கொண்ட துப்பாக்கிச் சத்தம்.

அவன் உணரும் முன், அவனுடைய வலது கை வெடித்தது. புறங்கை எலும்புகளை தோட்டா நொறுக்கிச் சிதைத்தது.

'ஓ! இன்னும் ஒரு தோல்வியா?'

அடிபட்ட கையை விட இதயம் அதிகம் வலித்தது.

தேவேந்திரன் துள்ளித்திரும்பு முன், அடுத்த தோட்டா வெடித்தது.

அவனுடைய வலது முழங்காலைச் சிதைத்தது. தூண்டிலிலிருந்து அற்று விழுந்த மீன் போல தேவேந்திரன் துடித்தான். அவனுக்கு இடது கால் இல்லை என்பது தெளிவாகத் தெரிந்த யாரோ, அவனை முற்றிலும் செயலிழக்கச் செய்யச் சுட்டிருக்கிறார்கள். தோட்டா வந்த திசையை வலியுடன் திரும்பிப் பார்த்தான்.

தமிழகப் பொலிஸ் அதிகாரி; அவருக்கு முன்னே மோகனன்.

அவர் கோவிலிலிருந்து குதித்து இறங்கி இடைப்பட்ட சில கூரைகளின் வழியே ஓடி வருவது தெரிந்தது. ஓடக்கரையில் இதே மோகனனை செயலற்றவராக்கி, அவன் தப்பித்த தினம் மனதில் நிழலாடியது. உயிருடன் பிடிக்க வேண்டும் என்ற துடிப்புடன் மோகனன் வருகிறார்.

தேவேந்திரனின் ஒவ்வொரு மயிர்க்கால்களிலும் வலி- ஊசி குத்தியது. எல்லாம் கலைந்து விட்டது. அவன் திட்டம் ஒவ்வொன்றும் பூட்ஸ் அடியில் மாட்டிய நத்தைக் கூடு போல் நொறுங்கிக் கூழாகிவிட்டது.

செந்தில் போனான். அப்புறம் சீனு. அதற்கடுத்தது கைலாஷ். இப்போது ஷிவா. எல்லோரையும் தொலைத்துவிட்டான். மெழுகுச்சுடர் கண்களுக்குள் நின்றாடியது. பேசிய வீர வசனங்களும், எடுத்த சபதங்களும் காதுகளுக்குள் கைகொட்டிச் சிரித்தன. அவனுடைய வெளிச்சமெல்லாம் உறிஞ்சப்பட்டு ஒரு பரிபூரண பூஜ்யமாகி விட்டான். அவனுடைய கனவுகள் எல்லாம் பொசுங்கிய பிறகு, உயிருடன் மோகனனிடம் மாட்டுவதை விட, ஓடக்கரைக்கு வேறு அவமானமில்லை.



தேவேந்திரன் இடது முழங்கை ஊன்றி நெம்பி நகர்ந்தான். ரைஃபிளைப் புரட்டினான். பட்டாசுகள் வெடித்தன. ரைஃபிள் முனையைக் கழுத்தில் குத்தினான். தொடர்ந்து கை தட்டல். கண்மூடி விசையை இழுத்தான். ஹோவென்று இரச்சலிட்டு ஆரவாரம் செய்தது கூட்டம்.

மோகனன் மண்டபத்தின் கூரை மீது குதித்து இறங்கிய கணம், தோட்டா தேவேந்திரனை சிதறடித்தது. கண்ணுக்குள் மெழுகுச் சுடர் இருண்டு போனது.

"செந்தில், சீனு, கைலாஷ், ஷிவா.. வந்து விட்டேன் நானும் வந்துவிட்டேன்!"

மண்டபத்தூணில் வழிந்து இறங்கி, ஓடக்கரை மண்ணில் அவன் இரத்தம் மெல்லக் கலந்து உறிஞ்சப்பட்டது.

அங்கிருந்த தமிழக பொலிஸ் அதிகாரியை, அதிர்ந்து போன மோகனன் அருகே கூப்பிட்டார். படபடவென்று அவரிடம் தேவேந்திரன் பற்றி தகவல்கள் கொடுத்தார்.

"அமைச்சர் புறப்படும் நேரம் வந்து விட்டது. நான் ஹெலிகாப்டருக்கு ஓட வேண்டும். பொதுமக்களுக்குத் தெரிந்தால் கூட்டம் அலைமோதி காரியம் செய்ய விடாமல் தடுத்து விடும். கூட்டம் கலையும் வரை செய்தி வெளியே தெரிய வேண்டாம்.... டேக்... கேர்...!"

மோகனன் இறுதியாக ஒருமுறை தேவேந்திரனின் உடலை ஏமாற்றத்துடன் பார்த்துவிட்டு, அவன் மரக்காலை தன் ஷூ முனையால் தட்டிப்பார்த்துவிட்டு, மண்டபத்திலிருந்து குதித்து இறங்கினார்.

(○ – வரும் – ○)

---

# அரங்கம் அந்தரங்கம்

இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!

அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!

நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.

இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப்பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.

~கண்ணதாசன்~

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.**

**05**



கவியரசு கண்ணதாசன்

மாயூரம் வேதநாயகம்பிள்ளை ஒரு பாடல் எழுதியதாக நினைவு. அதன் பொருள் இதுதான்:

"நான் எப்பொழுதும் போலத்தான் இருக்கிறேன்; என் வீடும் எப்பொழுதும் போலவே இருக்கிறது. அதே மேஜை. அதே நாற்காலி. தினமும் என்னைத் தேடி வருவோர் இப்போது ஏன் வரவில்லை? அவர்கள் ஏன் இப்படி மாறிவிட்டார்கள்? ஓ! புரிகிறது. நான், இப்போது பதவியில் இல்லை!"

– உண்மைதான்.

பதவி வந்துவிட்டால் வீடும் வாசலும் நிறைந்து காணப்படுகின்றன. தெருவிலே வகை வகையான கார்கள் நிற்கின்றன. சோபாக்கள் நிறைந்து வழிகின்றன. விமான நிலையத்தைப் போலவே அந்த வீடு காட்சியளிக்கிறது.

பதவியில் இருக்கும் பிரமுகரைப் பேட்டி காண்பதற்கு வகை வகையான மனிதர்கள் வருகிறார்கள். அங்கேயே ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொள்கிறார்கள்.

தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்ளக் கட்டழகு படைத்த கன்னியரோடும் சிலர் வருகிறார்கள்.

மற்ற சிபாரிசுகளைவிட இந்த சிபாரிசு சீக்கிரம் செல்லுபடியாகிறது.

ஒவ்வொருவரையும் விசாரிப்பதற்குப் பிரமுகரின் செயலாளருக்கே நேரம் போதவில்லை என்றால், பாவம், பிரமுகருக்கு எவ்வளவு சிரமம்.

ஒவ்வொரு பிரமுகர் வீட்டிலும் செயலாளர் போக சில 'காக்கை ஜாதி'யும் உண்டு. அந்தக் காக்கைகள் பாடும் பல்லவிகள்:

"ஐயா தூங்குகிறார்!"

"ஐயா பல் விளக்குகிறார்!"

"ஐயா குளிக்கிறார்!"

"ஐயா டிரஸ் பண்ணிக் கொள்கிறார்!"

–தலைவர் தங்கசாமி என்ன? சாதாரணமானவரா? லைசென்சுக்கு இலட்ச ரூபாய் வாங்குகிறவராயிற்றே!

அவர் வீட்டிலும் செயலாளர்கள் உண்டு; காக்கைகள் உண்டு.

அன்று ஞாயிற்றுக்கிழமை.

எப்பொழுதும் சனிக்கிழமை இரவிலேதான் ஆட்டம் பாட்டம் அதிகமாக இருக்கும். ஏனென்றால் ஞாயிற்றுக்கிழமை, பகலில் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் தூங்கலாம் அல்லவா!

முதல்நாள் சனிக்கிழமையன்று அடையாறு பங்களாவில் ஆடிப்பாடி முடித்துவிட்டு, அலுத்துப்போய் வந்து படுத்த தலைவர் தங்கசாமி, காலை பத்து மணிவரை எழுந்திருக்கவில்லை.

அவர் மனைவி நளாயினிக்கு இதில் நல்ல அநுபவம் உண்டு. அவர் நாயகனுக்கேற்ற நாயகி.

"ஐயா எழுந்திருக்கும் வரையில் யாரும் அவரை எழுப்ப வேண்டாம்!" என்று உத்தரவு போட்டுவிட்டார்.

தங்கசாமி தூங்கிக்கொண்டிருக்கும் போதுகூட உரிமையோடு படுக்கை அறைக்குள் நுழைந்து தட்டி எழுப்பக்கூடியவர்கள் சிலருண்டு.

அவர்களிலே முக்கியமானவர், சமூகசேவகியும், சர்வகட்சி நாயகியுமான திருமதி விஜயா வேதாசலம் அவர்கள்.

அவர் பார்ப்பதற்கு அழகாக இருப்பார். கூந்தல் குட்டையாக இருந்தாலும், இன்னும் வெள்ளி அலை படரவில்லை.

அழகையும், பேச்சுத் திறமையையும் மூலதனமாகக் கொண்ட அவர், தங்கசாமி வீட்டிற்குள் நுழைந்தபோது வரவேற்பு அறை நிறைந்து காணப்பட்டது.

"என்ன இன்னும் எழுந்திருக்கவில்லையா?" என்று கேட்டுக் கொண்டே சுற்றிலும் ஒரு கண்ணோட்டம் விட்டபடி, "டேய் பையா! இவ்வளவு பேர் காத்துக் கிட்டிருக்காங்க? ஏண்டா இன்னும் எழுப்பல்லே?" என்று அவர் கேட்ட தோரணையைப் பார்த்து, 'இவள்தான் அவர் மனைவியோ?' என்று பலர் சந்தேகப் பட்டார்கள். பாவம் அவர்கள் புதியவர்கள்.

நேரே பின்கட்டுக்குச் சென்ற விஜயா வேதாசலம் திருமதி நளாயினி தங்கசாமியைப் பார்த்து, "ஏம்மா இன்னும் எழுப்பல்லே?" என்றார்.

"நான் எழுப்பினால் திட்டுவார். நீங்கள்தான் எழுப்ப வேண்டும்7" என்றார் நளாயினி.

நேரே விடுவிடென்று மாடிக்குச் சென்ற விஜயா வேதாசலம், கையில் காபியையும் கொண்டு சென்றார்.

"சரி! சந்தேகமில்லை! தலைவரின் மனைவியேதான்!" என்ற முடிவு கட்டினார்கள் வந்திருந்த புதியவர்கள்.

விஜயாவைத் தெரிந்தவர்கள் யாரும் சந்தேகப்படவில்லை. ஏனென்றால் பல பிரமுகர்களின் வீடுகளில் இதே காட்சியை அவர்கள் கண்டிருக்கிறார்கள்.

தனது 'கார்ப்பக்கிரகத்தை' ஜாக்கிரதையாக வைத்துக் கொண்டிருக்கும் விஜயா, திருவாளர் தங்கசாமி பள்ளி கொண்டிருக்கும் கர்ப்பக்கிரகத்துக்குள் நுழைந்து, அங்க அசைவுகளோடு காபிக் கோப்பையை அவர் கன்னத்தில் வைத்தார்.

சூடு தாங்காமல் எழுந்து உட்கார்ந்த தங்கசாமி விஜயாவைக் கண்டு ஆச்சரியப் படவில்லை. இது ஒரு மாமூல் சம்பவம்.

"ம்...! எழுந்து குளியுங்கள்!" என்றார் விஜயா.

அடிவாரம் மலை உச்சிக்கு ஆணையிடுவது போல் ஆணையிட, அழகான பெண்களால்தானே முடியும்?

தங்கசாமி கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, படுத்திருந்த கோலத்திலேயே எழுந்து பாத்ரூமிற்குள் நுழைந்தார்.

மடமடவென்று கீழே இறங்கிய விஜயா வேதாசலம் அங்கே உட்கார்ந்திருந்தவர்களில் பணக்காரர்களை மட்டும் மேலே அழைத்தார்.

மாடி வரவேற்பறையில் எல்லோரையும் உட்கார வைத்துவிட்டு, தன் அறையில் ஒவ்வொருவரையும் தனித் தனியாகச் சந்தித்தார்.

பேச வேண்டிய முறையில் பேசினால், படிய வேண்டிய பேரங்கள் படிந்து விடுமல்லவா?

(அந்தரங்கம் வரும்)

# நான் வாழவேண்டுமானால்....!

**செ.குணரத்தினம்**

எப்படித்தான் துணிச்சல் வந்ததோ தெரியவில்லை. ஒருநாள் வசந்தனின் மனைவி மலரை கோவிந்தன் திடீரெனக் கட்டிப் பிடித்துக் கொண்டான். "விடுடா நாயே!" என்று அவள் திமிறினாள். பட்டப்பகலில் வசந்தனின் முன்ஹோலுக்குள் வைத்தே நடந்த இந்தச் சம்பவத்தைப் பார்த்து, எதுவும் செய்ய முடியாதவனாக வசந்தன் அங்கே கிடந்த கட்டிலுக்குக் கீழே படுத்துக் கிடந்தான். எல்லாம் அந்த ஐயாயிரம் ரூபாவால் வந்தவினை.

வசந்தன் எப்போதுமே கொஞ்சம் சோக்குப் பேர்வழி. 'ரிப்ரொப்'பாக உடையணிந்து, எப்போதும் காரியாலயத்திற்குள் பளிச்சென்று உட்கார்ந்திருப்பான். பிள்ளையார் படத்தில் செருகிய சந்தனக்குச்சு புகைவதைப் போல அவன் கைவிரல் இடுக்கில் சிகரட் புகைந்து கொண்டேயிருக்கும். 'செயின் ஸ்மோக்'கரென்று அந்தக் காரியாலயத்தில் பெயரெடுத்தவன் அவன்.

'லஞ்ச் ரைம்' வந்தால் மற்றவர்கள் வீட்டிலிருந்து கட்டி வந்த சாப்பாட்டைச் சாப்பிட, வசந்தன் ஹோட்டலுக்குச் சென்று 'எக்கவுண்டுக்'கு வயிறு முட்ட ஒரு பிடி பிடித்துவிட்டு வருவான். வரவிற்குத் தக்கதாகச் செலவு செய்யத் தெரியாதவன்.

கோவிந்தன், வசந்தன் கடமைபுரியும் காரியாலயத்தில் ஒரு சிற்றூழியன். உழைப்பில் எப்போதும் கண்ணாயிருப்பான். கடமை முடிந்து வீடுசென்றால் மனைவி, பிள்ளைகளெல்லோருடனும் சேர்ந்து, கடலை, மிக்சர், பருப்பு என்று 'பக்கட்' பண்ணி ஊரிலுள்ள கடைகளுக்கெல்லாம் கொடுத்து, பணம் பண்ணுவான். இதனால் கோவிந்தனிடம் கொஞ்சம் பணப் புழக்கம் இருந்தது.

அந்தக் காரியாலயத்தில் கடமை பார்க்கும் பெரிய ஐயாமார்களைவிட சிற்றூழியனாக, வேலை பார்க்கும் கோவிந்தன், கடன்படாமல் அவனது முயற்சியினால் சிறப்பாகவே வாழ்ந்து கொண்டிருந்தான்.

வசந்தன், கோவிந்தன் பெறும் சம்பளத்தைவிட இருமடங்கு பெற்றாலும் ஊதாரித்தனமான செலவுகளால் கடன்சுமை ஏறிக்

> **இந்த விஷயம் அவன் மனைவிக்கு தெரிந்திருக்காது. அதனால் நேராக வீட்டுக்குச் சென்று கேள்!**

கொண்டே சென்றது. அதனால் கோவிந்தனிடமும் கடன்பட்டிருந்தான் வசந்தன்.

கைமாற்றாக, வட்டிக்கு என்று வாங்கிய பணம் பெருகிக் கொண்டது. மேலும் மேலும் பணம் கேட்டு வாங்குவானே தவிர, வாங்கிய பணத்தில் 'கொஞ்சமாவது திருப்பிக் கொடுப்போமே!' என்ற எண்ணம் அவனுக்கு வந்ததேயில்லை.

கோவிந்தன் பணத்தைக் கேட்டால், "உன்னிடம்தான் நிறையப் பணம் இருக்கிறதே, இப்போது எதற்கு இந்தப் பணம்? ஆறுதலாக அடுத்தடுத்த மாதங்களில் தருகிறேனே!" என்று சமாளித்து விடுவான்.

'கோவிந்தன் சிற்றூழியன்தானே' என்ற அலட்சியம் வசந்தனுக்கு.

'பெரிய ஐயாவை இந்தப் பணத்திற்காகப் பகைத்துக் கொண்டால் வேலைக்கு ஆபத்து வந்தாலும் வந்துவிடலாம்!' என்ற பயம் கோவிந்தனுக்கு.

கோவிந்தனுக்கும் வசந்தனுக்குமிடையில் இந்தக் கடனால் ஏற்பட்டிருக்கும் சிக்கல் காரியாலயத்தில் உள்ளவர்களுக்கெல்லாம் நன்றாகவே தெரியும்.

"வசந்தனிடமிருந்து நீ பணத்தைத் திருப்பிப் பெறுவதென்பது முடியாத காரியம்! இந்த விசயம் அவன் மனைவிக்குத் தெரிந்திருக்காது. அதனால் நேரே பயப்படாமல் அவன் வீட்டுக்குச் சென்று கேட்டால்தான் அவளுக்கும் புரியும். அப்படித்தான் பணம் பெற முடியாவிட்டாலும்.... உனக்கு நாங்களா புத்திசொல்வது.....? அவள் கொஞ்சம் 'அப்படித்தானாம்...' என்று ஊரெல்லாம் கதை...." என்று சிலர் கோவிந்தனுக்கு 'வைன்' பண்ணினார்கள்.

அந்த 'வைன்' குலைவதற்குள் கோவிந்தன் வசந்தன் வீட்டுக்குப் போனான். அன்று ஒரு லீவுநாள், எப்படியும் ஐயா, அம்மா எல்லோரும் இருப்பார்கள் என்ற நம்பிக்கையோடு, "ஐயா!" என்று குரல் கொடுத்தான். சத்தம் கேட்டு மலர் யன்னலைத் திறந்து பார்த்து "ஆரது?" என்றாள்.

"ஐயா வசந்தன் இருக்கிறாரா? நான் கோவிந்தன்- அவர் காரியாலயத்தில்தான் வேலை பார்க்கிறேன். கட்டாயம் அவரைச் சந்திக்கவேண்டும்!" கோவிந்தனின் இந்தச் சத்தத்தைக் கேட்டதுமே,

"இங்க மலர், நான் அவசரமாக வெளியே போயிருக்கிறேன், வருவதற்கு இரவாகும் என்று சொல்லி ஆளை அனுப்பிவிடு!" என்று சொல்லிவிட்டு பக்கத்தில் கிடந்த கட்டிலுக்குக் கீழே பதுங்கிக் கொண்டான் வசந்தன்.

மலர் கதவைத் திறந்து பதில் சொல்வதற்கிடையில் கோவிந்தன் துணிச்சலோடு உள்ளே நுழைந்தான். மலருக்கு 'திக்' கென்றது.

"ஐயா வெளியே போயிருக்கிறார்...." என்றாள். அவளுடைய அழகும், அவள் அணிந்திருந்த ஆடையின் கோலமும் கோவிந்தனை ஒரு உலுப்பு உலுப்பியெடுத்தது. சுதாகரித்துக்கொண்டு, வந்த விசயத்தைச் சொன்னான். அவள் அதிர்ந்து போனாள். "ஐயா ராத்திரிக்குத்தான் வருவார். வந்ததும் சொல்கிறேன்!" என்று நெளிந்தாள். கோவிந்தனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. "ஐயா வரும்வரையில் நான் உங்கள் பக்கத்தில் இருக்கலாம்தானே!" அப்படியே கட்டிப் பிடித்துக் கொண்டான்.

பெரும் பாடுபட்டு அவனை வெளியே தள்ளி கதவைச் சாத்தவும், கட்டிலின் கீழிருந்து வசந்தன் எழுந்து வரவும் நேரம் சரியாகவேயிருந்தது. நெருப்புப் பொறி பறக்க கணவனைப் பார்த்தாள் மலர்!

"மலர், உண்மையிலேயே நீ வீர பத்தினிதாண்டி! அதை என் கண்ணாலேயே பார்த்தேன்!" என்று அவளைப் பார்த்து நிலமையைச் சமாளிக்க முயன்றான் வசந்தன்.

"தூ நீயுமொரு ஆம்பிளையா? அவனிடமும் இவனிடமும் கடன்பட்டு.....! நேற்றுமொருவன்-அவன்தான் புடவைக் கடைக்காரன் இங்குவந்து இவன்போல என்னுடன் சேட்டை பண்ணி..... சைச் சொந்த மனைவியை எவனோ கட்டிப்பிடிக்க அதைப்பார்த்துக் கொண்டு கட்டிலுக்கடியில படுத்துக் கிடக்கிறவனும் ஒரு கணவனா....?" என்றவள் அவனை வெறுப்போடு பார்த்தபடி கூறினாள்; "இந்தக் கடனைத் தொலச்சாத்தான் நான் தொடர்ந்தும் மனுஷியாக வாழ முடியும்! நான் சொல்வது புரியும் என்று நினைக்கிறன்!" மலர் ஆத்திரத்தோடு உள்ளே நடந்தாள். வசந்தன் தலையில் கைகளை வைத்தபடி உட்கார்ந்து கொண்டான். ■



# காகித ஓடம்

**திருமலை வி. என். சந்திரகாந்தி**



மருந்து வகைகளின் நொடியும் 'டிற்றோல்' மணமும் நாசியைக் குடைந்து குமட்டலை மேலும் அதிகரித்தது!

இரண்டு நாட்கள் முன்னதாக இன்னதென்று அறியாத அந்த திராவகத்தின் நாற்றமும் வழு வழுப்பும் அப்போதிருந்த மனநிலையில் அடுக்குழிக்கவில்லை.

எல்லாம் மனம்தான்!

அந்த 'நர்ஸ்' ஏன் இப்படி கோபம் சாதிக்கிறாள்? நேற்றுவரை அவளுக்கு என்னைத் தெரியாது. நான் அந்த நச்சுத்திராவகத்தை அருந்தியிருக்காவிட்டால் அவளது கடமை நேரம் குறைந்திருக்குமென்றில்லை!

அந்த அநாதைச் சிறுவர் இல்லத்தில் என்னைப் போன்ற சிறுமிகளும் சிறுவர்களும் நூற்றுக் கணக்கில் வாழ்கின்றோம். அதனால் யாரும் யார் மேலும் கோபம் கொண்டதில்லை.

அந்த 'நர்ஸை' மீண்டும் தொந்தரவு செய்கின்றேன்.

"எனக்கொரு தூக்க மாத்திரை கொடு!"

அவளது பார்வை தீச் சுவாலையை அள்ளி வீசி என் அடி வயிற்றுப் புண்ணில் வேலைப் பாய்ச்சுகிறது.

மதிய வெயிலில் வற்றலுக்காகப் போடப்பட்ட பதார்த்தம்போல, குடல் நீர்த்தன்மையை இழந்து கருகி முறுக்கெடுக்கின்றது. தொண்டையை திறந்து வைத்து 'ஐயோ அம்மா' என்று கூக்குரலிட்டு அழுதால் ஆறுதலாக இருக்கும் போல் தெரிகிறது.

எனது நினைவுகள் அசைபோடுகின்றன.

"அம்மா! வெளிநாடு போக வேண்டாம். நாங்கள் எங்கள் குடிசையை வேய்ந்துவிட்டு ஒரு நேரம் சாப்பிட்டு ஒன்றாக இருப்போம்!"

நான் அம்மாவின் மடியில் தலை வைத்து கெஞ்சினேன். எனக்காக மட்டுமன்றி எனது சிறு தங்கைக்காகவும் மன்றாடினேன்.

வெளிநாட்டில் இழந்துவிட்ட எதையோ மீண்டும் போய் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது போல அம்மா தனது பயணத்தில் உறுதியாக இருந்தாள்.

எங்கள் குடிசையை வேய அனுமதிக்காத காணிச் சொந்தக்காரன், நோயாளியான அப்பா, குமர்ப்பருவத்தில் உள்ள நான், நோஞ்சானான தங்கை- இவையெல்லாம் தான் அம்மாவை விரட்டின போலும்.

"அம்மா! பரீட்சையில் நான் சித்தி பெற்று ஒரு வேலையைத் தேடிக் கொண்டு உங்களையெல்லாம் எனது சம்பளத்தில் பார்ப்பேனே!"

அம்மாவின் முகத்தை வாஞ்சையுடன் நோக்கினேன். இந்தப் பிஞ்சு கூறியதை அவள் செவிமடுக்கவில்லை. ஆனால் தான் மீண்டும் வெளிநாடு போவதை உறுதிப்படுத்தும் வகையில் அப்போது அவள் கூறியதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை.

"மகளே! உனது ஜாதகப்படி நீ இம்முறை பரீட்சை சித்தியெய்துவதுகூட சாத்தியமில்லை. ஜோசியர் அப்படித்தான் கூறுகிறார்..."

அதன்பின் அவள் கூறியவை எனது செவிகளில் ஏறவில்லை. எங்கள் இல்லப் பிள்ளைகள், ஆசிரியைகள், சக மாணவிகள் எல்லோரும் என்மேல் வைத்திருக்கும் அபரிமிதமான நம்பிக்கை சிதைந்து விடுமா?

நோயாளியான எனது தந்தையை உழைத்து பராமரிக்க மாட்டேனா?

அப்பாவியான எனது தங்கையை ஆளாக்க மாட்டேனா?

அன்றிரவு தூங்க முடியாமல் படுக்கையில் உழன்றேன். தூக்கம் அணைத்தபோது, திடுக்குற்று எழுந்தமர்ந்தேன். நெஞ்சு படபடத்தது. நூற்றுக் கணக்கான சிறுவர் சிறுமியர் பல கோடி கற்பனைகளுடன் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய முகங்களை புதிதாக பார்ப்பது போல பார்த்தேன்.

கிழித்துப் போட்ட நார்களாக கிடக்கும் இவர்களுக்கு விடிவு எங்கே?

இந்த சமுதாயம் எங்களை வாழ விடுமா?

நெஞ்சில் யாரோ அழுத்துவதுபோல தெரிந்தது.

இந்த எல்லையற்ற பிரபஞ்ச வெளியில்....

துலக்கமற்ற சூன்ய இருளில்....

ஓங்கார ஓசையின் இரைச்சலில்...

ஓடையில் இடப்பட்ட ஓலைக் கந்தலாக நான் அள்ளுண்டு போவதற்கு முன்பதாக... மிடறாக.. மிடறுகளாக... ஓங்காரத்தை அடக்கி மீண்டும் மிடறுகளாக....

அந்த நர்ஸின் இடத்துக்கு இப்போ மற்றொருத்தி! சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டே.....

'வலியம்' குளிகை தந்த சுகத்தில் மயங்கிப் போகையில் மீண்டும் அந்த ஆசை... ஒவ்வொரு உயிருக்கும் உரித்தான ஆசை... இந்த உலகின் உயிர்ப்புக்கு காரணமான ஆசை... நான் வாழவேண்டும்!

# பயங்கரவாதி

**தாமரை மகன்**

செல்லம்மாவின் மடியில் கிடந்து கொண்டு வற்றிப் போன மார்புக்காம்புகளை உறிஞ்சிக் கொண்டிருக்கும் இந்தப் பச்சைக் குழந்தைக்குத் தெரியாது- நிவாரணத் தட்டுப்பாடும், பால்மா தட்டுப்பாடும். 'இனி என் இரத்தம்தான் மார்பு வழியா வரணும்' என்று நினைத்துக் கொண்ட செல்லம்மாவின் மனசு நிகழ்கால நிகழ்வுகளுக்குள் நிலைத்துக் கொண்டது.



இந்த அகதி முகாமுக்கு வந்து அஞ்சு... ஆறு மாசமாகுது. எந்த மாற்றமுமில்லாம எத்தனை நாளைக்கு பசியும், பட்டினியுமா சாகிறதோ...? ஆண்டவனே.... 'நிவாரணப் பிரச்சனை இல்லை. தேவையானதெல்லாம் அனுப்பியாச்சி' எண்டு பேப்பர்ல அறிக்கையும், ரேடியோவில செய்தியுமா காதால கேட்கிறதவிட இங்க எதுவும் நடந்ததா தெரியல்ல.... இது அகதி முகாமா?... ச்சே.... சிறைச்சாலை மாதிரியெல்லோ இருக்குது? யாருடைய அனுதாபங்களுக்கும் இடமில்லாம அநாதையா கிடைக்கிறோம்.

ஆம்பிளையள வெளியில காண விடுயினமில்லை.... அவன் இவன் எண்டு பிடிச்சிட்டுப் போய் இரவோடு இரவா சுட்டுப் போடுவினம்... கடவுளே இப்படி எத்தின அப்பாவிப் பெடியள கொண்டு புதைச்சுப்போட்டாங்கள்....... எப்பதான்! எங்களுக்கு விடியப் போகுதோ தெரியல்லை....

மனது வறுமையின் தளர்விலிருந்து கொடூரத்தின் அறுவடைகளை மீட்டிக் கொண்டிருக்கவும்.... மடியிலிருந்த குழந்தை மார்பைக் கடித்துவிட உயிரே போன மாதிரி வலி தாங்க முடியாது போக, பிள்ளையின் வாயில் சுண்டி விட்டாள்... பாவம் பச்சை மண் வீரிட்டு அழவும் செல்லத்தின் கண்கள் கலங்கிப் போயின.

யார்ட காலிலயாவது விழுந்து... எங்கையாவது அலைஞ்சு மாப் பைக்கட் வேண்டிக் கொண்டு வாறனெண்டு போன இவரையும் காணவில்லை, என்று கணவனின் வருகைக்காக பெருமூச்சொன்றை உதிர்த்தபடி முகாம் வாசலைப் பார்த்தாள்.

"சந்தியில யாரையோ சுட்டுப் போட்டுக் கிடக்காம்!" என்று இருவர் பேசிக்கொள்ள... 'இண்டைக்கு எந்த அப்பாவியச் சுட்டாங்களோ?' என்று நினைத்துக் கொண்ட செல்லத்தை கூப்பிட்ட படியே ஓடி வந்த பக்கத்து வீட்டுப் பெடியன்,

"செல்லம் அக்கா! சந்தியில சுட்டுக்கிடக்கிறது வேறுயாருமில்ல, உங்க புருசனைத்தான் சுட்டுப்போட்டாங்கள்!" என்று திக்கித் திக்கி சொல்லி முடிக்கும் முன்னமே நிதானம் நிலைக்க முடியாமல் நெஞ்சைப் பிடித்தபடியே மல்லாக்கச் சரிந்தாள் செல்லம்.

"வேவு பார்க்க வந்த பயங்கரவாதி ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப்பலி!" என்று சிவலிங்கத்தின் ரேடியோச் செய்தி மரண அமைதி நிலவும் அந்த அகதிமுகாமுக்குள் பெரிதாய் ஒலித்து நாராசமாய்ப் பாய்ந்தது. ■

# எதிர்பாராதது

**சுகந்தி**

பத்மாவைப் பார்த்ததும் சித்ராவுக்கு 'சட்'டென்று அந்த யோசனை உதித்தது. இன்று தன்னைப் பெண் பார்க்க வருகிறபொழுது பத்மாவையும் அருகில் வைத்துக் கொண்டால் என்ன?

சித்ரா அழகாக இருப்பாள். அவளைப் பெண் பார்க்க வந்த எவ்வளவோ பிள்ளைகள் தங்களை அதிரூப, சுந்தர மன்மதன்களாக எண்ணிக் கொண்டு அவளை ரதி போல இல்லையென்று சொல்லி விட்டுப் போய் விட்டார்கள்.

ஒரு பொருளின் மதிப்பு அதிகமாகத் தெரிய வேண்டுமென்றால் அதனருகில் அதை விட மதிப்புக்குறைவான பொருள் வைத்தால் போதும். இருளான வானத்தில் நிலா எவ்வளவு அழகாக இருக்கிறது?

"இன்னைக்கு என்னைப் பெண் பார்க்க வாராங்க பத்மா! என் கூட நீ இருந்தா எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கும்" என்றாள் சித்ரா.

தனக்குத்தான் கல்யாணமாகவில்லை. தன் சிநேகிதிக்காவது ஆகட்டும் என்று நினைத்தாளோ என்னவோ உடனே 'சரி' என்று சொல்லிவிட்டாள் பத்மா. சொல்லியபடி வரவும் செய்துவிட்டாள்.

மாப்பிள்ளை வீட்டார்கள் வந்தார்கள்.

'தனக்கு இந்த சம்பந்தம் சரியாகிவிடும் என்கிற நம்பிக்கையில் சித்ரா உள்ளுக்குள் மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்தாள். 'பையன் தனக்கு பெண்ணை பிடித்து விட்டது!' என்று சொல்லப் போவதைக் கேட்க அவள் செவிகள் தயாராயின.



"பொண்ணு பிடிச்சிருக்கா என்கிறதை இப்பவே சொல்லிட்டா ரொம்ப நல்லது," என்று இழுத்தார் சித்ராவின் அப்பா.

பையன், "மன்னிக்கணும்.... உங்க பொண்ணு சுமாரா இல்லாம அழகாவே இருக்கா... அவளுக்கு இன்னைக்கு இல்லாட்டாலும் இன்னொரு நாள் நிச்சயம் கல்யாணம் நடந்துடும். அதிலே சந்தேகமில்லை. பக்கத்திலே இருக்கிற பொண்ணு அப்படியில்லை. ரொம்ப ரொம்ப சுமார்தான். நிறம் வேறு குறைவு. பார்த்தாலே ஏழைப் பெண் மாதிரி தெரிகிறது. அவளைக் கல்யாணம் பண்ணிக்க ஆயிரத்திலே ஒருவன் முன் வந்தா அதிசயம் தான்-நான் அந்த ஆயிரத்துலே ஒருவனாக இருக்க விரும்பறேன்!" என்றான்.

தான் போட்ட திட்டத்தில் ஏமாந்து விட்டாலும், பத்மாவின் கைகளைப் பிடித்து 'வாழ்த்துக்கள்' என்றாள் சித்ரா,

# இலக்கிய நயம்

# புண்

தருவது ரசிகன்



**சோ**ழ மண்மீது
அடிக்கடி படையெடுத்து
திருவிழா கொண்டாடியது
பல்லவ நாடு!

எங்கள் தேசத்தின்
திரு உருவை
பங்கம் செய்வது
திருவிழா அவர்களுக்கு!

தாயினும் மேலான
தாயக பூமியில்
நாயிலும் கேடாக
நம்மை ஆளவோ
பேயிலும் கொடிய
பல்லவர் புகுந்தனர்?

சோழமண்ணை
துகிலுரிய வந்தவர்கள்
கோயில் கட்டுகிறார்களாம்!
மலையைக் குடைந்து
சிற்பம் வடிக்கிறார்களாம்!
மக்களை ஏய்க்கவே
மதாலய பாசம்!

நாம் வணங்கும்
முதற் கோயில்
நம் தாய்த்திருநாடு!

குறுக்கு வழியால்
கோயிலுக்குள் புகுந்தவர்கள்,
நம் வெறுப்பை நறுக்க
கும்பாபிஷேகம் நடத்துகிறார்கள்!

கோயில் கட்ட நிதி
குளம் கட்ட நிதி
சிற்பம் வடிக்க நிதி

பல்லவ தேசம்
வலை வீசிப்பார்க்கிறது!
நிதியைக் காட்டி-நம்
விதியை தம் கையில்
வைத்திருக்க துடிக்கிறது!

நெல் தருகிறோம்
குரக்கன் கொடுக்கிறோம்
வெல்லம் வேண்டுமா
பாலும் பழமும் தருகிறோம்!
பல்லவ தேசம்-நம்மை
கையேந்திகளாக்க
கங்கணம் கட்டிவிட்டது!

சோழ இளைஞர்கள்
வேழமாய் நிமிர்ந்தனர்!

மான மறவர்கள்
விடுதலை கானம் இசைத்தனர்!

எங்கள் தோளில் ஏறி
நீ கோயில் கட்டவேண்டாம்!
எங்கள் முதுகில் ஏறி
நீ சிற்பம் செய்ய வேண்டாம்!

எங்கள் பச்சை வயல்கள்
உன் அதிகார இச்சையால்
பாழ் பட்டுக் கிடக்கிறது!
நீ பிச்சை போடுகிறாய்
பதிலுக்கு கச்சையையும் கேட்கிறாய்!

சோழ நாடெங்கும்
கோபம்
கொழுந்துவிட்டெரிந்தது!

உச்சிச் சூரியனாக
உயர்ந்தன முகங்கள்!

ராஜராஜ சோழன்
மாண்டபின்னர்
சோழநாடு
சோர்ந்து போயிருந்தது!

அந்த நேரம்பார்த்து
பூனைகள்
புகுந்து விட்டன!

சோழனின் வாரிசுகள்
சோடை போனதால்
கோலத் தமிழ் மண்ணில்
பீடைகள் பெருகின!

பல்லவனுக்கு முன்னால்
பல்லிளிக்க சிற்றரசர்
பல் தீட்டிக் கொண்டிருந்தனர்!

பல்லவர்கள் பலசாலிகள்
கப்பம் கொடுத்தால்
குறுநிலம் ஆள
குறுக்கே நில்லார்கள்!

சிற்றரசர்கள் சிலர்
சிறுமதி உரைத்தனர்!

பல்லவ படையையும்
பல்லவ மன்னனையும்
போற்றிப் புகழ்வதில்
போட்டி முற்றியது!

"பல்லவ மன்னன்
நல்லவன், வல்லவன்!
கள்ளம் கபடில்லாதவன்!"
உள்ளத்தில் பள்ளம்
உள்ளவர்கள் புகழ்ந்தனர்!

மன்னன் நல்லவன்
என்று புகழ்ந்தால்தானே,
மக்கள் தங்களை
இகழ மாட்டார்கள்
என்பதால் புகழ்ந்தனர்!

"மன்னன் மாணிக்கம்
என்பது மெய்யானால்
மண்ணை ஆக்கிரமித்தது
மன்னனின் மறுபிறவியோ?"

இளைஞர்கள் கொதித்தனர்
எதிரியையும் புகழலாம்
ஆனால் கண்ணில் ஒற்றி
காலில் விழக்கூடாது!

எதிர்த்துக் கிளர்ந்தனர்.
போரிடத் துணிந்தனர்!

"நீங்கள் எதிர்த்தால்
வீழுமோ பல்லவம்?
வாருங்கள் வாழலாம்
வளம் உண்டு!

மங்கையில் புரளலாம்!
மதுவில் நீந்தலாம்!
கொங்கைகள் தழுவி
பொங்கிப் பூரிக்கலாம்!"

சிற்றரசர்கள்
அழைப்பு விடுத்தனர்!

"தாயை துகிலுரிபவன்
பலசாலி. என்பதால்
தடுக்காதிருப்பவர் நீங்களா?

எதிர்த்தால் பயன் இல்லை
என்பதால் ஒதுங்கி
தாயைத்தாரை வார்ப்பவர்
மானமுள்ள மனிதரா?

இன்று எதிர்ப்பது
தோல்வியிலும் முடியலாம்!
என்றோ ஒருநாள்
வெற்றி வசப்படும்.

எதிர்த்தோம் நாம்
என்பதே-நம்
எதிர்காலச் சந்ததிக்கு
எடுத்துக்காட்டாய் அமையலாம்!"

இளைஞர்கள் கிளர்ந்தனர்
சிற்றரசர்கள் சினந்தனர்!

"உங்கள் இளைஞர்களை
நீங்களே நசியுங்கள்."
பல்லவ மன்னன் கட்டளை!

சிற்றரசர் படைகள்
சோதர இரத்தில்
கைகளை நனைத்தன!

சோறு தான் முக்கியம்
சுதந்திரம் வந்தால்
சோறு கிடைக்காது!

எலும்புத்துண்டாயினும்
அதன் ருசியே தனி!
எழுந்து எதிர்த்தால்
எலும்பும் மிஞ்சாது!

எம்மோடு வாருங்கள்
பதவிகள் உண்டு!

எம்மோடு வாருங்கள்
பரிசுகள் உண்டு!"

சிற்றரசர்கள்
வேட்டை நடத்தினர்!

சோழ இளைஞர்கள்
செத்து வீழ்ந்தனர்.

"பல்லவ மன்னா
உன் பலம் உயர்ந்தது!
எம் பலம் அழித்தோம்
உம் பலம் காக்க!"
ஓடோடி உரைத்தனர்

பல்லவன் நகைத்தான்.
"உங்கள்மீது உங்கள்
மக்களே வெறுப்பாயுள்ளனர்!
அதனால் உங்கள் தலைகள்
உடன் சீவப்படும்!"

சிற்றரசர்கள் திகைத்தனர்.
"மன்னா இது துரோகம்!
மன்னா இது அநியாயம்!"

மன்னன் இகழ்ச்சியாக
நோக்கினான்;
உங்கள் மண்ணுக்கு
நீங்கள் செய்த
துரோகத்தைவிட
இது ஒன்றும் அதிகமில்லை!
உங்கள் மக்களுக்கு
நீங்கள் செய்த
அநியாயத்தைவிட
இது ஒன்றும் பெரிதுமில்லை!"

"என்ன துரோகம்?"
என்னைப் புகழ்ந்தீர்களே
அது ஒன்று போதாதா?
என்னை நானறிவேன்-அதனால்
உங்கள் பொய் அறிவேன்!"

இறுதியாய் ஆணையிட்டான்
"இவர்கள் கண்களைப் பிடுங்கி
கழுகுக்குப் போடுங்கள்!

கண்களுக்கு அழகு
கண்ணோட்டம்!- நல்ல
கண்ணோட்டம் இல்லாத
உங்கள் கண்கள் புண்கள்!
இருந்தென்ன இலாபம்
எடுத்தெறியுங்கள்!"

சிற்றரசர்கள்
மூர்ச்சையாகினர்!

**"கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் -அஃதின்றேல்**
**புண்ணென்று உணரப்படும்!"**
அதிகாரம்: 58 குறள்: 575

# சிந்தியா பதில்கள்

✍ **சிந்தியா! அரட்டை அரங்கத்தில் விசுவின் உபதேசம் கேட்கிறீரா?**

கா. செந்தில்நாதன், கொழும்பு-10.

*படுபிற்போக்கான கருத்துக்களை பரப்பிவருகிறார்! ஏதோ ஆண்கள் எல்லாம் பெண்களுக்குப் பயந்தவர்கள் போலவும், பெண்கள்தான் சண்டை பிடிப்பவர்கள், ஆசைபடைத்தவர்கள் போன்றும் தன் பாட்டுக்கு அள்ளிவிடுகிறார்! பெண்களும் சிரித்து வரவேற்பதுதான் கொடுமை!*

✍ **மடு தேவாலயத்திற்கு மின்சாரம் கொடுக்கப்போவதாக அரசு கூறியுள்ளதே?**

ஏ. தவரூபன், வவுனியா.

*ஆயுதபாணிகள் நடமாடத் தடை விதிக்கப்பட்ட பகுதியில் அழையாத விருந்தாளிகளாக நின்றபடி அப்படிக் கூறுவது, ஆசை காட்டுவது போலிருக்கிறது!*

✍ **யாழ் காணி சுவீகரிப்பில் அரசு வாக்குறுதி வழங்கியுள்ளதே?**

பி. சிவானந்தம், கொழும்பு-06.

*யார் யாருக்கு கூறியது என்பதே மர்மமாக உள்ளபோது, அதனை வாக்குறுதி என்று நோக்க முடியாதுள்ளது!*

✍ **கிரிக்கெட் சபை தேர்தலில்கூட முறைகேடாமே?**

எம். பெரியசாமி, பதுளை.

*தலைவர்கள் எவ்வழி, மக்கள் அவ்வழி!*

✍ **சிந்தியா! இம்முறை தேர்தல் தினத்தில் வன்முறைகள் நடக்குமா?**

ச. திவ்யா, இரத்தினபுரி.

*நடக்குமாவா? வெடிக்கும்! இப்போதே அதற்கான ஆயத்தங்கள் நடப்பதாகக் கேள்வி!*

✍ **நல்ல ஆசைகள் என்று எதனைக் கூறலாம்?**

கே. உதயராணி, மன்னார்.

*தமக்கும், பிறருக்கும் துன்பமும், துயரமும் தராத ஆசைகள் யாவும் நல்ல ஆசைகளே!*

✍ **சிந்தியா! பணமா? பாசமா?**

எஸ். பாத்திமா, பேருவளை.

*இந்தக் கதையைப் படியுங்கள்:*

*நகைச்சுவை எழுத்தாளர் ஒருவர் இருந்தார். அவருக்குப் பக்கத்து வீட்டில் ஓர் அம்மா குடியிருந்தார். அந்தம்மாவின் மகன் வெளியூரில் தங்கி படித்துக் கொண்டிருந்தான்.*

*அந்தம்மா வாரம் ஒரு தடவை தவறாமல் மகனுக்கு கடிதம் எழுதுவார். ஆனால் மகனிடம் இருந்து பதில் வராது.*

*இரண்டு வருடங்களாக கடிதம் எழுதியும் பதில் வராததால், அந்தம்மா எழுத்தாளரிடம் புலம்பினார்.*

*அதற்கு எழுத்தாளர், "அம்மா! இந்தத் தடவை உங்கள் மகனுக்கு நான் கடிதம் எழுதுகிறேன். உடனடியாக உங்களுக்குப் பதில் வரும்!" என்றார்.*

*அதேபோல அடுத்த வாரமே மகனிடம் இருந்து கடிதம் வந்தது. அதில் பின்வருமாறு இருந்தது:*

*"அன்புள்ள அம்மா! நீ எழுதிய கடிதத்தில் ஐயாயிரம் ரூபாய்க்கான காசோலை ஒன்றை இணைத்திருப்பதாக எழுதியிருந்தாய்! ஆனால் கடிதத்துடன் காசோலை இல்லையே! ஏன்? என்ன நடந்தது? உடன் பதில் எழுதவும்!"*

✍ **'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' ரோஜாவின் அடக்கமான நடிப்பு எப்படி சிந்தியா?**

ஆர். பிரசிந்தா, கண்டி.

*அந்த அடக்கத்துக்குமாகச் சேர்த்துதான் 'சின்ன ராஜா'வில் கார்த்திக்குடன் கவர்ச்சியின் எல்லைக்கே போய் ஆர்ப்பாட்டம் நடத்தி விட்டாரே! சகிக்கவில்லை, போங்கள்!*



'ஹே ராம்' படத்தில் கமல்–ஷாருக்கான்

✍ **கமலின் அடுத்த படத்தில் (மருதநாயகமல்ல) என்ன புதுமையோ?**

சா. நகுலன், திருமலை.

*கமலும், ஷாருக்கானும் இணைகிறார்கள். முதன் முதலாக ஷாருக்கான் சொந்தக் குரலில் தமிழ் பேசுகிறார். கமல் ஒரு பாடல் எழுதப்போகிறார். முதன் முதலாக ஹேமமாலினி தமிழ்ப் படத்தில் நடிக்கிறார். 1946 முதல் 1999 வரை கதை விரிகிறதாம்! 'ஹேராம்'!*

✍ **பிரபு படங்கள் எதுவும் குறிப்பிடும்படி வெற்றி பெறவில்லையே ஏன்?**

கே. சசிகுமார் (பிரபு ரசிகன்), நுவரெலியா.

*பிரபு படம் மட்டுமல்ல, முன்னணி நடிகர்கள் பலருக்கும் சென்ற வருடம் இறங்கு முகம்தான்!*

*தற்போது 'திருநெல்வேலி' படத்தில் வித்தியாச தோற்றத்தில் நடிக்கிறார் பிரபு என்பது உங்களுக்கு சந்தோசச் செய்தி.*



'திருநெல்வேலி' படத்தில் பிரபு

✍ **அரசியல்வாதிகள் என்ன துணிச்சலில் வாக்குறுதிகள் வழங்குகிறார்கள்?**

என். மேகலா, வத்தளை.

*சமீபத்தில் படித்த அரேபியக் கதை.*

*அந்த ஊர்ச் சந்தையில் கழுதை, குதிரை போன்ற கால் நடைகளது வியாபாரம் சிறப்பாக நடக்கும்.*

*கழுதை, குதிரைகளைக் கொண்டு சென்று ஏனைய வியாபாரிகளோடு போட்டி போட்டு குறைந்த விலைக்கு விற்பார் ஒரு வியாபாரி.*

*திடீரென்று புதிதாக வந்த ஒரு வியாபாரி, அந்தப் பழம்பெரும் வியாபாரியை அதிர்ச்சிக்குள்ளாக்கினார்.*

*அந்தப் பெரிய வியாபாரியைவிட மலிவாக கழுதை, குதிரைகளை விற்க ஆரம்பித்தார்.*

*"இது எப்படி கட்டுப்படியாகிறது?" என்று குழம்பினார் பெரிய வியாபாரி.*

*புது வியாபாரியை அழைத்து:*

*"என் கழுதை, குதிரைகளை என் அடிமைகளே தங்கள் சொந்தப் பொறுப்பில் வளர்க்கிறார்கள். அவற்றுக்கு மலிவான மட்டமான உணவையே கொடுக்கிறேன். எனக்கு செலவு இல்லை. அப்படி இருந்தும் நீ விற்கும் விலைக்கு என்னால் விற்க முடியவில்லை. கட்டுபடியாகாது. நீ எப்படி விற்கிறாய்?" என்று கேட்டார்.*

*அதற்கு புது வியாபாரி:*

*"இது சின்ன விஷயம். நீர் உமது கழுதைகளது உணவையும், அடிமைகளின் உழைப்பையும் திருடுகிறீர். நான் கழுதைகளையே திருடுகிறேன். அதனால் எவ்வளவு குறைத்து விற்றாலும் எனக்கு கட்டுப்படியாகும்!" என்றார்.*

*ஏமாற்றுவது என்று முடிவு செய்து விட்ட பின்னர் எப்படி வாக்குறுதி கொடுத்தால் தான் என்ன?!*

# சிந்தியா பதில்கள்

✍ **சிந்தியா! நடிகைகளை கிண்டல் பண்ணுவதும், கிசு கிசுப்பதும் ஹொலிவூட்டிலும் இருக்கிறதா?**

எம். சில்வஸ்ரர், பசறை.

*உண்டு!*

*ஹொலிவூட்டில் நடந்த விருந்து ஒன்றில், அங்கு வந்த விருந்தினர்களிடம் ஒரு காகிதத்தைக் கொடுத்தனர்.*

*ஒவ்வொருவரும் இறந்த பிறகு தங்கள் கல்லறைமீது என்ன வாசகம் எழுதப்பட வேண்டும்? என்பதை எழுதச் சொன்னார்கள்.*

*ஒரு நடிகைக்கு ஏன்ன எழுதுவது என்று தெரியவில்லை. தன் அருகில் நின்ற ரொபர்ட் பென்ஸ்லீ என்னும் நகைச்சுவை நடிகரிடம்; "எனக்கு பதிலாக நீங்களே ஏதாவது எழுதிக் கொடுங்கள்" என்று கூறினாள்.*

*அவர் சிறிது யோசித்துவிட்டு ஏதோ எழுதிக் கொடுத்தார். வாங்கிப் பிரித்துப் பார்த்த நடிகைக்கு முகம் இருண்டு போனது.*

*அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:*

*"யாரும் தொந்தரவு செய்யாதீர்கள். இப்போதுதான் இவள் தனியாகத் தூங்குகிறாள்."*

✍ **டெண்டுல்கரின் முதுகுவலி குணமாகுமா?**

சி. சித்ரா, கொழும்பு-11.

*குணமாகும்! தொடர்ந்தும் அணியின் சுமையை தனியாளாகச் சுமந்தால் முதுகுவலி மட்டுமா, தோள் வலியும்தான் வருத்தும்!*

*ஸ்போர்ட்ஸ்*

# 50 ஆயிரம் டொலர்கள்

**இ**ங்கிலாந்து, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகள் கலந்து கொள்ளும் முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகள் ஷார்ஜாவில் வரும் ஏப்ரல் மாதம் 7ம் திகதி தொடங்குகிறது.

மே மாதம் 14ம் திகதி தொடங்கும் உலகக் கோப்பை போட்டிக்கு முன் இந்த மூன்று அணிகளும் விளையாடும் கடைசிப் போட்டி ஷார்ஜாதான்.

ஷார்ஜா போட்டிகள் லீக் அடிப்படையில் நடக்கின்றன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் இரண்டு முறை மோதும். இறுதியில் புள்ளிகளின் அடிப்படையில் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்குத் தகுதி பெறும்.

முன்னாள் இந்திய வீரர்களான நாரி கண்ட்ராக்டர், சந்தீப் பாட்டீல், கர்சன் காவ்ரி மற்றும் பாகிஸ்தானிய வீரர்களான அக்கிப் ஜாவெட், கான் முகமட் ஆகிய ஐவருக்கு இந்தப் போட்டிகள் நலநிதிப் போட்டியாக நடத்தப்படுகிறது. இதுவரை ஷார்ஜாவில் நடைபெற்ற போட்டிகளின் மூலம் 120 பேர் நலநிதியாகப் பயன்பெற்றுள்ளனர்.

இப்போட்டித் தொடரில் முதலிடத்தைப் பெறும் அணிக்கு 50 ஆயிரம் டொலரும் (35 இலட்சம் ரூபா), இரண்டாவது இடத்தைப் பிடிக்கும் அணிக்கு 30 ஆயிரம் டொலரும் (21 இலட்சம் ரூபா), மூன்றாவதாக வரும் அணிக்கு 20 ஆயிரம் டொலரும் (14 இலட்சம் ரூபா) பரிசாக வழங்கப்படுகிறது.

இதை விட ஆட்ட நாயகனுக்கு ஆயிரம் டொலரும் (70 ஆயிரம் ரூபா), தொடர் நாயகனுக்கு 3500 டொலரும் (2 இலட்சத்து 45 ஆயிரம் ரூபா) வழங்கப்படவுள்ளது. அத்துடன் விரைவான சதம் மற்றும் அரைச் சதம் அடிப்பவர்களுக்கும் சிறந்த பந்து வீச்சாளர்களுக்கும், சிறந்த கட்ச் பிடிப்பவர்களுக்கும் தனித்தனியான பரிசுகள் உள்ளன.

இத்தொடரில் கே.டி.ஃபிரான்ஸிஸ் (இலங்கை), டரில் ஹெயார் (அவுஸ்திரேலியா), இயன் ரொபின்சன் (ஸிம்பாப்வே) ஆகிய மூவரும் அம்பயர்களாகச் செயற்படுவார்கள்.

இலங்கையின் முன்னாள் வீரர் சிதாத் வெத்தமுனி போட்டி நடுவராக இருப்பார்.

# ஒய்வு தேவை!



**மு**துகுவலி காரணமாக இங்கிலாந்து சென்று சிகிச்சை பெற்ற பின் தற்போது இந்தியா திரும்பி ஓய்வெடுத்து வருகிறார் சச்சின் டெண்டுல்கர். இதனால் இந்தியாவில் நடைபெறும் முத்தரப்புப் போட்டியில் அவரால் பங்கேற்க முடியவில்லை.

அண்மையில் விழா ஒன்றிற்கு வருகை தந்த டெண்டுல்கர் அளித்த பேட்டியில் கூறியதாவது:

"எனக்கு இப்போது, உடல் ரீதியாக மட்டுமன்றி மனரீதியாகவும் ஓய்வு தேவைப்படுகிறது. எனது குடும்பத்துடன் சேர்ந்து இருக்கும்போதுதான் எனக்கு மன நிம்மதி கிடைக்கிறது.

எனது நாட்டில் கிரிக்கெட் போட்டி நடக்கும்போது அதில் என்னால் கலந்து கொள்ள முடியவில்லையே என்ற ஆதங்கம் இருக்கிறது. ஆனால் என்ன செய்வது? இப்போது ஓய்வு எடுத்துக்கொண்டால்தான் உலகக் கோப்பையில் பிரச்சனையின்றி ஆட முடியும்.

இப்போது நான் கண்ணாடி முன் நின்று பேட்டை வைத்துக் கொண்டு மனதில், அடித்து ஆடிப் பார்த்துக் கொள்ளுகிறேன். எனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து இவ்வளவு நாட்கள் கிரிக்கெட்டில் இருந்து விலகி இருப்பது இதுவே முதல்முறை.

நான் தொடர்ச்சியாக ஓய்வின்றி கிரிக்கெட் ஆடி வந்துள்ளேன். தொடர்ந்தும் கிரிக்கெட் ஆடுவதில் விருப்பம் உள்ளவனாக இருக்கிறேன்.

ஷார்ஜா போட்டிகளில் நான் பங்கேற்பேனா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்" என்று டெண்டுல்கர் கூறியுள்ளார்.

**அவர்தான் இவர்**



விஜய்

# திருமறை தரும் பொது நெறி 55


# முறியடிக்கப்பட்ட மூட நம்பிக்கைகள்

ஆண்டவருடைய பெயரைச் சொல்லி ஏமாற்றுபவர்கள் என்றாவது ஒருநாள் தலை குனியவே செய்வார்கள்; தக்க தண்டனையும் பெறுவார்கள்.

பேல் தெய்வம் உண்மையானதல்ல; அத்தெய்வத்தைக் காட்டி வயிறுவளர்ப்பவர்கள் மன்னரையும் மக்களையும் ஏமாற்றுபவர்கள் என்பதும் வெளிப்படையாகத் தெரிந்துவிட்டது. ஏமாற்றி வந்த குருக்களும் மன்னரால் தண்டிக்கப்பட்டனர்.

சைரசு மன்னருக்கு மற்றுமொரு நம்பிக்கை இருந்தது. அந்நகரில் உயிருள்ள அரக்கப் பாம்பு ஒன்று, தெய்வமாகக் கருதப்பட்டு, மன்னராலும் மக்களாலும் போற்றி வணங்கப்பட்டு வந்தது. மன்னர் அந்தத் தெய்வீகப் பாம்பு- பேல் தெய்வத்தைப் போல் அல்லாது- உண்மையான சக்தி வாய்ந்த தெய்வம் என்று தானியேலிடம் சொன்னார். அதனையாவது வணங்க வேண்டும் என்று வாதிட்டார்.

அந்தப் பாம்பு இருக்குமிடத்தை தானியேல் போய்ப் பார்த்தார். "இந்தப் பாம்பில் எதுவித தெய்வீக சக்தியும் கிடையாது. இது ஒரு சாதாரண பாம்புதான்! என்று தானியேல் எடுத்துரைத்தார். தடியால் அடிக்காமல், கல்லால் எறியாமல் அப்பாம்பைத் தான் கொன்று விடுவதாக மன்னரிடம் தானியேல் கூறினார்.



மெழுகு, கொழுப்பு மற்றும் முடி போன்றவற்றை ஒன்று சேர்த்து உருண்டைகளாகத் திரட்டிக்கொண்டுபோய் அப்பாம்பின் வாயில் தானியேல் திணித்தார். அந்த அரக்கப் பாம்பும் உருண்டைகளை விழுங்கியது. சற்று நேரத்தில் பாம்பின் வயிறு புடைத்து வெடித்தது. அதன் உயிரும் பிரிந்தது. மன்னரைப் பார்த்து தானியேல், "பார்த்தீர்களா மன்னவரே? இப்பாம்புக்கு எவ் வித தெய்வீக சக்தியும் கிடையாது. இதுவும் ஒரு சிலரின் ஏமாற்று வித்தையே!" என்றார்.

மன்னர் சைரசு இப்பொழுது தானியேல் வணங்கும் இஸ்ரயேலரின் தெய்வமே உண்மையானது என்பதைப் பரிபூரணமாக நம்பினார்.

## மக்களின் குமுறல்

பாபிலோனிய மக்களால் அதுகாலவரை பக்தி சிரத்தையுடன் ஏற்றிப் போற்றப்பட்டு வந்த பேல் தெய்வமும் அரக்கப் பாம்பும் போலியானவை என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது. இதனால் மக்கள் மத்தியில் பலவிதமான உணர்வுகள் தலையெடுத்தன. தங்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாக அதுகாலவரை வணங்கப்பட்டு வந்த தெய்வங்கள் பொய்யானவை-போலியானவை என்பதை அவர்கள் சீரணிக்க முடியவில்லை. இவர்கள், மன்னருக்கும் தானியேலுக்கும் மாறாக ஒன்று திரண்டு ஓரணியை அமைத்தனர்.

"தானியேல்- பாபிலோன் மன்னர் சைரசை மனம் மாற்றி இஸ்ரேலியருடைய தெய்வத்தை வணங்கும்படி தூண்டிவிட்டார்!" என்று நாடெங்கும் பிரசாரம் பண்ண ஆரம்பித்தார்கள். இந்தப் பிரசாரம் வலுவடைய ஆரம்பித்ததும் மன்னர் திணறலானார்.

அரசனாக முடி சூட்டிக் கொள்பவர்களுக்கு அதிகாரங்கள் கூடுதலாக இருப்பது என்னவோ உண்மைதான். இருப்பினும் மக்களுடைய கருத்துக்களுக்கு அக்கால மன்னர்களும் ஓரளவு செவிசாய்க்க வேண்டியவர்களாகவே இருந்தனர்.

பாபிலோன் மக்களின் குரல் ஓங்கி ஒலித்தது. ஓர் அந்நியரான தானியேல் அரசரைத் தனது தந்திரோபாயங்களினால் மயக்கிவிட்டார்; தாங்கள் நீண்ட நெடுங்காலமாக வணங்கி வந்த தெய்வங்களை அவமதித்துவிட்டார், என்று மன்னர்மீது பெரும் பழி சுமத்தினார்கள். தானியேலை தங்களிடம் ஒப்படைக்குமாறு ஒரே குரலில் ஆர்ப்பரித்தார்கள்.

மன்னர் பெரிதும் மனம் வருந்தினார். அவருக்கு தானியேலே தைரிய மூட்டினார். ஆண்டவர் தன் பக்கமிருக்கும்போது, எவராலும் எதுவுமே செய்ய முடியாது என்று மன்னரிடம் கூறியவாறு, ஆரவாரித்துக் கொண்டு நின்ற மக்கள் முன்போய் நின்றார்.

தானியேலைக் கல்லெறிந்து கொல்லலாம் என்றனர் சிலர். அடித்தே கொன்று போடலாம் என்றனர் வேறு சிலர். அவரை சிங்கக் குகைக்குள் போட்டு அம்மிருகங்களுக்கு இரையாக்கிவிடலாம் என்று ஒரே முடிவுக்கு வந்தனர். இம்முடிவுக்கு வந்ததும் தானியேலின் முன்னும் பின்னும் ஆடிப்பாடிக் கொண்டு மக்கள் சூழ்ந்து சென்றனர். புன்முறுவல் மாறாது- சாந்தசொரூபியாக தானியேல் நடந்து சென்றார்.

## மன்னரின் கலக்கம்

மன்னர் சைரசு அடைந்த மன வேதனைக்கு அளவேயில்லை. பேரறிவாளரும் உற்ற நண்பனுமானவரும், அரசியல் விவகாரங்களில் தனக்கு ஒப்பற்ற துணைவருமாக இருந்த ஒருவரை சிங்கங்களுக்குப் பலியிடுவதை எண்ணிக் கலங்கினார்.

குகைக்குள் ஏழு சிங்கங்கள் காணப்பட்டன. சிலநாட்கள் பட்டினியாகப் போடப்பட்டிருந்தன. தங்கள் விரோதியான தானியேலை குகைக்குள் எறிந்ததும் உடனடியாகவே அவரை அச்சிங்கங்கள் கீறிக் கிழித்துத் தின்றுவிடும் என்று பெருமகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் தானியேலின் எதிரிகள் கூத்தாடினர். மன்னரும் அவருடன் மிக நெருக்கமான சிலருமே மனம் வெதும்பினர்.

அக்காலத்தில் யூதாநாட்டில் ஆபகூக்கு என்ற பெயருடன் ஓர் இறைவாக்கினர் வசித்து வந்தார். இறைவனால் அனுப்பப்பட்ட தூதர் அபகூக்கிடம் வந்தார். அப்பங்களைத் தயாரித்து கூழும் காய்ச்சி எடுத்துக் கொண்டு, வயல் வெளியில் தானியம் அறுவடை செய்யும் பணியாளர்களுக்கு அவர் கொண்டு போய்க் கொடுப்பது வழக்கம். அன்றையதினம், அப்பங்கள் சிலவற்றையும் கூழையும் எடுத்துக் கொண்டுபோய், பாபிலோனில் சிங்கக்குகையிலிருக்கும் தானியேலிடம் கொடுக்குமாறு ஆண்டவரின் தூதர் ஆபகூக்கிடம் கூறினார்.

பாபிலோன் நாட்டைப் பற்றியோ அங்குள்ள சிங்கக் குகை பற்றியோ ஆபகூக்குக்கு எதுவும் தெரியாது. தவிர அவர் வசித்த இடத்துக்கு வெகு தொலைவுக்கு அப்பால் அந்நாடு இருந்தது. தனது நிலையை ஆண்டவரின் தூதரிடம் ஆபகூக்கு எடுத்துரைத்தார். ஆண்டவரின் தூதர் ஆபகூக்கை தலையில் பிடித்த வண்ணம் மேலெழுந்து நொடிப்பொழுதில் தானியேலிருந்த இடத்தில் கொண்டு போய்விட்டார்.

ஆண்டவர் தன் பொருட்டு இத்துணை கருணை கொண்டதையிட்டு நன்றிப் பெருக்குடன் தானியேல் ஆண்டவரைத் துதித்தார். ஆபகூக்கு, தானியேல் சிங்கக் குகைக்குள் எந்தவிதமான தீங்கும் ஏற்படாமல் இருப்பதைக் கண்டார். சிங்கங்கள் பூனைக் குட்டிகளைப் போல் தானியேலைச் சுற்றிச் சுற்றி வந்தன. தானியேல் உணவருந்தியதும் அபகூக்கு விடைபெற்றார். ஆண்டவரின் தூதர் அவரைத் தூக்கிக் கொண்டு போய் அவருடைய இருப்பிடத்தில் விட்டார்.

ஏழாம் நாட்காலை பொழுது புலர்ந்ததும் மன்னர் சோகமே உருவாகச் சிங்கக் குகையை வந்தடைந்தார். தானியேல் அங்கிருக்கமாட்டார்; அவரை சிங்கங்கள் இரையாக்கிவிட்டிருக்கும் என்ற எண்ணத்துடனே மன்னர் அங்கு வந்திருந்தார். குகையின் வாயிற்புறத்தை அடைத்திருந்த பெரும் பாறையைச் சிறிதளவு நகர்த்துமாறு ஏவலாளர்களிடம் மன்னர் கூறினார். அப்போது ஏற்படுத்தப்பட்ட நீக்கலினூடாக மன்னர் குகைக்குள் பார்த்தார்.

தானியேல் குகையினுள்ளே சிங்கங்களுடன் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டார். உணர்ச்சி மேலிட்ட நிலையில் "தானியேல்! நீங்கள் நம்பிக்கையுடன் துதிக்கும் ஆண்டவர் உங்களைக் காப்பாற்றிவிட்டார். ஆகவே, இஸ்ரயேலரின் கடவுளே உண்மையானவர் என்பதை உணர்ந்து கொண்டேன்!" இவ்வாறு கூறியவாறு

இராஜகுமாரன்

தானியேலை வெளியே கொண்டு வருமாறு ஏவலாளர்களுக்கு மன்னர் கட்டளையிட்டார்.

தானியேல், குகையினுள் தள்ளப்படும் போது இருந்ததைவிட பன்மடங்கு பொலிவுடனும் தேஜசுடனும் காணப்பட்டார்.

தானியேல்மீது பழி சுமத்தியவர்களை பிடித்துவந்து சிங்கக் குகைக்குள் வீசுமாறு பணித்தார் மன்னர். அவர்களை உடனடியாகவே சிங்கங்கள் இரையாக்கிக் கொண்டன.

## சூசன்னா

இச்சம்பவம் நடைபெறுவதற்கு முன்னதாக, சூசன்னா என்ற உத்தமி ஒருவருக்கு நியாயம் கிடைக்கும்படி தானியேல் தீர்ப்பு வழங்கியுள்ளார்.

பாபிலோனில் யோவாக்கிம் என்றொரு தனவந்தர் வாழ்ந்துவந்தார். அவருடைய மனைவி சூசன்னா பேரழகி. அவர் மீது இரு முதியவர்கள் ஆசை வைத்தனர். இவர்கள் இருவரும், மக்களின் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் தகுதி வாய்ந்தவர்களாக விருந்தனர்.

நல்லொழுக்க முள்ளவளான சூசன்னா, தங்களுடைய இச்சைக்கு இடம் தர மறுத்தமையினால், அவள் மீது அபாண்டமான பொய்க் குற்றம் சுமத்திய முதியவர்கள் இருவரும் சூசன்னாவுக்கு, மரண தண்டனை விதித்தனர். சூசன்னா ஆண்டவரைத் துதித்து தன்மீது சுமத்தப்பட்ட பழியை அகற்றுமாறு வேண்டிக் கொண்டாள்.

ஆண்டவரின் அருளினால் தூண்டப்பட்ட தானியேல், சூசன்னாவின் உதவிக்கு ஏவப்பட்டார். பொய்க்குற்றம் சுமத்திய இரு முதியவர்களையும் தனித்தனியாக - மக்கள் முன் நிறுத்தி தானியேல் விசாரணை நடத்தி னார். இருவரும் ஒருவருக்கொருவர் முரண் பட்ட கருத்துக்களை-மக்கள் முன்னிலை யிலேயே கூறினர். சூசன்னா குற்றமற்றவள் என்பதனை தானியேல் நிரூபித்தார்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை 53 விடை:** மேதிய இனத்தைச் சேர்ந்த மன்னர் தாரியூ

**பரிசு பெறுவோர்:**

1. பி.ஜீவமேரி, சிறிகந்தூர, மத்துகம.
2. அ.யோசப் யேசுதாசன், சந்தை வீதி, மூதூர்-03.
3. ஏ.எம்.சாந்தினி, 432 அன்புவழிபுரம், திருகோணமலை.
4. டீ.விஜயகுமார், 05, கெமுனு மாவத்தை, நுவரெலியா.
5. எல்.பகிதரன், 187, பஸார் வீதி, வவுனியா.

**திருமறை 55 வினா:-** தானியேலுக்கு உணவு கொடுத்தவர் யார்?

ஏப். 10க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 55– தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**




# ரமறத் தமிழன் மணியண்ணையுடன் ஒரு சந்திப்பு

**கா.பூ.க:** என்ன, மணியண்ணை குஷியாக இருக்கிறியள்?

**ம.அ:** சுவீகரிப்பை நிறுத்துமாறு கூறிப்போட்டார் அம்மா! அதுதான் பேப்பர்காரருக்கு ஃபோன் பண்ணி ரெல் பண்ணிக் கொண்டிருக்கிறேன்.

**கா.பூ.க:** எப்பண்ணே, அம்மையாரின் பத்திரிகைத் தொடர்பாளராக பொறுப்பு ஏற்றனீங்கள்?



**ம.அ:** நாய் வேஷம் போட்டால் குரைத்துத்தானே ஆக வேண்டும். அரசியல்வாதி யென்றால் பல வேஷம் போட்டுத்தானேயாக வேண்டும்.

**கா.பூ.க:** அப்ப, இப்பென்ன, வேஷமோ போடுகிறீர்கள்?

**ம.அ:** சேச்சே, மக்களிடம் நேசம் போட்டுக் கொண்டிருக்கிறேன்!

**கா.பூ.க:** அடுத்த தேர்தலுக்கு கோஷம் போட தயாராகிறீர்கள் என்று சொல்லுங்கள்.

**ம.அ:** மக்களுக்கு தவறான சிந்தனைகளைக் கொடுக்க வேண்டாம்.

**கா.பூ.க:** சரி, காணி சுவீகரிப்பை நிறுத்துவதாக ஜனாதிபதி தன் வாயால் கூறவில்லையே?

**ம.அ:** யார் வாயால் கூறினால் என்ன? நாம் என்ன காதாலோ கேட்கப்போகிறோம். பத்திரிகையில் கண்ணால்தானே பார்க்கப் போகிறோம். அம்மையார் கூறியதாக அமைச்சர் கூறியுள்ளார்.

**கா.பூ.க:** ஆனால், தமிழ் மக்கள் தொடர்பில்லாத பிரச்சனைகளில் மட்டும் அம்மையாரே நேரடியாக கருத்துக்கள் கூறுகிறாரே?

**ம.அ:** யார் கூறினால் என்ன, பத்திரிகைகளில் அந்தச் செய்தி வந்ததே போதுமய்யா!

**கா.பூ.க:** எதிர்காலத்தில் நடக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது?

**ம.அ:** யோவ்! நம் காலத்தில் நடப்பதே நமக்குத் தெரியவில்லை! எதிர் காலத்தில் நடப்பதைப் பற்றிக் கேட்டு ஏனய்யா கொலை பண்ணுகிறீர்?

**கா.பூ.க:** போராட்டத்தை ஆரம்பிப்பது முக்கியமல்ல, அதனை எப்படி முன்னெடுப்பது என்பது தானே முக்கியம். உங்களால் ஆரம்பிக்கப்படும் போராட்டங்கள் இறுதியில் அரசின் காலடியில் சென்றுதானே முடிவடைகின்றன? என்ன காரணம்?

**ம.அ:** (முறைத்தபடி) எங்கள் அர்ப்பணிப்பு உணர்வுதான் காரணம்! தமிழ் இலக்கியங்களில் பாத காணிக்கை என்றொரு பண்பாடு இருந்ததை நீர் அறியவில்லையா? உமது தலையோடு நீர் திரும்பிச் செல்லும் உத்தேசம் இல்லையா? யாரடா அங்கே? கத்தியை எடுத்துவா!

**கா.பூ.க:** ஏனய்யா? துப்பாக்கி எங்கே?

**ம.அ:** துப்பாக்கி கலாசாரம் எனக்கு பிடிக்காது. அதுதான் கத்தி, வாள், ஈட்டி, வேல். மரத்தமிழர் வீரம் இன்னமும் மடிந்து விடவில்லை.. ஹாஹாஹா...

(கந்தசாமி தலைதெறிக்க ஓடுகிறார்)

# ஜனநாயகப் பாதையில்




காதிலை பூ கந்தசாமி



அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகே இரகசியம் அதை
எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன
கிளை:
105, கால் வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

336337


# விரல்

↓ இது சாதாரணமான கட்டடங்கள் கட்டுவ தற்குப் பயன்படும் கல்தான். இதன் எடை 4 1/2 கிலோ (10 இறாத்தல்) மட்டுமே.



இக் கல்லைத் தனது வலது கைவிரல் நுனியில் இடுக்கிய வண்ணம், இடை விடாமல் 118.1 கிலோ மீட்டர் (73மைல் 45 யார்) தூரத்தைக் கடந்து உலக சாதனை நிலை நாட்டியிருக்கிறார் ஒருவர்.

அமெரிக்காவின் ரோட் ஐலண்ட் பரிங் டன் நகரைச் சேர்ந்த ஜெம்ஸ் போர்கென் என்பவர், 1996 மே 13ம் 14ம் திகதிகளில் ஃபுளொரிடா மாநிலத்தைச் சேர்ந்த ஜுபிட்டரைச் சுற்றிச் சுற்றி நடந்த வண்ணம் இச் சாதனையினைப் புரிந் திருக்கிறார்.

"சாதாரண கல்லை-அதுவும் நாலரை கிலோ எடையுள்ள கல்லைத் தூக்கிக்கொண்டு நடப்பது ஒரு பெரிய சாதனையா?" என்று நம்மில் பலர் கேலியாகக் கருதக்கூடும். எங்கே.. ஓர் கால் கிலோ எடையுள்ள ஒரு புத்தகத்தை கைவிரல் முனையால் பிடித்த வண்ணம்- பிடித்த பிடி மாறாமல்- கை மாற்றாமல் ஆக இரு கிலோ மீட்டர் தூரம் வரை நடந்து பாருங்கள்! அப்போது தெரியும் அந்தப் புத்தகத்தின் பளு படுத்தும் பாட்டை!

மற்றொரு தகவல்-இலண்டன் மாநகரிலுள்ள வால்த் தம்ஸ்ரோ என்ற இடத்தைச் சேர்ந்த ரெஜி கோல் என்பவர் தன் தலை மீது ஒரு பால் புட்டியை வைத்துக்கொண்டு (கைகளால் பிடிக்காமல்) இலண்டன் நகரைச் சுற்றி கால் நடையாக தொடர்ந்து 115. 87 கிலோ மீட்டர் (72 மைல்) நடந்து உலக சாதனை புரிந்திருக்கிறார். 1996 ஜூன் 4ம் 5ம் திகதிகளில் 24 மணி நேரம் இவர் நடந்திருக்கிறார். □




ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேழை

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

323657


# நமக்குள்



# வலு

↘ அடுத்த ஒலிம்பிக்ஸ் போட்டிகள் இரண்டாயிரமாம் ஆண்டில் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் இடம்பெறவிருக்கிறது. இதில் முதல் முறையாக பெண்களுக்கான பளு தூக்கும் போட்டியும் இடம்பெறவிருக்கிறது. இதற்காகவே பளுதூக்கும் வீராங்கனைகள் உலகின் பல நாடுகளிலும் ஆயத்தங்களைச் செய்ய ஆரம்பித்து விட்டனர்.

சீனாவைச் சேர்ந்த சென் யாங்குவங் எனும் இப் பெண்மணி அண்மையில் தாய்வாந்தில் சாங்-மாய் எனும் இடத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் ஓர் உலக சாதனையை நிலை நாட்டியுள்ளார். 131.5 கிலோ-(290 இறாத்தல்) எடையைத் தூக்கி வியப்பில் ஆழ்த்தியிருக்கிறார்.

உலக சாம்பியன் போட்டிகளில் பெண்களும் பங்குபற்றும் பளுவகையான போட்டிகள் 1987ம் ஆண்டு முதல் இடம் பெற்றாலும் பெண்களுக்கான பளு தூக்கும் போட்டி சிட்னி ஒலிம்பிக்கில்தான் இடம்பெறவிருக்கிறது.

இதுவரை 74 பளுதூக்கும் பெண்கள்- தாங்களும் பங்கேற்கப் போவதாகப் பெயர் பதிவு செய்துள்ளனர். ஆண்கள் மொத்தம் 176 பளுதூக்கும் வீரர்கள் பங்குபற்றவிருக்கின்றனர். ○




↗ பெண்களால் பாரம் தூக்க முடியாது என்று இளக்காரமாக நினைத்தே பளு தூக்கும் போட்டியில் பெண்களைச் சேர்க்காதிருந்தனர். தம்மாலும் முடியும் என்று பெண்கள் நிரூபித்ததால் அடுத்த ஒலிம்பிக்கில் கதவு திறந்துள்ளது. □

↑ அழகான வளையல்களோ இவை? என்று அவாவுற வேண்டாம். எமது உடலின் வெளிப்புறத்தை- கைகளை-அலங்கரிக்கும் வளையல்கள் அல்ல, நமது உடம்பினுள் சிறுகுடலை ஆக்கிரமித்து நமது அன்றாட உணவின் போஷாக்கைப் பங்கு போடும் ஒட்டுண்ணிகள் இவை.

உலகில் 25 சதவீதமானவர்களின் சிறு குடல்களில் இவை வாசம் செய்கின்றன என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வேகமாக இனப்பெருக்கம் செய்யும் இப் புழுக்கள் சிறுகுடலை விட்டு வேறிடங்களுக்கு இடம் பெயரத் தொடங்கு மானால் ஆபத்துத் தொடரும் என்பது நிச்சயம். நுரையீரலைச் சென்றடையும் இப்புழுக்கள் இரத்தப் பெருக்குடன் கூடிய சுயவாதம் எனும் நோயை உண்டு பண்ணிவிடும்.

சாதாரணமாக இப் புழு சுமார் 45.7 செண்டி மீட்டர் (18 அங்குல நீளம் வரை வளரும்) படத்தில் காணப்படும் இத்தனை புழுக்களும் ஒரே ஒரு மனிதரின் சிறு குடலிலிருந்து எடுக்கப்பட்டவை. என்ன, குமட்டல் வருகிறதா? நமக்குள்ளே இப்படி எத்தனையோ சமாச்சாரங்கள் இருக்கின்றன. ○

# பெருங்குலை



இந்த வாழை யைப் பார்க்கும் போது.. வடக்கில் படை நடவடிக்கையால் எத்தனை வாழைத்தோட்ட காணிகள் வரண்டுபோய் கிடக்கின்றன என்பதும் நினைவுக்கு வருகிறது. வலிகாமத்திலும் வன்னியிலும் தமிழ் மக்களை மீள குடியேற அரசு மறுக்கும் காணிகள் வள பூமிகளே!

← பார்த்ததுமே பிரமிப்பாக இருக்கிறதல்லவா. அதற்காக வாயைப் பிளக்காதீர்கள். வாழைப்பழம் என்றாலே ருசி பார்க்க வாய் தானாகப் பிளக்கும்தான். இந்த வாழைக்குலையின் நீளம் 14 அடி. வெளிநாடொன்றில் இந்த அதிசய வாழைக்குலை பிரசவமாகியுள்ளது. இப் புகைப்படத்தை எமக்கு அனுப்பிய வாசகர், நாடு எது என்பதை குறிப்பிட மறந்துவிட்டார். நம் வீடுகளிலும் இப்படி பெருங் குலை போட்டால் நன்றாக இருக்குமே என்று வாழைவளர்ப்போர் பெருமூச்சு விட்டுக் கொள்வது கேட்கிறது.

# விண்ணில்



↑ சிறுபிள்ளைகள் வைத்து விளையாடும் கோலிக் குண்டு போல இங்கு காட்சி தருவது உண்மையில் குண்டுமல்ல, பந்து மல்ல. இந்தக்கடும் சூடான காலங்களில் நம்மை வாட்டும் கதிரவனின் உருவம்தான்.

எப்போதும் மிகக் கூடுதலான வெப்பத்தைக் கக்கிய வண்ணம் இருக்கும் சூரியனில் காலத்துக்காலம் சில வாயுக்கள் வெளியேற்றப்படும். இதனை சூரியப் புயல் என்று கூறுவார்கள். கதிரவனின் கரும் புள்ளிகள் என்றும் கூறப்படும்.

1947ம் ஆண்டில் 18 பில்லியன் கன கிலோ மீட்டர் (7 பில்லியன் கன மைல்) விஸ்தீரணம் உள்ள சூரியப் புயல் எழுந்த போது ஆய்வாளர்கள் நூதனமான முறையில் இப்படத்தைப் பிடித்துள்ளனர். இது உலக சாதனையாக கின்னஸில் பதியப் பட்டுள்ளது.

விண்வெளி பற்றி மேலும் தகவல்கள்: அண்டத்திலுள்ள நவ கோள்களில் வியாழக் கிரகமே மிகப்பெரியது என வான சாஸ்திரிகள் கூறுகின்றனர். இதனுடைய சுற்றளவு-142,984 கிலோமீட்டர் (88,844 மைல்). ஆனால் இக்கோள் தன்னைத் தானே சுற்று வதற்கு 9 மணி 55 நிமிடம் 29.69 நொடிகள் பிடிக்குமாம்.

வியாழக்கிரகத்தைச் சுற்றி (பூமியை சந்திரன் சுற்றுவது போல) பல சந்திரன்கள் வலம் வருகின்றனவாம். இவற்றில் மூன்றாவது பெரிய சந்திரனை 'இயோ' என்று அழைக்கிறார்கள். இதில் எரிமலைகள் மிக அதிகமாக காணப்படுகின்றன. இவற்றிலிருந்து கந்தகமும் கொதித்து வெளியேற்றப்படுகிறதாம். ஆய்வாளர்களின் தொலை நோக்காடிகளினூடாக இந்தச் சந்திரனைப் பார்த்தால், மிகவும் அழகாகக் காட்சி அளிப்பதாகக் கூறுகிறார்கள். □


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி அபிராமி கெங்காதரன் 26.03.1999

இணுவில் கிழக்கைச் சேர்ந்த கெங்காதரன்-சிவநந்தினி தம்பதியினரின் செல்வப் புதல்வி அபிராமி தனது முதலாவது பிறந்த நாளை சுவிஸ் சூரிச் மாநிலத்திலுள்ள தமது இல்லத்தில் 26.03.1999 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, அக்கா அபிநயா, அப்பம்மா, அப்பப்பா, அம்மம்மா, அன்ரி, பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், மாமாமார், அத்தைமார், மச்சாண்மார், மச்சாள்மார், சுவிஸ் விக்னேஸ்வரன் பெரியப்பா குடும்பத்தினர், சுவிஸ் காசி சித்தப்பா-விஜிதா அன்ரி, ஜேர்மனி சிவானந்தன் மாமா, சுவிஸ் அகிலன் சித்தப்பா, ரஞ்சா அன்ரி, சுவிஸ் சிவநாதன் மாமா மற்றும் சுற்றம், உறவினர், நண்பர்கள் அனைவரும் அபிராமிக்குட்டியை இணுவில் சிவகாமி அம்பாள் மாணிக்க வைரவர் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நீடுழி வாழ்க வென வாழ்த்துகின்றனர்.

தகவல்: A. KENKATHARAN VETTBERG. STR-31 8045-ZURICH, Switzerland, T.P. 01-4658280